
# தென்னவள்



தென்மராட்சிக் கல்வி வலயம்

சாவகச்சேரி

2015

# தென்னவள்

(2014 ஆடித் திங்கள் முழுநிலாநாள் கலைவிழாச் சிறப்பு மலர்)

மலராசிரியர்

**திரு. தி. அபராஜிதன்**

**தென்மராட்சிக் கல்வி வலயம்**

சாவகச்சேரி

2015

# தென்னவள் வருகைக் குழு

*தலைவர்*

**திரு. சு. கிருஷ்ணகுமார்**

வலயக் கல்விப் பணிப்பாளர்

*ஆலோசனை*

**திரு. க. க. ஈஸ்வரன்**

தொழில்வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி

ஆசிரியர் மத்திய நிலையம் – வரணி

**திரு. வே. க. சந்திரகுமார்**

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்

(வழிகாட்டல் ஆலோசனை)

*இதழாசிரியர்*

**திரு. தி. அபராஜிதன்**

(ஆசிரியர்)

யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்

*அட்டைப்பட வடிவமைப்பு*

திரு. ஆ. வைகுந்தன்

(ஆசிரியர்)

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின்
அனுசரணையுடன்
தென்மராட்சிக் கல்வி வலயம்
நடத்தும்

# முழுநிலா நாள் கலைவிழா

காலம் : 2014.08.10 - ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மு.ப 9.00 மணி

இடம் : கலாசார மண்டபம், சாவகச்சேரி

தலைவர்

**திரு. சு. கிருஷ்ணகுமார்**

(வலயக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்)

பிரதம விருந்தினர்

**கௌரவ. த. குருகுலராஜா**

(கல்வி பண்பாட்டலுவலகள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்

**உயர் திரு. சி. சத்தியசீலன்**

(செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்)



பண்பாட்டுக கோல உடையுடன் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் - தென்மராட்சிக் கல்வி வலயசமூகம்

# தென்னவள் வருகைக் குழுவின் வார்த்தைகளாய்

தென்மராட்சிக் கல்வி வலய சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட 2014ஆம் ஆண்டின் ஆடித்திங்கள் முழுநிலா நன்னாளின் கலைவிழா நிகழ்ச்சியையொட்டி அதனது கலை ஆற்றுகை அம்சங்களையும் தமிழர்களின் மரபுக் கலை வடிவங்களின் சிறப்புகளையும் உள்ளடக்கி எழுத்துருவிலான படைப்பாகத் தென்னவள் தனது இரண்டாவது மலராக மலர்ந்துள்ளாள். அருகிச் செல்லும் கலைப் பரிமாணங்களைக் கண்ணுக்கும் செவிக்கும் இதமாக வெளிப்படுத்தும் களமாக முழுநிலா கலைவிழா நிகழ்ச்சி அமைந்தாலும் அதனை அறிவிற்கு விருந்தாய் எழுத்துருவில் அடுத்த தலைமுறைக்குப் பரிமாற்றம் செய்யவேண்டும் என்ற பெருமனதோடு தென்னவள் மிடுக்கோடு மீண்டும் மிளிர்ந்துள்ளாள். அம்மிளிர்விற்குக் காரணமாக இருந்த ஆக்க கர்த்தாக்களை நன்றி உணர்வோடு தென்னவள் வெளியீட்டுக் குழு தலைசாய்த்து வணங்குகின்றது.

"மாற்றம் ஒன்று தான் மாறாது" எனும் சார்ள்ஸ் டார்வினின் தத்துவத்தைத் தனதாக்கிப் புதிதுபுதிதாக முன்னோக்கிய பாய்ச்சலுக்கான வழிகாட்டலை வழங்கும் வலயக் கல்விப் பணிப்பாளரையும், உத்தியோகத்தர்களையும் வாழ்த்துகின்ற அதேவேளை கனதியான ஆக்கங்களையும் கவர்ச்சியான புகைப்படங்களையும் சுமந்த வண்ணம் நிகழ்ச்சியின் வெற்றிக்கு உரமூட்டிய கொடையாளர்களைக் கௌரவிக்கு முகமாக அவர்தம் நிறுவன விளம்பரங்களையும் சுமந்துவரும் தென்னவள் தேசமெங்கும் புகழ்பரப்பிப் புதுமணம் கமழ உழைத்த அனைத்து நல் உள்ளங்களையும் நன்றி உணர்வோடு பற்றிக் கொள்கின்றோம்.

**தென்னவள் வருகைக் குழு**

# தென்னவள் II வளர்கவே



தென்னவள் என்ற நாமத்துடன் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் முதலாவது மலர் இவ்வலயத்தினரால் 2013ஆம் ஆண்டு மார்கழி மாத முழுநிலாக் கலைவிழாவின் பின்னர் சிறப்பாக வெளியிடப்பட்டது. தென்னவளின் இரண்டாவது மலர் 2014.08.10 அன்றைய தினம் தென்மராட்சிக் கல்வி வலயத்தினரால் நடத்தப்பட்ட முழுநிலா விழாவின் பின்னர் மலராக வெளிவர உள்ளமையை இட்டு மகிழ்வடைகின்றேன்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் முழுநிலாக் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கச் சந்தர்ப்பத்தை வழங்கியமையை இட்டுப் பூரிப்படைகின்றேன். எமது பண்பாட்டையும், கலைகளையும் பரிணமிக்கும் வகையில் ஊர்திகள் அமைக்கப்பெற்று உயிரோட்டமுள்ள கலைஞர்களுடன் மேள, தாள இசையுடனும் வர்ணனைகளுடனும் சாவகச்சேரி நகர் ஊடாக விருந்தினர்கள் அழைக்கப்பட்டுச் சென்றமை என்றென்றும் எல்லோராலும் பேசப்படும் நிகழ்ச்சியாக இருக்கின்றது.

ஈழத்துக்கலைகள் எங்கே? பண்பாடு எங்கே? என்று ஏங்கித் தவிக்கும் இவ்வேளையில் இவ்வாறான எளிய பண்பாட்டுக்கோலங்கள் எமது குழந்தைகளுடைய உணர்வுகளைத் தூண்டுவதற்கு ஏதுவாக அமையும்.

ஆண்டுதோறும் நடைபெறும் இப் பௌர்ணமி விழா இவ்வாறாகத் தொடர வேண்டுமென விரும்புகின்றேன். அத்துடன் "தென்னவள்" என்ற மலர் மூலம் இழந்து போன எமது ஈழத்துக்கலைகள் புத்துயிர் பெறுவதற்கு ஆக்கபூர்வமான எழுத்துகளை கொண்ட மலராக அமைய வேண்டும் என ஆசிக்கின்றேன்.

**த. குருகுலராசா**
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

# மிளிர்ச்சியுடன் மீண்டும் மலர்க

# தென்னவளே.....



வட மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயம் கடந்த ஆடித் திங்கள் முழுநிலா நாளில் நடத்திய கலை விழாவின் பதிவுகளைத் தாங்கி வரும் "தென்னவள்" என்ற மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

இம்முறையும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியங்களும், கலை மரபுகளும் சங்கமித்து நின்றமை சிறப்பம்ச மாகும். முதலில் தமிழர் பாரம்பரியங்களைச் சித்திரிக்கும் ஊர்தி பவனிகளும், இன்னியம், கும்மி, காவடி, கோலாட்டம் முதலான வரவேற்பு மரியாதைகளுடன் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டு நிகழ்ச்சிகள் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் மிகவும் நேர்த்தியான முறையில் நடைபெற்றன. பல்துறை சார்ந்த கலைநிகழ்ச்சிகள் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் அரங்கேற்றப் பட்டன. அதில் சிறப்பம்சம் என்னவென்றால் ஆசிரியர்கள் முழு அர்ப்பணிப்புடன் நின்று மாணவர்களை நெறிப்படுத்தி, நிகழ்ச்சிகள் செவ்வை பார்க்கப்பட்டு ஆற்றுகைக்கு விடப் பட்டிருந்தமை. இவ்வாறே ஆசிரியர்கள் வழங்கிய நிகழ்ச்சிகளும் அமைந்திருந்தன. நடைபெற்ற நிகழ்ச்சிகள் கண்ணுக்கும், செவிக்கும் விருந்தாக இருந்தன.

அந்த வகையிலே முழுநிலாக் கலைவிழாவின் தடங்களையும் அதனைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் அமைந்த ஆக்கங்களையும் தாங்கி இம்மலர் வெளிவருகின்றமை மனநிறைவைத் தருகின்றது. இவை இவ்வாறு நூல் வடிவாகி ஆவணமாக எல்லாப் பாடசாலைகளுக்கும் வழங்கப்படும்போது மாணவர்களிடத்தில் இக் கலை உணர்வுகள், ஊக்கங்கள் இன்னும் வீச்சுப்பெறும் என நம்புகின்றேன். இவற்றின் ஊடாக அடுத்த சந்ததிக்கும் இவற்றை ஊடுகடத்த முடிகின்றது.

உண்மையில் வலயக் கல்விப்பணிப்பாளரதும் அவர்தம் பணிக்குழாத்தினதும் திட்ட மிடலும் ஒருங்கிணைப்பும் முழுமையான தியாகத்துடனுந்தான் இந்த நிகழ்ச்சி முடிந்திருக் கின்றது. இந்தப் பெருங் கைங்கரியத்தை மனமுவந்து பாராட்டுகின்றேன். இந்த மலர் ஒரு காத்திரமான பொக்கிஷமாக மிளிர வேண்டுமென வாழ்த்தி, சிறப்புற வடிவமைத்து வெளியிட்ட மலர்க் குழுவிற்கும் ஆக்க கர்த்தாக்களிற்கும் வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன், இம்முயற்சி காத்திரமான முறையில் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டி நிற்கின்றேன். இவ் வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. சு. கிருஷ்ணகுமார் அவர்களிற்கும் ஏனைய அதிகாரி களிற்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலம் அமைய எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**

செயலாளர் – கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும்

இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.

# தென்னவளே! தேமதுரத் தமிழோசை தேசமெங்கும் மணம் வீச வாழ்த்துகிறேன்



வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய தென்மராட்சிக் கல்வி வலயம் கடந்த 2013ஆம் ஆண்டு எடுத்த முழு நிலாக் கலைவிழா வடமாகாண மக்கள் மனங்களில் ஏற்படுத்திய புத்துணர்வால் தென்னவள் ஆவணமாக உருவெடுத்தாள். அந்த இன்ப ஊற்றின் மறு பிரசவமாக இவ்வாண்டும் அமைகிறது. அதனையும் மக்கள் கைகளில் ஆவணமாகத் திகழ வைக்கத் தென்மராட்சிக் கல்வி வலயம் எடுக்கும் காலத்தால் அழியா, மக்கள் மனங்களில் நிலை கொள்ளக் கூடிய வெளியீடாக மலர இருக்கும் இரண்டாவது தென்னவளுக்கு எனது வாழ்த்துகளை வழங்குவதில் மனநிறை வடைகின்றேன்.

திட்டமிடல், அதனை நிறைவேற்றுதல் புதுமைகளைப் புகுத்துதல், மக்கள் மனங்களை வெல்லுதல் என்பனவே தனது தாரக மந்திரமாகச் செயற்படும் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. கிருஸ்ணகுமாருக்குத் தென்னவள் என்றும் உறுதுணையாகவே இருப்பாள். சொன்னதைச் செய்து செய்யக் கூடிய வற்றைச் சொல்லி தென்மராட்சி வலயத்தை வளர்க்கும் பணிப்பாளரின் மனத்தில் உதித்தவள் தென்னவள் என்றால் அது மிகையாகாது.

முழுநிலா நிகழ்ச்சிகளைத் தரவுகளாக்கித் தரவுகளைப் பதிவுகளாக்கி காலத்தால் அழியாத ஆவணங்களாக வெளிக் கொணர மலர்க்குழு எடுத்த, எடுக்கும் முயற்சிகள் பயனுறுதி மிக்கவை.

ஒரு பிரதேச மக்களின் பாரம்பரிய கலைகளை வெளிக்கொணர்வது மட்டுமல்ல ஒரு காலத்து மக்கள் எத்தகைய கலை நுட்பங்களைக் கொண்டிருந்தனர். என்பதைப் பிற்காலச் சந்ததியினர் அறியவும் அவற்றைப் பின் பற்றவும் அவை ஆவணங்களாக, நூல்களாக மாற்றம் பெறுவது மிக அவசியமாகும். அத்தகைய ஒரு அரும் பணியைத் தென்னவள் தாங்கி வருவாள் என்பது வெள்ளிடை மலையாகும். அதற்காக அல்லும் பகலும் உடலாலும் உள்ளத்தாலும் உழைக்கும் மலர்க் குழுவினரைப் பாராட்டாமல் விடுவோமானால் நாம் நன்றியற்றவராகிவிடுவோம்.

முத்தமிழின் முழுவடிவம் பெற்ற கலை நிகழ்ச்சிகள், ஊர்திப் பவனிகள், இசையின் பல்வேறு பரிமாணங்கள், நடனத்தின் பல்வேறு அசைவுகள் புராண இதிகாசங்களின் அறிவியல் உண்மைகள் யாவையும் முழுநிலாக் கலைவிழா வெளிக்கொணர்ந்தது. முழு நிலாக்கலைவிழாவின் பல்வகை வெளிப்பாடுகளை எழுத்து வடிவமாக வெளிக்கொண ரத் தென்னவள் தயாராகும் சந்தர்ப்பத்தில் அப்பணியில் அயராது உழைக்கும் கல்விப் பணிப்பாளர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதில் மன நிறைவடை கிறேன்.

**ப. அரியரத்தினம்**
ஓய்வு நிலை மேலதிக மாகாணக் கல்விப்
பணிப்பாளரும் கௌரவ வடமாகாண சபை உறுப்பினரும்

# செம்மொழி வளர்க்கும் தென்னவள்



உலகின் தொன்மையான மொழிகளில் இன்றுவரை உயிர்ப்பாக இருப்பது தமிழ்மொழி மட்டுமே. இதனால் தான் அது செம்மொழி என்ற மேன்மையினைப் பெற்றது. தமிழ் என்ற அடையாளம் இசை மொழியாக, இயல்பான உச்சரிப்பாக, வரிவடிவ எழுத்தாக வணங்கும் தாயாக என எம் உயிரினும் மேலான உணர்வை தரும் ஒன்றாக விளங்குவதன் காரணமாக நாம் தமிழர் என்ற மேலான எண்ணத்தைப் பெற்றோம். தமிழர் தம் தமிழ் மொழியை, தமிழ்க் கலாசாரத்தை, தமிழர் வாழ்வுரிமையைப் பெற உயிரைக் கொடுத்துப் போராடிய வரலாறுங்கூட தமிழ் மொழியின் தொன்மையினையும் தமிழர் தம் மொழிப்பிணைப்பையும் பறைசாற்றுகின்றது.

இயல் மொழியாக, இசைமொழியாக, நாடக இலக்கியமொழியாக மட்டுமன்றி இன்று நவீன காலத்துக்கு ஏற்ற அறிவியல் மொழியாகவும் தமிழ் விளங்குவது அதன் உயிர்ப்பை எடுத்து இயம்புவதாக உள்ளது. தமிழ்மொழி சமய மறுமலர்ச்சிக்கு உதவிய மொழியாகவும் உள்ளது. சைவமும் தமிழும் இணைந்ததாக, இஸ்லாம் மதமும் தமிழும் இணைந்ததாக. கிறிஸ்தவ மதமும் தமிழும் இசைந்ததாக இலக்கிய வரலாற்றிலே தனித்துவமாக அடையாளத்தைப், பல இலக்கியங்களை தமிழ் வரலாறு எமக்கு வழங்கியுள்ளது. இவற்றை நாம் சுவைத்து இன்புறலாம்.

"கலைவளர நிலைவளரும்" என்ற கருத்துக்கு இயைவாக தமிழ் கலை மொழியாகவும் உள்ளது. இசை, நடனம், நாடகம், இலக்கியம் என கலைகளுக்கு உரிய மொழியாக இருப்பதால் அதனை நாம் ஆண்டு அனுபவிக்க முடிகின்றது. இத்தகைய கலை மொழியின் அடையாளமாகவே "தென்னவள்" என்ற இந்த முத்தமிழ், பௌர்ணமி தின மலர் வெளிவருகின்றது. யாழ்குடாநாட்டின் தென்னகமாக விளங்கும் தென்மராட்சி வலயம் தமிழ் அன்னையைப் போற்றி தமிழ் வளர்ப்பதில் என்றும் சளைத்ததல்ல என "தென்னவள்" கொண்டு நிரூபித்துள்ளது.

தமிழின் புகழ் தென்னவள் ஊடாகவும் சிறப்படைய என்றும் எனது வாழ்த்துகள்.

**முத்து இராதாகிருஷ்ணன்**

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (பொது நிர்வாகம்)

மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.

# புதுப்பொலிவுடன் மலர்க தென்னவளே



வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிக் கல்வி வலயம் இவ் வருடம் நடத்தி முடித்த ஆடித்திங்கள் முழு நிலா நிகழ்ச்சியின் மனப்பதிவுகளை எழுத்துருவில் ஆவணமாக்கி வெளிவரும் தென்னவளின் இரண்டாவது பிரசவிப்பிற்கு வாழ்த்துரைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

மனித வாழ்வின் மன நிறைவை ஏற்படுத்தும் ஒரு சுட்டியாக கலைகள் அமைந்துள்ளன. இயல், இசை, நாடகம் எனும் முப்பரிமாணங்களாக விரிந்து புகழ் பரப்பும் கலைகளை நாளும் பொழுதும் நாம் கண்டுகளித்து இறும்பூது எய்துகின்ற அதேவேளை அவற்றின் இயல்பு, பண்பு, சிறப்பு என்பவற்றை ஆழ ஊடுருவி அறிந்துகொள்ளத் தலைப்படத் தவறுகின்றோம். அவ்வாறன ஒரு வரலாற்றுத் தவறை சமகாலத்தில் வாழ்ந்துவரும் நாங்கள் விட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில் அக்கலை இலக்கியங்கள் தொடர்பில் எழுத்துருவில் ஆவணமாக்கி எதிர்காலச் சந்ததி அவற்றைக் கற்று அறிந்து பயனடையக்கூடியதாக அது தொடர்பான அக்கறை கொண்ட கூட்டுமுயற்சிச் சிந்தனைக்குழாமின் ஆதரவோடு தென்னவள் எனும் பிரதேசத்தின் பெயரைத் தாங்கி வெளிவரும் மேற்குறித்த மலர் காத்திரமான பங்கை கலைத் துறையினருக்கு வழங்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இவ்வாறான படைப்பிலக்கிய முயற்சிக்குப் படிக்கற்களாய் இருந்த படைப்பாளிகளையும் அவ்வாறன படைப்பின் நூலுருவாக்கத்திற்கு உதவிய கொடையாளருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எனது தலைமைத்துவத்தின் கீழ் சிறப்பாகச் செயற்பட்ட மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் மலராசிரியருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

**சு. கிருஸ்ணகுமார்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்.

# மீண்டும் மிடுக்கோடு மலர்ந்திடுக தென்னவளே...



தென்மராட்சிக் கல்வி வலயத்தின் சமகாலத்தின் பதிவாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஒன்றாகிய தென்னவள் எனும் கலை இலக்கிய அம்சங்களின் எழுத்துருவிலான மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துரைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

வடமாகாணக் கல்வித் திணைக்கள அனுசரணையுடன் எமது கல்வி வலயத்தினால் முன்னெடுக்கப் பட்ட இவ்வருட ஆடித்திங்கள் முழுநிலா நாள் நிகழ்ச்சியின் பதிவுகளைத் தனதாக்கி இரண்டாவது வருகையாக இவ்வருடமும் தென்னவள் மலர்ந்துள்ளாள். பல்வேறு வேலைப்பழுக்கள் மத்தியிலும் எமது வலயக் கல்விப் பணிப்பாளரின் சிந்தனைக்கு உரமூட்டும் வகையில் கனதியான கட்டுரைகளையும் கவர்ச்சியான படங்களையும் தாங்கி மலரும் தென்னவளுக்கான படைப்புக்களைப் படைத்த படைப்பாளிகளைப் பாராட்டுகின்றேன். அதேவேளை காலநேரம் பாராது கருமமே கண்ணாயிருந்து மலர் வெளியீட்டுக்குக் காரணமாக இருந்த வெளியீட்டுக் குழுவினரையும் நன்றியுணர்வோடு வாழ்த்தி இம்மலர் புதுமணம் வீசி புலரும் பொழுதில் அறிவுத்தேடலுள்ள அனைவருக்கும் ஆவணமாகத்திகழ வேண்டுமென வாழ்த்துவதில் மன நிறைவடைகின்றேன்.

**திருமதி சிவத்திரை சிவநாதன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்)
தென்மராட்சிக் கல்வி வலயம்.

# தென்னவளே! தேசமெங்கும் பரவட்டும் நின் புகழ்



தென்மராட்சிக் கல்வி வலயம் வடமாகாணக் கல்வித் திணைக் களத்தின் ஆலோசனைக்கிணங்கவும் தென்மராட்சி, யாழ்ப்பாண வர்த்தகப் பெருமக்கள், மற்றும் பரோபகாரிகளின் நிதி அனுசரணை யோடும் கடந்த 2014.08.10இல் தென்மராட்சிக் கலை மன்றத்தில் நிகழ்த்திய முழுநிலாநாள் கலைவிழாவின் கலை ஆற்றுகைகள், கலைப்படைப்புகளின் விளக்கங்களையும் கட்டுரைகளையும் , புகைப் படப் பதிவுகளையும் தாங்கியதாய் வெளிவரும் தென்னவள் II க்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பூரிப்படை கின்றேன்.

கலை என்பது ஒருவனது உள்ளத்தில் பதிவாகிப் பின் வெளிப்படும் ஆற்றல்மிக்கது. அவை நுண்கலைகள், நுண்கலை சாராதவை என இருவகைப்படுவன. நுண்கலைகள் என்ற வகையில் இசை, நடனம், ஓவியம், சிற்பம் என்பன குறிப்பிடத்தக்கன. நுண்கலை சாராதவை என்றவகையில் மருத்துவம், விளையாட்டு முதலியன அமைகின்றன.

நுண்கலைகள் உள்ளத்திற்கு மிகவும் அமைதியளிப்பவை. அத்தோடு தெய்வீக ஆற்றல் மிக்கவையாகவும் திகழ்கின்றன. அத்தகைய கலை அம்சங்களின் ஆற்றுகைகளின் கலாசாரம் தமிழர் பண்பாட்டு வாழ்வியலுடன் மிகவும் பின்னிப்பிணைந்துள்ளது. அவை புதிய கலை வடிவங்களின் வருகையால் மறக்கப்பட்டு மறைந்துவிடுவது யதார்த்தமாயினும், அவற்றை மறையவிடாமல் பேணிக்காப்பது எமது தார்மீகக் கடமையாகும்.

அந்த வகையில் எமது வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனையுடன் வருடத்திற்கு ஒரு முறை தமிழ்ப்பண்பாட்டுக் கலை மரபுகளை ஆற்றுகைகளாக்கி முழுநிலா நாளில் கலைஞர்களை ஒன்று திரட்டி ஆற்றுகை செய்து பண்பாட்டைப் பேணுகின்ற கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

இவற்றுக்கும் மேலாக முழுநிலா நாள் கலை விழாவின் ஆற்றுகைகளின் பதிவுகளை நூல் வடிவில் "தென்னவள்" என்ற பெயரில் வெளியிட்டு எதிர்கால சந்ததிக்குக் கையளிக் கின்றோம். இந்நூல் ஆக்கத்தில் பங்கெடுத்த மலர்க்குழு உட்பட அனைத்துச் சான்றோர் களுக்கும் எனது வாழ்த்துகள் உரிதாகட்டும். தென்னவளின் புகழ் தேசமெங்கும் பரவட்டும்.

**கு. சிவானந்தம்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்,
சாவகச்சேரி.

# வாழவும் வளரவும் ஆசிகள்



ஓர் இனத்தினை அடையாளப்படுத்துவனவாக அந்த இனத்தின் உடைகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் இவற்றுடன் அவர்களின் கலைகளும் உள்ளடங்கும். இன்றும் தொல்பொருள் கூடங்களிலும் ஓவியக் கூடங்களிலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் கலைவடிவங்கள் யாவும் இனங்களை அல்லது நாட்டினை அடையாளப் படுத்தி நிற்பதுடன், பரவச உணர்வைத் தந்துகொண்டுமுள்ளன. நல்ல கலையானது மொழிகளையும் இனங்களையும் தாண்டி முழு மனித குலத்தையுமே உள்ளீர்க்கும் சக்தி கொண்டது. இரசிப்பவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது ஆன்மாவை இக் "கலை" என்ற கண்ணாடியில் தரிசித்தும் கொள்ளலாம்.

தென்னவள் 02 ஆனது 2014.08.10 அன்று ஆற்றுகை செய்யப்பட்ட "முழுநிலா நாள்" கலை நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இருப்பதுடன், இனிவரும் தலைமுறையினர்களுக்கான ஓர் ஆவணமாகவும் திகழும். கலைகளை ஆற்றுகை செய்தால் மட்டும் போதாது அவற்றை ஆவணப்படுத்துவதுகூட அவற்றை வளர்ப்பதற்கான வழிமுறைகளில் ஒன்றெனக் கூறவும் முடியும். காத்திரமான விமர்சனப் பதிவுகளும் பார்வைகளும் கலைவளர்ச்சிக்கான உந்து சக்திகளாக இருப்பதுடன், இப்பதிவு முயற்சியானது வாழ்ந்து வளர எனது ஆசிகளை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**கோபாலபிள்ளை கைலாசநாதன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்),
தென்மராட்சிக் கல்வி வலயம்,
சாவகச்சேரி.



# ஆடித்திங்கள் முழுநிலா நிகழ்ச்சியின் தலைமையுரையின் வரி வடிவங்கள்

**சு. கிருஷ்ணகுமார்**
வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்

இந்த அரங்கை அணி செய்யும் தமிழ்த்தாயினையும் "ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே வாருங்கள் நாமும் வடம் பிடிப்போம்" என்ற எமது மகாகவியின் வரிகளை நினைவுபடுத்து மாற் போல் இங்கே நிறைந்திருக்கும் தமிழன்னையின் பிள்ளைகளாம் உங்கள் எல்லோருக்கும் என் இனிய காலை வணக்கம்.

தென்மராட்சி வலய சமூகத்தினர் இணைந்து நடத்திக் கொண்டிருக்கும் 2014ஆம் ஆண்டுக்கான இந்த முழுநிலா நாள் கலைவிழாவுக்கு, எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த. குருகுலராசா அவர்களே,

எங்கள் அழைப்புக்கு இணங்கி சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் உயர்திரு சி. சத்தியசீலன் அவர்களே,

இந்த முழுநிலா நாள் கலைவிழாவில், எமது பிரதேச மக்கள் இணைந்து வழங்க விரும்பிய கௌரவிப்பை ஏற்கச் சம்மதித்து இங்கே வருகை தந்து எங்களைப் பெருமிதம் கொள்ள வைத்திருக்கும் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க. அருணாசலம் அவர்களே, எங்களது அழைப்பை ஏற்று, எங்களை கௌரவப்படுத்த வருகை தந்திருக்கும் எழுத்தாளர்களே, கலைஞர்களே, கலை ஆர்வலர்களே, ஊடகவியலாளர்களே, சகோதர நிறுவனங்களது அதிகாரிகளே, எமது கல்விப்புலம்சார் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே, அன்பான அதிபர்களே, ஆசிரியர்களே, அரங்கை நிறைத்திருக்கும் பெரியோர்களே, பெற்றோர்களே, எம் இனிய மாணவர்களே, மகிழ்ச்சி நிறைந்த இன்றைய காலைப் பொழுதில் உங்களுக்கு எனது வணக்கத்தைத் தந்து மகிழ்கின்றேன்.

இன்றைய இந்த முழுநிலா நாள் கலைவிழாவுக்குத் தலைமை தாங்கிக்

கொண்டிருக்கும் இந்த உணர்வு மிகுந்த, அதிலும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும் இந்தக் கணத்தில் எனக்கு நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை அவர்களுடைய "தமிழன்" என்ற தலைப்பிலான கவி வரிகள் தானாகவே நினைவுக்கு வருகின்றன.

**"தமிழன் என்றோர் இனமுண்டு**
**தனியே அவர்க்கொரு கலையுண்டு**
**அமிழ்தம் அவனுடைய மொழியாகும்**
**அன்பே அவனது வழியாகும்.**

**கலைகள் யாவிலும் வல்லவனாம்**
**கற்றவர் எவர்க்கும் நல்லவனாம்**
**நிலை கொள் பற்பல அடையாளம்**
**நின்றன இன்றும் உடையவனாம்**

**சித்திரம் சிற்பம் சங்கீதம்**
**சிறந்தவர் அவனிலும் எங்கே சொல்**
**வெற்பின் கருங்கல் களி மண்போல்**
**வேலைத் திறத்தால் ஒளி பண்ணும்**

**தமிழன் என்றோர் இனமுண்டு"**

எத்துணை பெருமை மிகு வரிகள் இவை? தமிழராம் எங்களை இவ்வரிகள் பெருமைப்பட வைப்பதோடு கலைகளது பூர்வீக வரலாற்றின் உண்மையினை எடுத்துக் காட்டுவதாகவும் இக் கவிவரிகள் அமையப் பெற்றுள்ளன.

இங்கே நான் எம் கலைகளது வரலாறு பற்றிச் சில வார்த்தைகள் கூறுவதற்கு விரும்புகிறேன்.

மனித வாழ்வின் தொடக்க காலத்தில் கலைகள் படைக்கப்படவில்லை. அப்பொழுது அன்றைய மனிதன் வாழ்வதற்கு அவசியமான கருவிகளே படைக்கப்பட்டன. இயற்கைச் சக்திகளோடு போராடி தத்தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டிய நிலையில், அதற்கு உதவக்கூடிய கருவிகளே அந்த மனிதனால் படைக்கப்பட்டன. அதன் பின்னர் அவன் தனக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில் தான் அறிந்து கொண்ட தகவல்களை வெளிப்படுத்த வேட்டை மிருகங்களைப் பற்றி வெளிப் படுத்த மிருக உருவங்களை வரையத் தொடங்கினான். ஆம் மனித இனம் படைத்த முதலாவது கலை வடிவம் சித்திரக்கலை என்றே வரலாற்றாசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

கற்பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் வரைந்த மனிதன் சிறிது காலம் செல்ல தான் வரைய நினைத்தவற்றை வடிவமாக்கிட முயல்கின்றான். சிற்பம் வடிக்கும் திறன் பெறுகின்றான்.

ஆரம்பத்தில் விலங்குகளது உருவங்களைச் சிற்பமாக வடித்த மனிதன், தன் கற்பனை ஆற்றலைப் பயன்படுத்தி விலங்கு, மனிதன் இணைந்த உருவங்களையும். தொடர்ந்து மனித உருவம், தெய்வ உருவப் படங்களையும் மனித வரலாற்றில் காலத்துக்குக் காலம் சித்திரமாக, சிற்பமாக வடித்துள்ளதனை அறிந்து கொள்ள முடிகின்றது. இதனை வரலாற்றாசிரியர்கள் ஆதாரப்படுத்தி யுள்ளனர். இந்த வரலாற்றுக் கால கட்டத்திலேயே விநாயகர்

வடிவம், நரசிம்மர் வடிவம். மச்சாவதார வடிவம். கூர்மாவதார வடிவம் போன்ற மனித விலங்கு உருவப் படைப்புக்களுக் கான கரு தோற்றம் பெற்றிருக்கக் கூடும்.

ஆரம்ப காலத்தில் தனி மனிதன் தன் குழுவினரோடு தனது ஒற்றுமையை வலுப்படுத்திக் கொள்ளவும், இயற்கைச் சக்திகளை எதிர்த்துப் போராடும் தனது குழுவினரது ஆற்றலை அதிகரித்துக் கொள்ளவுமே கலைகளைப் படைத்ததாக நம்பப்படுகின்றது. அவன், தனது குலக்குறிச் சடங்குகளைச் செய்து நடனமும் ஆடினால் தனது குழுவினது ஆற்றல் பெருகும் என்று நம்பினான். அதற்காக குலக்குறி விலங்குகளது படங்களை வரைந்தான். உருவங்களைச் செய்தான். குழுவாக இணைந்து நடன மாடினான்.

இந்த வரலாற்றுத் தகவல்களின்படி நோக்கும்போது, ஓவியம், சிற்பம், நடனம் இவை மூன்றுமே மற்றைய கலைகளுக்கு முந்தையவை. காலப்போக்கில் நடனத் துக்கு பின்னணியாக பொருளற்ற குரல் ஒலியாகவும். கருவிகளது ஒலியாகவும் இசை இணைந்து கொண்டுள்ளது.

காலப்போக்கில், சமுதாய வளர்ச்சி யினால் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் உடைமையாளர், உடை மையற்றோர் எனப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மனித சமூகத்தில் உருவாக கலைகளும் கூறுபடலாயிற்று. குழு நடனம் மற்றும் கூட்டமைப்பு நிலையில் இருந்து தோன்றிய கிராமியக் கலைகள் உடைமையற்றோரிடையே வரலாற்று எச்சமாக நிற்கலாயிற்று. இரு கூறுபட்ட சமுதாயத்தில் தனித் தனி திறமையுடைய கலைகள் வளர்க்கப்பட்டன. இக்கலை களில் ஈடுபட்ட கலைஞர்களது தனித் திறமை திறன் சார்ந்த ஒரு தொழிலுக்கு அடிப்படையாகிப்போனது.

இவ்வாறான வரலாற்றுப் பெருமை கொண்ட எமது கலைப் பாரம்பரியங் களையும், பண்பாட்டுக் கோலங்களையும் அதன் ஊற்றுகளையும், வளர்ச்சிகள் மற்றும் ஓட்டங்களையும் பாதுகாத்து அழகு கெடாமல் மெருகு சிதையாமல் எதிர்காலச் சந்ததியினரிடம் ஒப்படைக் வேண்டியது சமூக நலன் விரும்பி உழைக்கும் எங்கள் அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். ஏனெனில் ஓர் இனத்தினது மொழி மற்றும் வரலாறு அதனது கலைகளினாலேயே போசிக்கப் படுகின்றது.

ஓர் இனத்தினது பெருமைகளையும், வரலாற்றையும் சிதைக்கத் துணிபவர்கள், முதலில் அந்த இனத்தினது மொழிச்செழு மையினையும் அவர்களது கலைகளையும் அழிப்பதில் தான் கவனம் செலுத்தி இருப்பது உலகின் வரலாற்றுப் பதிவுகளில் இருந்து அறிய முடிகின்றது.

எனவே நாம் பெருமைமிகு நமது முகங்களையும் முகவரிகளையும் தொலைத்துவிடாது சிதைக்கவிடாது இருப்பதற்கு இந்த முழு நிலா நாள் கலை விழா ஒரு வகையில் துணை நிற்கின்றது என்றே கூற வேண்டும்.

இன்று இங்கே எமது பெருமைகளைப் பறைசாற்றியபடி ஊர்வலமாக வந்த ஊர்திப் படைப்புகளாகட்டும், வீதியில் அணி செய்து வந்த ஆற்றுகைகளாகட்டும், இந்த மேடையில் எழுந்து உங்களை மகிழ்ச்சிப்படுத்தவுள்ள ஆடல்கள், பாடல்கள் அனைத்துமாகட்டும், இவை போன்ற எல்லாப் படைப்புகளுமே உங்களிடமும் எங்களிடமும் ஒரு செய்தியை சொல்லியபடி எமைக்கடந்து போகப் போகின்றன. ஆம் எந்த ஒரு கலைப் படைப்பும் அதனது போக்குக்கு ஏற்ப மக்களது மனங்களினூடாகப் பயணித்துக் கொண்டே இருக்கும்.

இந்தப் படைப்புகள் இம்மண்ணின் மாந்தர்களான எங்களிடையே கருக் கொண்டவை. வடிவங் கண்டவை. காலத்துக்குக் காலம் எமது கிராமங்களிலே இருந்த புலவர்கள், கவிஞர்கள், அண்ணாவிமார்களினால் ஊட்டமளிக்கப்பட்டு காக்கப் பட்டு வந்தவை. கிராமிய நடனங்களாக கூத்துக்களாக, கரகாட்டங்களாக, கும்மியாக, கோலாட்டமாக, வில்லுப்பாட்டாக, கச்சேரிகளாக, பொம்மலாட்டமாக, குதிரை ஆட்டமாக, சூரன் ஆட்டமாக, ஒயிலாட்ட மாக, ஏன் ஒப்பாரிப் பாடலாகக் கூட எமது மக்கள் கிராமியக் கலைகளை வளர்ந்திட பாடுபட்டு வந்துள்ளனர்.

ஓர் இனத்தின் பொக்கிஷம் என்பது அவ் இனத்தின் கலைகளே என்பர். எந்த ஒரு கிராமத்திலும் அந்த அந்த பிரதேசத்துக்குரிய பண்பை அக்கிராமத்தில் நிலவும் கலைகளின் வளர்ச்சியில் இருந்தே கண்டு கொள்ளலாம். ஏனெனில் பாமர மக்களுக்கு அறிவூட்ட, விழிப்புணர்வூட்ட பண்டைத் தமிழர் கண்டு பிடித்த மிக இலகுவான வழிமுறையாக கிராமியக் கலைகளே காணப்பட்டன. இன்றும் கூட, இக்கலை வடிவங்கள் விழிப்புணர்வூட்டலுக்காக பலரும் பயன்படுத்தி வருவது எம் கலைகளுக்குப் பெருமை சேர்த்து நிற்பதேயாகும்.

இயல், இசை கலந்த கிராமியக் கலைகளும், கூத்துகளும் அறிவூட்டலுக்கு அப்பால் உணர்ச்சிகளுக்கு வடிகாலாகவும் இன்பத்தை அள்ளி வழங்குபவையாகவும் அமைந்து கிடந்தன. எங்களது பிரதேசத்தில் அவ்வப்போது இரவிரவாக மேடையேறி மக்களை மகிழ்வித்த காத்தவராயன் கூத்து மிக நல்ல உதாரணமாகும்.

தென்மராட்சி மண்ணுக்கும் எனக்கும் மிகமிக நெருங்கிய தொடர்பு கடந்த இரண்டு வருடங்களுக்கு உட்பட்டதாக இருப்பினும் இந்த மண்ணின் கலைகள் அவற்றின் மாண்புகள் பற்றி இக்காலப் பகுதியில் நான் ஓரளவு அறிந்து கொண்டுள்ளேன். கலைகளும் கனிகளும் செழித்து வளர்ந்த, வளரும் மண் இது. பல அறிஞர் பெருமக்களை, இசை அறிஞர், தமிழ் அறிஞர், சங்கீத பூஷணங்கள் பலர் வாழ்ந்து வளம் கண்ட மண் இது. மதிப்புக்குரிய மகாலிங்கசிவம், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, இசை மேதைகள் நடேசன், குமாசுவாமி, திருமதி பூமணி இராசரத்தினம், நாதஸ்வர மேதை

பஞ்சாபிகேசன், பொம்மலாட்டம், புகழ் கல்வயல் இராமுப்பிள்ளை சிவானந்தன், கவிஞர் முருகையன், கல்வயல் குமாரசுவாமி, அதிபர் பஞ்சாட்சரம், அ. பொ, செல்லையா, ஆசிரிய கீதம் தந்த அகில இலங்கை வானொலி புகழ் பொன். ஸ்ரீ வாமதேவன், மறவன்புலவு சச்சிதானந்தம், இங்கே இந்நாளில் எமது கௌரவத்தை ஏற்றுக் கொள்ள வருகை தந்து எமை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் பேராசிரியர் க. அருணாசலம் போன்ற பல அறிஞர்களை, கலைஞர்களை, அண்ணாவி மார்களை, கூத்தர்களை, எழுத்தாளர் களைத் தந்த மண் இந்த தென்மராட்சி மண். கலைகளால் தன்னையும் வளர்த்து, தமிழையும் வளர்த்து பெருமை கண்ட மண் இந்தத் தென்மராட்சி மண். தானமும் தருமமும் செய்து இறையருள் பெறும் பேற்றைப் பெற்றவர்கள் இப்பிரதேச மக்கள். இன்று இச்சபையில் கூட வீற்றிருக் கின்ற பெருமைக்குரிய உங்களில் பலரும் மாதம் ஒருமுறை இங்கு தமிழுக்கு விழா எடுத்து பெருமை சேர்க்கும் தென்மராட்சி இலக்கிய அணியினைச் சேர்ந்தவர்கள் தான் என்று அறிந்து கொள்ளும்போது பெருமிதத்தால் நான் நிறைந்து போகின் றேன்.

ஆம், கலைகள் அனுபவிக்கும் போது மட்டுமல்ல, அவை பற்றி அறிந்து கொள்ளும்போது கூட ஒருவித சிலிர்ப்பு ஏற்படுவது இயல்பானதே.

உழவர் வாய்த் தமிழாய், தாலாட் டாய் மீனவர் வள்ளப் பாட்டாய், ஊஞ்சற் பாட்டாய், காவடித் தமிழாய், வசந்தன் பாட்டாய்,கிழக்கிலங்கையின் அம்மானை யாய், நாட்டுப்புறக் கானாப் பாடலாய் ஏன் வசைப் பாடலாய்க்கூட எங்களை வருடிச் செல்ல, களைப்பைப் போக்க, களிப்பைப் பெற்றுத்தர, படைக்கப்பட்ட பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப் பட்டுவரும் கலைகளைப் பற்றிப் பேசப் பேச பேசிக் கொண்டே இருக்கலாம். அது இந்த முழுநிலா நாள் கலைவிழாவுக்கான தலைமையுரையாக இல்லாது, கலைகள் பற்றிய விரிவுரையாக அமைந்து விடும் என்று அஞ்சி, சபை ஏறவுள்ள நிகழ்ச்சிகளுக்கு இடம் தர விரும்பி என் உரையை நிறைவு செய்ய விழைகின்றேன். அதற்கு முன்பாக, இவ்விழா சிறக்க உழைத்த என் வலயப் பணியாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், இம் மண்ணின் கலை மாந்தர்கள் உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தந்து நிற்கின்றேன். உங்களது அயராத உழைப்பும் ஊக்கமான செயல்களும் தான் இந்த விழாவின் உயிர்த்துடிப்பாக அமைந் திருக்கின்றன எனக் கூறி விடை பெறுகின் றேன்.

◆◆◆



# முழுநிலா நாள் கலை விழா மனப் பதிவுகள் சில

**போராசிரியர் அருணாச்சலம்**
மீசாலை வடக்கு, மீசாலை.

கி.மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்மொழியையும் கலைகளையும் பேணிப்பாதுகாத்து வளர்த்தெடுக்கும் பணிகள் ஆட்சியாளர்களாலும் வள்ளல்களாலும் மன்றங்களாலும் முன்னெடுத்து வரப்பட்டமையை வரலாற்றால் அறிய முடிகின்றது. இன்றுங்கூடத் தமிழகத்திலும் ஈழத்திலும் மட்டுமன்றித் தமிழர்கள் வாழும் உலக நாடுகள் பலவற்றிலும் இத்தகைய பணிகள் முன்னெடுக்கப்படுவதனைக் காண முடிகின்றது. பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை இத்தகைய முயற்சிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வகையில் தென்மராட்சிக் கல்வி வலயமும் முழுநிலா நாள் கலைவிழா வினைச் சில ஆண்டுகளாக மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றது. 10.8.2014 அன்று நடைபெற்ற விழாவில் கலந்து கொள்ளும் பேறு எனக்கும் கிடைத்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நுழைவாயிலாகத் தென்பகுதியில் அமைந்துள்ள தென்மராட்சிப் பிரதேசத்தின் சில பகுதிகள் குறிப்பாக - பழைய பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தின் பல பகுதிகள் தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. பொதுவாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்மராட்சிப் பிரதேசமும் பச்சிலைப் பள்ளிப் பிரதேசமும் நீண்டகாலம் பல துறைகளிலும் பின் தங்கிய நிலையிலேயே காணப்பட்டன. யுத்தகாலப் பகுதியில் இவ் இரு பிரதேசங்களும் அதிக அளவிற் பாதிக்கப்பட்டன. "அழிவின் பின் ஆக்கம்" என்பது போலக் கடந்த சில ஆண்டுகளில் தென்மராட்சிப் பிரதேசம் புதுப் பொலிவுடன் பலதுறைகளிலும் வேகமாக முன்னேறி வருவதனைக் காணமுடிகின்றது. அதேசமயம் கலை - இலக்கியப் பணிகளும் வேகமாக முன்னெடுத்து வரப்படுகின்றன. யுத்த காலத்தில் சுடுகாடாகக் காட்சியளித்த பல இடங்கள் இன்று புத்துயிர் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒரு சமூகத்தின் கலை இலக்கிய வளர்ச்சியானது அச்சமூகத்தின் முன்னேற்றத்தைப் பிரதிபலித்து நிற்கின்றது. அவ்வகையில் மேற்படி "முழுநிலா நாள் கலை விழா" நிகழ்ச்சியும் அமையலாயிற்று. வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்திய இவ் விழா மனந்திறந்து பாராட்டத்தக்க அளவிற்குப் பல வழிகளிலும் சிறப்பாகவும் இனிதாக வும் நிறைவேறியது.

மாணவர்கள், ஆசிரியர்கள், விருந்தினர்கள், பார்வையாளர்கள் என பல நூற்றுக் கணக்கானோர் விழாவில் திரண்டிருந்தனர். அவர்கள் எல்லோரும் காலையில் சிற்றுண்டியும் தேநீரும் பிற்பகல் ஒன்றரை மணியளவில் மதியபோசனமும் அளித்து உபசரிக்கப்பட்டனர். வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சு.கிருஷ்ணகுமார் தலைமையில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார கௌரவ அமைச்சர் த. குருகுலராசா அவர்களும் சிறப்பு விருந்தினராக மேற்படி அமைச்சின் செயலாளர் உயர்திரு. சி. சத்தியசீலன் அவர்களும் கலந்து கொண்டனர். பண்பாட்டுக்கோல உடையுடன் கலந்து கொள்ளுமாறு விழா ஒழுங்கமைப்பாளர் அன்புடன் கேட்டுக் கொண்டதற் கிணங்க பெருமளவானோர் பண்பாட்டுக் கோல உடையுடன்சமுகமளித்திருந்தமை மனதிற்கு இதமாக அமைந்திருந்தது.

காலை ஒன்பது மணிக்குச் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முன்றலி விருந்து பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் முதலியோர் சகிதம் விழா மண்டபத்தை நோக்கிப் பிரமாண்டமான அளவில் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வல நிகழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக அமைந்தன பரவசமூட்டின. சின்னஞ்சிறு மழலைகள் முதல் வளர்ந்தமாணவர்கள், ஆசிரியர்கள் முதலியோர் வரை பலரும் தத்தமது பணிகளைச் சிறப்புறச் செய்தனர். சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் எனப் பலரும் ஏற்றத்தாழ்வு காட்டாது ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களைத் திறந்த மனத்துடன் உற்சாகமாக உபசரித்தனர். முன்னே மாணவர்கள் கோல உடை அணிந்து பதாகை தாங்கிவரக் கதம்பம், வாள் நடனம், குதிரையாட்டம், மயிலாட்டம், இன்னியம், சாமரை வீசி மலர் தூவி வரவேற்பு நடனம் ஆகிய நிகழ்ச்சிகள் பரவசம் ஊட்டும் வகையில் காணப்பட்டன. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்னும் வாக்கிற்கிணங்க மழலைகளின் செயற்பாடுகள் அற்புதமாக விளங்கின.

நீண்ட தூரம் இடம் பெற்ற ஊர்வலத்தில் காத்தவராயன் கூத்துக் காட்சி, நாம் இலங்கையர், வில்லுப் பாட்டு, ஒளவையார் - முருகன் காட்சி, பாரம்பரியக் கலைகளைப் பேணுவோம்; கோமாதா பொங்கல் வழிபாடு, கிராமிய வழிபாடு, உடுக்கு தாளவாத்தியம் இசைத்தல், யாவரும் செய்வோம் விவசாயம் , கண்ணகி வழக்குரை, தமிழ் நீதி முதலியன காட்சிப்படுத்தப்பட்டன. இவற்றுள் விசேடமாகக் குறிப்பிடக் கூடியன. உழவு இயந்திரங்கள் சில ஊர்வலத்தில் ஊர்ந்து கொண்டிருந்தன. அவற்றிலேயே நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. ஒளவை- முருகன் காட்சி அற்புதமாக அமைந்திருந்தது. பெரியதொரு நாவல் மரக்கிளையினை உழவு இயந்திரப் பெட்டிக்குள் நாட்டி அம் மரக்கிளையில் சிறுவன் ஒருவனை ஏற்றி மரக்கிளையின் கீழ் ஒளவை மூதாட்டியை நிறுத்திய காட்சி பலரையும் பரவசத்தில் ஆழ்த்தியது. ஏறத்தாழ ஒரு மணி நேரம் வரை இடம் பெற்ற இவ் ஊர்வலத்தின்போது இறைவன் கருணையோ என்னவோ வானம் மப்பும் மந்தாரமுமாக குளிர்மையூட்டிக் கொண்டிருந்தது.

புதிதாக அமைக்கப்பட்ட தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபம் விழாக் கோலத்திற்கேற்ற வகையில் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழாவின் ஆரம்ப நிகழ்ச்சியாகப் பிரதம விருந்தினர் அவர்கள் தமிழ்த்தாய்க்கு மாலை அணிந்தார். கல்லூரி மாணவிகள் மிக இனிமையான முறையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், மங்கல இசை, அக வணக்கம், வரவேற்பு நடனம், வரவேற்புரை , பல்லியம், தலைமையுரை,

ஹஸ்தாபினய பியூசன் நடனம், மாற்று வலுவுள்ளோர் நிகழ்ச்சி, மெல்லிசைக் கானம், அன்பினைந் திணை நடன நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் போற்றத்தக்க வகையில் இடம் பெற்றன.

மேற்படி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அறிஞர் கௌரவிப்பு இடம் பெற்றது. ஏலவே சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் அன்றைய கல்லூரி அதிபர்கள் பலமுறை என்னைப் பிரதம விருந்தினராக அழைத்து உரிய முறையில் கௌரவித்தனர். குறிப்பாக பரிசில் நாள், கல்லூரித் தினம் முதலிய வைபவங்கள் இவ் வகையிற் குறிப்பிடத்தக்கவை. மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பொ. செல்லையா அவர்களின் தலைமையில் அரிமாச் சங்கம் உரிய முறையிற் கௌரவித்துப் பாராட்டியமையையும் இவ்விடத்தில் நினைவு கூருகின்றேன். 2011 ஆம் ஆண்டு கண்டி மத்திய மாகாண இந்து மாமன்றத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரால் பிரமாண்டமான அளவில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. "அருணம்" என்ற பெயரில் கனதியான சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், அறிஞர்களும் பாராட்டுரை வழங்கினர் பொன்னாடைகள் போர்த்திக் கௌரவித்தனர். சிறப்பு விருதும் அளிக்கப்பட்டது. அதன் பின்னர் கால் ஊனமுற்ற நிலையிலும் தென்மராட்சிக் கல்வி வலயத்தினர் மிகச் சிறப்பான முறையில் பாராட்டி என்னைக் கௌரவித்தனர். மாலை சூட்டி, பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பாடல் பாடினர். என்றும் நினைவு கூரத்தக்க வகையில் வாழ்த்துப் பாமாலையைப் பெறுமதிமிக்க சட்டத்துள் அமைத்துக் கையளித்தனர். அத்துடன் எனது இலக்கியப் பணியினைப் பாராட்டி நினைவுச் சின்னமும் வழங்கினர். இவ் வகையில் தென்மராட்சிக் கல்வி வலயத்தினருக்கு என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அறிஞர் கௌரவிப்பு நிகழ்ச்சியினைத் தொடர்ந்து வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களால் "கானாப் பாட்டு" சிறப்பான முறையில் பாடப்பட்டது. நடன ஆசிரியர்களால்" பெண்ணின் பெருமை" என்னும் கருத்தாடல் நடனம் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை, நன்றியுரை ஆசியவற்றினையடுத்து வலயக் கீதத்துடன் விழா இனிதே நிறைவேறியது.

இவ் விழா செவ்வனே நடை பெறுவதற்குத் தென்மராட்சிக் கல்வி வலயத்தினர் மேற்கொண்ட அயராத உழைப்பு மனம் திறந்து பாராட்டத்தக்க ஒன்றாகும். ஆசிரியர்களும் மாணவர்களும் தத்தமது கடமைகளைச் செவ்வனே செய்தனர். நிகழ்ச்சிகள் இடையீடின்றியும் கனகச்சிதமாகவும் மிகவும் கவர்ச்சியான முறையிலும் நடந்தன. மழலைகள் முதல் முதியோர் வரை எல்லோரையும் சுமார் மூன்றரை மணித்தியாலங்களுக்கு மேல் கட்டிப்போட்டன.

எத்தகைய சிரமங்கள், இடையூறுகள் வந்துற்ற போதும் இத்தகைய விழாக்களைத் தென்மராட்சிக் கல்வி வலயத்தினர் தொடர்ந்து நடத்துவன் மூலமே தென்மராட்சிப் பிரதேசத்தினை முன்னெடுத்துச் செல்ல முடியும். அதன் மூலம் சமூகத்தின் முன்னேற்றத்துக்கும் பேருதவி புரிய முடியும் என்பது மனங்கொள்ளத்தக்கது. "வாழ்த்த வேண்டிவர்களை வாழும் போதே வாழ்த்துவோம்" என்னும் கோட்பாடு உலகெங்கும் மேலோங்கி வரும் இன்றைய நிலையில் தென்மராட்சிக் கல்வி வலயமும் தனது கடமையினைச் செவ்வனே நிறைவேற்றியதனையிட்டு மனம் பூரிக்கின்றோம்.

◆◆◆

யா/சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி முன்றிலிலிருந்து விருந்தினர் ஊர்வலம் ஆரம்பமாகின்றது.





## மாணவர்களின் கலை ஆற்றுகைகளுடன் தொடர்ந்தது ஊர்வலம்









# ஆடல் பாடலுடன் ஆர்ப்பரித்த ஆடித்திங்கள் முழுநிலா நாள் கலைவிழா

தி. அபராஜிதன்
ஆசிரியர் – யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்

தமிழர் தம் பாரம்பரிய பெருமைகளைப் பறை சாற்றும் கலை வடிவங்களுக்கு காட்சி கொடுக்கும் வகையிலும் பண்பாட்டின் கோலங்களைப் பார்த்துரைப்பதற்கு ஏற்றாற் போலும் வட மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயம் சீர்மையுடன் பெருமையாக நடத்திய 2014 ஆடித்திங்கள் முழுநிலா நாள் கலைவிழா பற்றிய காட்சிகளை வாசகர்களாகிய உங்களுக்கு வரிவடிவங்களாய் பகிர்ந்து கொள்வதே நோக்காகும்.

காலச் சுழற்சியில் வருடாந்தம் வருகின்ற ஒரு முழுநிலா நாளுக்கு விழா எடுக்கும் உரிமை பெற்ற தென்மராட்சிக் கல்வி வலயம் இவ்வருடமும் சிறப்பான ஆடி மாத முழுநிலாவினை தென்மராட்சிக் கல்வி வலய சமூகம் சீரிய தலைமைத்துவத்தின்வழிநடத்தலில் நிறைவுடன் நிகழ்த்திய பெருமையைப் பெற்றுள்ளது. தமிழர் தம் வாழ்வியல் தடயங்களை கலை, பண்பாடு, சமூகம், ஆன்மீகம், அறம், பொருளீட்டம், பொழுதுபோக்கு, எனும் அம்சங்களைத் தாங்கிய ஊர்வலம் மற்றும் ஊர்தி பவனிகளை உள்ளடக்கிய வெளியக காட்சிக்கு கருத்தூட்டம் செய்யும் வகையிலும் ஆடல், பாடல், அபிநயம், கௌரவிப்பு, கருத்துரைகள் என உள்ளக அரங்கினை உணர்வுமிக்கதுமாக மாற்றியிருந்தமை மனம்கொள்ளத்தக்கது.

வெளியக காட்சி நிகழ்ச்சிகளில் முழு நிலா நாள் கலை நிகழ்ச்சியின் பதாதைகளை மாணவர் இருவர் கம்பீரமாக காட்சிப்படுத்திவர யா/மட்டுவில் தெற்கு அ.மி.த. க. பாடசாலை மாணவர்களின் கவர்ச்சிகரமான கதம்ப நிகழ்ச்சியும் யா/அல்லாரை அ.த.க.பாடசாலை மாணவர்களின் வீரம் செறிந்த வாள் நடனமும், யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. மாணவர்களின் குளிர்த்திமிகு குதிரையாட்டமும் யா/ கைதடி நாவற்குழி வித்தியாலய மாணவர்களின் மகிழ்ச்சியான மயிலாட்டமும், சாவகச்சேரியின் நகர்ப்புறத்தை ஆக்கிரமித்து அசைந்துவர கண்களுக்கும் காதுகளுக்கும் உத்வேகம் தரும் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் காத்தவராயன் கூத்துக் காட்சியும், யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களின் இலங்கைத் தீவின் பல்லின சமூகத்தைக் கொண்ட காட்சிப் படிமமும், யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலய மாணவர்களின்

வில்லுப்பாட்டும் விரைந்திட, மீசாலை விக்கினேஸ்வரா ம.வித்தியாலயத்தின் சுட்டபழமா? சுடாத பழமா? ஔவையாரின் காட்சி அசைந்தாடி வர, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவர்களின் மறந்துபோன பாரம்பரிய கலைகளை மகிழ்வுடனே பேணுவோம் என்பதற்குச் சான்றாய் ஊர்தி ஊர்ந்து வர, யா/மறவன்புலவு சகலகலா வித்தியாலயத்தின் கோமாதா எங்கள் குலமாதா என்ற பாடலோடு பட்டிப் பொங்கலின் சிறப்பை எடுத்தியம்பும் பரி வாரங்கள் பவனி வர, யா/கைதடி விக்கினேஸ்வர ம.வி. கிராமிய வழிபாட்டு முறைகள் வழுந்து வைத்துப் பொங்கி இசைத்திடும் காட்சிகள் புகையோடு ஒலியெழுப்பி ஓடிச் செல்ல, யா/விடத்தற் பளை கமலாசனி வித்தியாலய மாண வர்களின் விவசாயத்தின் மேன்மையை உணர்த்திச் செல்லும் ஊர்தி ஊர்ந்து செல்ல, மந்துவில் றோ.த.க. பாடசாலை மாணவர்களின் கண்ணகி வழக்குரைக்கும் காட்சி கண்களுக்கு விருந்தூட்டிச் செல்ல, தென்மராட்சி இலக்கிய அணி யின் தமிழ் நீதி கொண்ட மனுநீதி கொண்ட காட்சி காண்போரைக் களிப்பூட்டும் வகையில் நகர்ந்து செல்ல ஊர்தி ஊர்வலங்களினால் ஒரு சில மணித்துளிகள் நகரமே மிடுக்குடன் காட்சி தந்தது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முன்பாக நிகழ்ச்சியின் தலைவர் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. கிருஷ்ணகுமார் தலைமையில் நிகழ்ச்சியின் முதன்மை விருந்தினர் வடமாகாண கல்வி அமைச்சர் கௌரவ த. குருகுலராஜா அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உயர்திரு சி. சத்தியசீலன் அவர்களும், மலர்மாலையிட்டு வரவேற்று ஏனைய விருந்தினர்களையும் கல்விப்புலம்சார் உயர் அதிகாரிகளையும் வரவேற்க உசன் இராமநாதன் மகாவித்தியாலய மாணவர்களின் இன்னிய அணி இசை இசைக்க, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் சாமரை வீசி மலர் தூவி வரவேற்க தென்மராட்சிக் கல்வி வலய அதிபர், ஆசிரியர்கள், வலயக் கல்விப் பணிமனையின் பதவி நிலைசார் உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள் என மக்கள் தென்மராட்சியின் கலாசார மண்டபம் நோக்கி நடை பவனியில் நகர்ந்து சென்றனர்.

வெளியக நிகழ்ச்சிகள் விருந்தினரையும் கலந்தோரையும் கவரச் செய்ய உணர்வு பூர்வமாக உள்ளரங்க நிகழ்ச்சிகள் மேளதாள வாத்தியங்கள் இசை முழங்க ஆரம்பமாகி தமிழர் பண்பாட்டின் ஓர் அம்சமாகிய ஆராத்தி செய்து திலகமிட்டு வரவேற்று மங்கல விழாச் சுடர்கள் ஒளிப்பிரகாசமாய் ஒளிர மிகவும் சிறப்பாக வடிவமைத்த தமிழ்த் தாய்க்கு முதன்மை விருந்தினர் மலர்மாலை அணிவிக்க மண்டபம் நிறைந்த மக்கள் மனதில் தமிழ் மணம் தலைவிரித்தாட சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களின் தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்க மங்கல இசையுடன் மண்டப நிகழ்ச்சிகள் மனம் பூரிக்கத் தக்கவகையில் ஆரம்பமாகின. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களின் அரங்கு நிறைய அழகுத் தமிழில் வந்தோரை வாத்தியக் கருவி உதவியுடன் நாட்டியக் கலையின் தார்ப்பரியத்தை உணர்த்தும்

வகையில் வரவேற்பு நடனத்தை வழங்கிச் செல்ல தென்மராட்சியின் தேசிய பாடசாலையின் முதல்வர் திரு. அ. கயிலாயபிள்ளை அவர்களின் சபை அறிந்த வரவேற்புரையுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீர சிங்கம் மத்திய கல்லூரி, உசன் இராம நாதன் மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், கைதடி குருசாமி வித்தியாலயம் ஆகிய பாட சாலைகளின் மாணவர்கள் ஒன்றிணைந்து ஒகன், தபேலா, புல்லாங் குழல், வயலின், கிற்றார், மிருதங்கம் போன்ற மேலைத்தேய கீழைத்தேய இசைக்கருவிகளின் துணை கொண்டு பக்குவமாய் பல்லியம் என்கின்ற கலைப் படைப்பை காட்சிப் படுத்திச் சென்றனர்.

தொடர்ந்து நிகழ்ச்சியின் தலைவர் வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் விழாவின் தார்ப்பரியத்தை தமிழ் உணர்வு டன் பாரம்பரிய கலைகளின் தோற்றத் தையும் வளர்ச்சியையும் கலைப்பரி மாணத்தின் முக்கியத்துவத்தையும் தென் மராட்சி மண் தந்த கலைஞர்களினதும் கலைகளினதும் நாமங்களை நன்றியுணர் வோடும் மண்ணின் பெருமையையும் மாட்சியையும் மனம் கொள்ளத் தக்க வகையில் தத்துருபமாய் தனது தலை மையுரையில் தடம்பதித்துச் சென்றார். நிகழ்ச்சிகளின் நீட்சியில் சாவகச்சேரி இந் துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத் திய கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள் இணைந்து வழங்கிய ஹஸ்தா பினய பியூசன் நடனம் பார்ப்போரை பரவசமடையச் செய்தது. பக்கவாத்தியக் கருவிகளின் துணைகொண்டு நாட்டியக் கலையின் முத்திரைகளை கைக் குறிகளு டன் அழைக்கும் அற்புதத்தை அரங்கிலே ஏற்றம் செய்தனர்.

தொடர்ந்து கைதடி நவீல்ட் பாட சாலை செவிப்புலனற்ற மாணவர்களின் நடன நிகழ்ச்சி வித்தியாசமான உணர்வை மேலிடச்செய்தது. மேலும் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாண வர்களின் முழுநிலா கலைநாள் பற்றிய கருத்தாழம் மிக்க பாடலும் போட்டி உலகின் மாணவர்கள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்து வாழ்ந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தாழம் மிக்க மெல்லிசை கானம் நிகழ்ச்சியை மெருக்கூட்டிச் சென்றது.

மிருசுவில் அ.த.க.பாடசாலை, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம், கச்சாய் அ.தக.பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் என சுமார் எழுபது பேர் இணைந்து வழங்கிய ஐவகை நிலத்தின் அக ஒழுக்கம் பற்றிய அதாவது சங்க கால வாழ்க்கை முறையில் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் எனும் நிலத்திற்கு ஏற்ற வகையில் அக ஒழுங்கு எவ்வாறு அமைந்திருந்தது என்பது பற்றிய அன்பின் ஐந்திணை நடன நாடகம் கலை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் அமைந்திருந்தது. கடும் உழைப்பின் வெளிப்பாடாகவும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர்களாகிய தற் போது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்ற இரு மாணவர்கள் இந் நடன நாடகத்தின் முக்கிய கதாபாத் திரத்தை ஏற்று அளிக்கை செய்திருந்தமை பாராட்டத் தக்கது.

மேலும் ஆடி மாதத்தின் முக்கியம் பற்றியும் ஆடித் திங்கள் பௌர்ணமி விழாவின் சிறப்புப் பற்றியும் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் சமகால வளர்ச்சியின் மாறுதல்கள் பற்றியும் வழிநடத்தும் தலைமையினதும் நிகழ்ச்சியினதும் சிறப்பு பற்றியும் சிறப்புடனே சிறப்பு விருந்தினர் தன்னுடைய உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்திச் சென்றார்.

தொடர்ந்து தென்மராட்சியின் மண்ணின் மைந்தன் பேராசான் சாகித்திய இரத்தினம் கனகசபை அருணாசலம் அவர்களின் தமிழ் மற்றும் கலைப்பணி தொடர்பான கௌரவிப்பு காலத்தின் இன்றியமையாததாக இருந்தது. அல்லாரையூர் அருணாசலத்தின் கல்விப் பணி தொடர்பாக கவி வரிகளில் வாழ்த்தியும் நினைவுச் சின்னத்தினை வழங்கியும், பொன்னாடை போர்த்தும் கௌரவிக்கப் பட்டமை தமிழர் தம் பண்பாட்டின் ஓர் அம்சமாகவும் கௌரவிப்பிற்குப் பொருத்தமானதாகவும் அமைந்ததென்றால் மிகையாகாது.

கலை வெளிப்பாடுகளின் வரிசையில் வலயப் பாடசாலை ஆசிரியர்களின் ஒழுங்குபடுத்தலில் "ஆர் என்ன சொன்னாலும் அதிஸ்டசாலி நாங்கள் தானே" எனும் தலைப்பிலான கானாப்பாட்டு காதுகளுக்கு விருந்தூட்டிச் சென்றது. கிராமப் புறங்களில் இருந்து எதுவித பக்கவாத்தியக் கருவிகள் இல்லாமல் இயல்பாகவே இசைக்கின்ற பாடல்களே கானாப்பாட்டு என வரைவிலக்கணப் படுத்தப்படுகின்ற தற்கேற்றாற் போல் பழமையைப் பழித்து புதுமையைப் பாராட்டும் சமூகத்திற்கும் நவீன மோகங்களால் அல்லலுறும் சமூகங்களுக்கும் நல்ல செய்தியைச் சொல்லிச் சென்றது.

தொடர்ந்து தென்மராட்சிக் கல்வி வலய நடன ஆசிரியர்களினால் பெண்ணின் பெருமை எனும் தலைப்பிலான கருத்தாடல் நடனம் காண்போரை கண் குளிரச் செய்தது. பெண் என்பவளின் வேலைச் சுமைகள் பற்றியும் வாழ்க்கைச் சுமைகள் பற்றியும் பெண்ணியத்தின் பெருமை பற்றியும் அரங்கை ஆட்சி கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கலை நிகழ்ச்சிகள் நிறைவு பெற முதன்மை விருந்தினரின் முழு நிலா நிகழ்ச்சிகள் பற்றிய முதன்மை உரையில் தமிழருடைய கலை வடிவங்களின் பொக்கிசத்தைப் பேணிப் பாதுகாப்பதன் அவசியத்தையும் அதற்கு உயிரோட்டம் கொடுக்கும் இவ்வாறான கலைப்படைப்புகளின் காத்திரம் பற்றி யும் நிகழ்ச்சியின் நேர்த்தியான கலை வெளிப்பாடுகள் பற்றியும் தனது வெளிப்படுத்துகையை வெளிப் படுத்திச் சென்றார்.

ஒட்டுமொத்தத்தில் மறந்துபோன மறைந்து போன தமிழர் தம் கலைகளுக்கு உயிரோட்டம் கொடுக்கும் வகையில் வட மாகாண கல்வித் திணைக்களத்தினதும் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரினதும் அவர்தம் உத்தியோகத்தர்களினதும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், வர்த்தகர்கள் போன்றவர்களது கூட்டு முயற்சியினதும் கருத்தொருமித்த விருப்பார்ந்த உடல், உள, உழைப்பின் வெளிப்பாட்டின் அறுவடையே இவ்வாறானதொரு சிறப்பான நிகழ்ச்சியை அளிக்கை செய்வதற்கு ஆதாரமாய் அமைந்ததென்றால் மிகையாகாது.

◆◆◆



# பௌர்ணமி தினம்

**க.க. ஈஸ்வரன்**
தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி,
ஆசிரியர் மத்திய நிலையம், தென்மராட்சிக் கல்வி வலயம்.

உலகிலே வானியல் (Astronomy), சோதிடம் (Astrology) என்பனவாகிய விஞ்ஞானச் சிந்தனைகள் மக்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த நிலையில் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். எந்தவொரு காரியத்திற்கும் நல்ல நாள் கணிப்பதும் தீய நாள் கணிப்பதும் அவற்றைக் கடைப்பிடிப்பதும் வழக்கமாகி வருகின்றது. வானத்திலே இருக்கின்ற கிரகங்கள், நட்சத்திரங்களின் இயக்கங்களால் தான் பூமியில் பல்வேறு காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பது விஞ்ஞானிகளின் முடிபு. இதையே பண்டைய மக்கள் தம் அனுபவத்தால் கண்டு தெளிந்து கடைப்பிடித்து வந்தனர். அத்தகையதொரு அனுபவத் தெளிவின் வெளிப்பாடே நாட்காட்டி கண்டுபிடிக்கப்பட்டமை. நாட்காட்டி கண்டுபிடிக்கப்பட்ட பின்பு மக்கள் தம் வாழ்வியல் ஒழுங்குகளை அதற்கேற்ப சீர்படுத்திக் கொண்டனர். வாழ்வில் நடைபெறுகின்ற நன்மை, தீமை நிறைந்த காரியங்கள் அனைத்துக்கும் இயற்கையைக் காரணமாக்கி, இயற்கையின் இயக்கத்திற்கு ஏற்ப தமது வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொண்டனர். இன்று வரை கடைப்பிடித்தும் வருகின்றனர்.

அத்தகைய வானியல் சோதிட சிந்தனைகளில் சூரியன், சந்திரன் முதலிய நவக்கிர கங்கள், இராசி மண்டலம். நட்சத்திரம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றினுடைய அசைவுகளே பூமியில் பருவமாற்றங்கள், இரவு பகல், இடி மின்னல் போன்ற நிகழ்வுகளுக்குக் காரணம் என அறியப்பட்டது. எனவே மனித ஆற்றலால் கட்டுப்படுத்த முடியாத செயற்பாடுகள் யாவுமே இந்தச் சூரிய, சந்திர, கிரகங்களின் செயற்பாட்டால் விளைந்தவை என மக்கள் தீர்மானித்தனர். அவற்றை விஞ்ஞானச் சிந்தனையோடு அறிய முற்பட்ட போது சோதிட சாஸ்திரம், வானியல் சாஸ்திரம் என்பன பிறந்தன எனலாம்.

சந்திரன் என்பது பூமியின் உபகோள் என்பதும், பூமியில் இருந்து பிரிந்த ஒரு பகுதியே என்பதும் வானியல் ஆராய்ச்சியாளர்களின் முடிபு. சூரியன், சந்திரன், பூமி இவற்றின் இயக்கம் ஓர் ஒழுங்கில் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வியக்கத்தின் தன்மைக்கேற்பவே சூரிய, சந்திர கிரகணங்கள் இரவு பகல் மாற்றங்கள் என்பன ஏற்படுகின்றன. சந்திரனிலே சூரிய ஒளி

விழுகின்ற போதுதான் நாம் பூமியிலிருந்து தெளிவாகச் சந்திரனைப் பார்க்க முடிகின்றது. பூமியின் நிழல் சந்திரனில் பதிகின்ற போதுதான் நாம் சந்திரன் தேய்கின்றது, வளர்கின்றது எனவும் முழுமையாக சூரியனின் ஒளி சந்திரனில் விழுகின்ற போது முழு நிலா / பௌர்ணமி என்றும். முழுமையாக பூமியால் மறைக்கப்படுகின்றபோது அமாவாசை என்றும், சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி கடக்கின்றபோது சந்திர கிரகணம் என்றும் கணித்துக் கொள்கின்றோம். அக்காலங்களில் பூமியில் பல நன் நிமித்தங்களும், தீய விளைவுகளும் ஏற்படும் என்பதால் இக்காலங்களில் பெரும்பாலும் ஓய்வு நாட்களாகவும் விரத நாட்களாகவும் புனித நாட்களாகவும் கொள்ளப்பட்டு இறை வழிபாட்டோடு இணைக்கப்பட்டன. சாதாரண மக்கள் இந்நாட்களைக் கனத்த நாட்கள் என்றழைத்தனர்.

மேற்கூறிய சந்திரனின் இந்த இயக்க மாற்றம் சோதிட வல்லுநர்களால் கணிக்கப்பட்டன. அந்த வகையில் பௌர்ணமி தொடக்கம் அமாவாசை வரையான 14 நாட்களும் அபரபட்சம்/ தேய்பிறை என்றும், அமாவாசை தொடக்கம் பௌர்ணமி வரையிலான 14 நாட்களும் பூர்வபட்சம் / வளர்பிறை என்றும் வகுக்கப்பட்டன. அபரபட்சத்தில் நல்ல காரியங்களைத் தவிர்ப்பதும் பூர்வ பட்சத்தில் நல்ல காரியங்களை மேற் கொள்வதும் சிறந்தது என்பது சோதிட வல்லுர்களின் கருத்து அதுவே சமூக நடைமுறையாகவும் இருந்து வருகின்றது.

பௌர்ணமி நாளும் அமாவாசை நாளும் பெரும்பான்மையும் உலகில் வாழும் மக்களால் சிறப்பாகக் கடைப் பிடிக்கப்படும் நாட்களாக விளங்குகின்றன. தமிழ் மக்கள் குறிப்பாக இந்துக்கள் மத்தியில் அமாவாசை புனித நாளாகக் கருதப்பட்டு விரதங்கள் அனுட்டிக்கப் படுகின்றன. குறிப்பாக அமாவாசை பிதிரர் (இறந்தோர்) களுக்குரிய நாளாகும் என்பதும் ஆடியமாவாசையில் தந்தையை இழந்தோர் விரதமிருந்து வழிபட்டால் அவர்களின் ஆசியைப் பெற்று வாழ்வினைச் சிறப்பாக அமைத்துக் கொள்ளலாம் என்பது நம்பிக்கை.

பௌர்ணமி நாளும் அமாவாசை நாளும் மிகவும் மகிழ்ச்சிகரமான நாள். இந்நாளில் உலகமே ஓய்வைப் பெற்று மகிழ்ந்திருக்கும். பௌர்ணமியில் நிலவு மிகவும் துல்லியமாகவிருக்கும். அந்த நிலவு குளிரவோ சுடவோ செய்வதில்லை. அந்நாளில் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வழிபாடியற்றி விரதமிருந்து கலை விழாக்களில் மகிழ்ந்திருப்பர். ஓடி ஓடி உழைத்த மனிதன் மாதத்தில் ஒரு நாளாவது ஓய்வாக மகிழ்ச்சியாக குடும்பத்தாருடன் குதூகலமாக வாழ வேண்டும் என்பது இந்த விடுமுறை நாளின் முக்கியத்துவமாகும்.

சமய தத்துவ ரீதியில் சிந்திப்போமாயின் பௌர்ணமியில் வழிபாடு செய்வது மிகவும் சிறப்பானது என்பர். இந்த நாளும் பிதிரர்களுக்குரிய நாளாகும். தாயை இழந்தோர் இந்நாளில் விரதமிருந்து வழிபடுவர். குறிப்பாகச் சித்திராப் பௌர்ணமி இந்துக்கள் வாழ்வில் மிக

முக்கியம் வாய்ந்த நாளாகும். அத்துடன் எமது பாவ புண்ணியங்களைக் கணக் கெடுத்து யமதர்மனிடம் கொடுக்கும் பணியைச் செய்பவர் சித்திரகுப்தர் ஆவார். சித்திராப் பௌர்ணமியில் தான் அவர் அவதரித்தார். எனவே அந்நாளில் அவரைப் பூசித்தால் பாவங்கள் குறையும் என்பர். இந்நாளில் சித்திரைக் கஞ்சி ஆக்கிப் படைத்து வழிபடுவது இந்துக் களின் வழக்கம்.

வைகாசி விசாகம் சரவணப் பொய்கையில் முருகப் பெருமான் திருவ வதாரம் செய்த நாள். கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி விளக்கீடாக கொண் டாடப்படுகின்றது. சிவனது நெற்றிக் கண்ணிலேயிருந்து தோன்றிய ஒளிப் பிழம்பு சரவணப் பொய்கையில் குளித்து, குழந்தை முருகனாகிய கதை புராணங்களில் உண்டு. தை மாதத்தில் வரும் பௌர்ணமி தைப்பூசமாக முருகனுக்கு உகந்த தினமாகக் கொண்டா டப்பட்டு வருகின்றது. எனவே ஒவ்வொரு பௌர்ணமியும் சமய ரீதியில் சிறப்பான நாளாகவே கொள்ளப் படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் பௌத்தர்களுக்கும் உரிய புனித நாளாக பௌர்ணமி விளங்குகின்றது. புத்த பெருமான் பரிநிர்வாணம் அடைந்த தினமாக பௌர்ணமி பௌத்தர்களால் வழிபடப்படுகின்றது. அத்தகைய தினத்தில் இறைவழிபாடு, தான, தர்மம் என்பன மிகச் சிறப்பாகச் செய்யப்படுகின்றது. இத்தகைய முக்கியத்துவம் மிக்க நாளே அரச விடுமுறையாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அழகியல் சிந்தனையோடு நோக்கு வோமாயின் நிலவைப் பாடாத கவிஞர் களே இல்லை எனலாம். குழந்தைகள் முதல் முதியோர் வரை, பாமரர் முதல் பண்டிதர் வரை நிலவை இரசிக்காதவர்கள் இல்லையென்றே கூறி விடலாம். கவிஞர்கள் தாம் இலக்கியத்தின் பெண் கதா பாத்திரத்தின் முகத்தை நிலவுக்கு உவமைப்படுத்துவதே பெரும்பான்மை யாகும். அன்று அன்னை நிலவைக் காட்டி உணவூட்டிய சின்னஞ்சிறு சிட்டுக்களே இன்றும் நிலவைப் பாடி வரும் சிறப்புண்டு. பாட்டுக் கொரு புலவன் பாரதி நிலவை ஒரு தீவு என்கின்றான்.

**எல்லையில்லாதோர் வானக் கடலிடை**
**வெண்ணிலவே - விழிக்**
**கின்பமளிப்பதோர் தீவென்றிலங்குவை**
**வெண்ணிலாவே.**
**சொல்லையும் கள்ளையும் நெஞ்சையும்**
**சேர்த்தங்கு**
**வெண்ணிலாவே - நின்றன்**
**சோதி மயக்கும் வகையாது தானென் சொல்**
**வெண்ணிலாவே.**

இத்தகைய கவி வளத்தை நல்கும் நிலவு நாளை முழுநிலா நாள் எனக் கலைவிழா எடுத்து மகிழ்ந்தனர் நம் பெரியோர் அதை இன்றும் தொடர் கின்றார்.

சுவாமி விபுலானந்தர் நிலவோடு உரையாடுகின்றார். தனக்கு ஏற்பட்ட

சந்தேகத்தைத் தீர்த்து வைக்கும் தகுதி சந்திரனுக்குண்டு என்று கருதியதால் நிலவிடம் வினவுகின்றார்.

**தாழ்வதுவும் மடிவதுவும் தரணியில்**
**வந்துதித்தோர்**
**தாவில் புகழ் நலம் பெருக்கித் தண்ணளி**
**சேர்த்தனராய்**
**வாழ்வதுவு மெத்திறத்தால் வந்தன காண்**
**என்றேன்**
**வான்மதிய மெனை நோக்கி மானிடவா கேட்டி**
**மாய்தலெனும் பேருண்மை பிறத்தலெனு**
**முண்மை**
**வந்துதித்தோர் தொல்லுலகில்வளர்தலெனு**
**முண்மை**
**தேய்தலெனு முண்மையிவை யாருமுளங்**
**கொள்ளச்**
**சென்று தேய்ந் திறந்துதித்து நின்ற**
**வளர்கின்றேன்.**

விபுலானந்தருக்கும் சந்திரனுக்கு மிடையிலான உரையாடல் மானிட வாழ்வின் தத்துவத்தையே எமக்குக் கற்பிக்கின்றது. இவ்வாறு கவிஞர்களின் கவித்துவத்திற்குப் பொருளாகத் திகழ்வதாக பௌர்ணமி நாள் முழுநிலா அமைவது குறிப்பிடத்தக்கது.

நபி பெருமானின் அவதாரத்தைக் கூற முற்பட்ட உமறுப்புலவர்

**பெருகிய கோடிசந் திரப்பிர காசமாய்**
**வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே**
**கருணைவீற் றிருந்தசெங் கமலக்**
**கண்ணினைத்**
**திருநபி வருமவ தாரஞ் செப்புவாம்.**

என்று சீறாப்புராணத்தில் விளம்புகின்றார்.

இவ்வாறு புலவர்களாலும், கவிஞர்களாலும் மற்றுமுள்ள கல்வியியலாளர்களாலும் போற்றியும் தூற்றியும் ஏற்றியும் பாடிய வெண்ணிலவுக்குக் கலைவிழா எடுத்து மகிழ்கின்றார் உலக மாந்தர். சமயம், மொழி, இனம், கலாசாரம், பண்பாடு, நாகரிகம் அனைத்தையும் கடந்து எல்லோரினதும் பாடு பொருளாயும், மாறிவிட்ட முழுநிலா நாளில் சமுதாயத்தின் அடிநாதமாய் விளங்கி புதிய நாகரிக வருகையால் மறைந்து விடத் துடிக்கும் கலைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் விழாவாக ஈழத்தில் முழுநிலா நாள் கலைவிழா கொண்டாடப் பட்டு வருகின்றது. வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் 12 வலயங்களும் வருடத்தில் வரும் 12 பௌர்ணமிகளையும் தமதாக்கி அந் நாளில் கல்வியிற் பெரியோர், கலை வல்லுநர்கள், கலை ஆர்வலர்கள் எல்லோரையும் ஒன்று திரட்டி விழா எடுத்து மகிழ்கின்றன.

அந்த வகையில் கடந்த ஆடித் திங்கள் (10.08.2014) முழுநிலா நாள் கலைவிழா தென்மராட்சிக் கல்வி வலயத்தால் சாவகச்சேரி இந்து கலாசார மன்றத்தில் நடத்தப்பட்ட போது மண்டபம் நிறைந்து இருந்தது. கலை ஆர்வமுள்ளோரால் மட்டுமன்றி கலை ஆற்றுகைகளாலும் நிரம்பியிருந்தது. சாவகச்சேரி பிரதேச செயலக முன்றிலில் இருந்து ஆரம்பித்த பண்பாட்டு கலாசார ஊர்வலங்கள் தொடர தென்மராட்சியின் கல்விக் கூடங்களின் மாணவர்களின் கலை ஆற்றுகைகளுடன் விருந்தினர்களை அழைத்துத் தென்மராட்சிப்பதி மட்டுமன்றி இயற்கையும் ஒருகணம் களிப்பில் ஆழ்ந்திருந்தது.

◆◆◆

## கலாசார ஊர்திகளின் பவனி












EDUCATION


PETCO





# ஆடித்திங்களுக்கு அழகுசேர்த்த அன்பினைந்திணை பற்றிய ஒரு பார்வை

**திருமதி வளர்மதி நகுலேஸ்வரதாசன்**
ஆசிரியர், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

சங்ககால மக்கள் இயற்கையான நிலப்பண்பு, அதற்கியைந்த வாழ்க்கை முறை, தொழிலமைப்பு சமூகக்கட்ட மைப்பு என்பவற்றைக் கொண்டு காதலும் வீரமும் சிறப்புற வாழ்க்கையை மேற் கொண்டனர். இயற்கையுடன் பின்னிப் பிணைந்திருந்த வாழ்க்கையில் மக்கள் வாழ்ந்த நிலமானது பிரதான இடத்தைப் பெறுகின்றது. அதாவது நிலமானது மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி, காடும் காடு சார்ந்த இடமாகிய முல்லை, வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதம், கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல், மணலும் மணல் சார்ந்த இடமுமாகிய பாலை என ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது.

இந் நிலங்களில் வாழ்ந்த மக்கள் முறையே குறவர், ஆயர், உழவர், பரதவர், மறவர் என அழைக்கப்பட்டனர். இவர் களுக்குரிய ஒழுக்கங்களான புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்பன 'அன்பினைந்திணை' என்று சிறப்பித்துக் கூறப்படும் தூய காத லொழுக் கங்களாகும். அவை முறையே குறிஞ்சிக்குப் புணர்தலும், முல்லைக்கு இருத்தலும் மருதத்திற்கு ஊடலும், நெய்தலுக்கு இரங்கலும், பாலைக்குப் பிரிதலும் சிறப்பாக உரிய ஒழுக்கங்களாக உள்ளன.

இவ் ஐவகை நிலங்களின் அக வாழ்வு விந்தைகள் வருவதற்கான சூழ்நிலை, தொழில் அமைப்பு, குடும்பக் கட்டமை ப்பு என்பவற்றை அங்குள்ள கரு உரிப் பொருள்களினூடாகக் கதை மாந்தர்களாக எழுபது மாணவர்களின் பங்களிப்பில் உருவாகியது தான் "அன்பினைந்திணை" என்ற நாட்டிய நாடகம். இது செய்திகளை நிஜமாகக் காட்டியது மட்டுமல்ல முழு நிலா நாள் கலை விழாவை முழுமையாக்கு வதற்கு எழுச்சியுடன் அரங்கேறப்பட்டது. மாற்றமுறும் நவீன உலகில் மறந்து போன தமிழர்களின் கலை, பண்பாடு, பொருளா தாரம், தூய காதலொழுக்கம் போன்ற வாழ்வியல் அம்சங்களைப் பரதநடன உடைக்குள் புகுந்து மேடையில் காட்சி தந்து இசைக்கேற்ற பதம் அமைத்துத் தாளத்திற்கேற்ற நர்த்தனங்கள் புரிந்து பார்ப்போர் அனைவரையும் பரவச மூட்டச் செய்தனர் தென்மராட்சி பெற் றெடுத்த மாணவச் சிட்டுக்கள். இவர்கள்

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மகளிர் கல்லூரி, உசன் இராமநாதன் ம.வி, மீசாலை வீரசிங்கம் ம.க., கச்சாய் அ.த.க. பா., மிருசுவில் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்தவர்கள். இவ் "அன்பினைந்திணை" என்ற கருத்திற்கு ஏற்ற நாட்டிய நாடகத் தினை எழுதி, இசையமைத்து, பாத்திரங் களுக்கேற்ற நடிப்புகளைச் செய்வித்த பெருமை இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. கு. ஜோதிரட்ணராஜா அவர்களுக்கே உரியது. இதனை நெறியாள்கை செய்து பலரையும் இரசிக்கக் கூடியதாக ஆக்கிய வர் நடன ஆசிரியர் ஆலோசகர் திருமதி விஜித்தா சுனில் ஆரியரத்னா அவர்கள். நாட்டிய நாடகத்தின் எழுச்சிக்கு இசை மழை பொழிந்தவர்கள் யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி ம. லோகிசன், இந்துக் கல்லூரி ஆசிரியர், திரு. க. ஜோதிரட்ணராஜா என்றால் மிகை யாகாது.

மேலும் நாட்டிய நாடகத்தில் வரும் தினைப்புனக் காட்சி, முல்லை நிலக் காட்சி, வயற்காட்சி, கடலில் மீன்பிடிக்கச் செல்லும் காட்சி, பாலை நிலத்து செம்பில் நீர் கொண்டு செல்லும் காட்சி போன்றவற்றை மாணவர்களிற்கு நடனக் கலையில் பயிற்றுவித்து அரங்கு காணச் செய்த பெருமை தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆசிரியர்களான திருமதி. த. பீதாம்பரன், திருமதி ச. மதுரன், திருமதி தி. சத்தியேந்திரம்பிள்ளை திருமதி ஐ. சிவநாதன், திருமதி கா. றோகான்குமார் என்பவர்களுக்கே உரியது. சுருங்கக் கூறின் ஆசிரியப் பெருந்தகைகளின் இசை, நடனத்துறையிலுள்ள ஆர்வமும், கடின உழைப்பும் தொடர் பயிற்சியும் அர்ப்பணிப்புமே இவ் அரங்க நிகழ்ச்சி பலரின் உள்ளங்களையும் கவரச் செய்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இம் மாணவச் சிட்டுக்களின் உடல், அங்க அசைவில் விந்தைகள் புரிந்த வினோதமான காட்சியைக் கண்டுகளித்த, பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தி னர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உட்பட அனைத்து இரசிகர்களின் கூட்டமும் கண்களை இமைக்க மறந்து விட்டார்கள். கல்லிலே செதுக்கிய சிற்பம் போல மௌனமாக இருந்து இசை இன்பத்தை, கண்ணுக்கு விருந்தாகும் நடனத்தைப் பார்த்து உள்ளம் உவகையடைந்தனர். இன்று இவ் உணர்வு அவர்களின் மனங்களில் கல்வெட்டாகி விட்டது.

ஆம் நாம் அனைவரும் சிறகடிக் கும் சிட்டுக்களின் மகோன்னதமான ஆற்றுகையின் நுட்பங்கள், சிறப்புகளைப் பகிர்ந்து கொள்வோம். நாட்டிய நாடகத்தின் ஆரம்பத்தில் ஐவகை நிலங்கள் பற்றியும் அவற்றிற்குரிய விளக்கங்கள் பற்றியும் உரைஞர் விளங்கக் கூறிக் கொண்டிருந்தனர். அந்த வேளையில்,

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு**
**சங்கத் தமிழ் நூல் சாகரம் தன்னிலே**
**எங்கள் நிலங்கள் ஐவகை உண்டாம்"**
**வயலொடு வயலும் வளமிகு நிலமாம்**
**பயின்றிடும் நிலமாம் மருதம் அதுவே...**

என்ற பாடல் இசைக்க ஐவகை

நிலங்களிலும் நடைபெறும் நிஜமான வாழ்க்கையை நடனக் கலை மூலம் சித்திரித்துக் காட்டினார்கள். தலைவனாக நிமிர்ந்த நடை நேர்கொண்ட பார்வை கொண்ட அழகு மிளிரும் வேணுகானனும் (பல்கலைக் கழக மாணவன்) தலைவியாக அழகிய மானைப் போன்ற சாயலுடைய நிதர்சனாவும் தோழியாக நிசாயினியும் ஆற்றுகையை அலங்கரித்து அழைத்துச் சென்றமை அனைவரையும் கவர்ந்து நின்றது.

மேற்கூறப்பட்ட ஐவகை நிலங்களுக்குரிய ஒழுக்கங்களை நாட்டிய நாடகத்தின் மூலம் கவின் தரும் காட்சியாக ஆற்றுகை செய்த பாங்கினை நோக்கின், மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் தமது உணவிற்காக வேட்டையாடுதல் தினை விதைத்தல், முதலிய தொழில்களைச் செய்து வந்தனர். தினை விளையுங் காலத்தில் அந்நிலத்து இளம் பெண்கள் பகற்பொழுதில் காத்து நிற்க ஆடவர் வேட்டையாடச் செல்வதும் வழக்காறாயிருந்தது. வேட்டை மேல் மனங்கொண்ட காளையரும் தினைப் புலங்காத்து நின்ற கன்னியரும் காதல் கொள்ளுதல், பின் தோழியானவள் காதற்பயிரை வளர்த்தல், தலைவனுடன் சேர்த்தல் என்பன நடை பெறும். இதனால் குறிஞ்சி நிலத்திற்குரிய காதலொழுக்கம் புணர்தல் எனப் பட்டது.

இங்கு நாட்டிய நாடகத்திலும் மாணவச் சிட்டுக்களின் குறிஞ்சி நிலக் காட்சியும் புணர்தல் ஒழுக்கமும் வெளிப்படுத்தப்பட்ட அழகிய கலை இன்பத்தை நாம் அனைவரும் பார்த்து இரசிக்க வேண்டாமா? ஆம் பார்ப்போம் இரசிப்போம். அங்கே பாருங்கள் வேங்கைப்புலி ஒன்று வேகமாக ஓடி வருகின்றது" என்கிறாள். தலைவி. இது கேட்ட தலைவன் ஓடோடி வந்து வேங்கைப்புலியைப் போரிட்டுக் கொல்கிறான். இந்தக் காட்சியில் தன்னைக் காப்பாற்றிய தலைவனின் அழகில் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றாள் தலைவி. இதனால் தோழியை நோக்கித் தலைவி

**முன்னே வந்து என் முகம் நோக்கி**
**என்னே பிரிந்தான் அவன் யார் தோழி**
**கடலென விரிந்த மார்பும் கல் என நிகர்த்த தோளும்**
**கண்டு என் உயிர் அவனுள் கலந்ததடி....**

என்கிறாள்

அதேவேளை தலைவனும் அவன் மேல் காதல் கொண்டு "வெற்றுடம்பு நின்று இங்கு வேகுதே...." என்று தவிக்கின்றான். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்பதற்கிணங்க இருவரும் புணர்கின்றனர்.

**காதலில் இணைந்து கொண்டோம்**
**களவினில் இன்பங்கண்டோம்...**

என்று கூறியபடியே தலைவன் தலைவியை அணைத்தபடியே செல்லுங் காட்சி ஈருடலும் ஒருயிரும் என வாழும் தம்பதிகளின் இல்லற இன்பத்தை நினைவிற்கு அழைத்தது.

அடுத்து காடும் காடுசார்ந்த இடமுமாகிய முல்லை நிலத்தில் வாழ்ந்தோர் ஆயர் எனப்படுவர். இவர்கள் பண்டைக் காலத்தில் மந்தை மேய்த்தல் தொழிலையே செய்து வந்தனர். தமது நிலத்தினையும் மந்தைகளையும் பகைவரிடத்துக் காத்தற் பொருட்டு தமது எல்லைப் புறங்களுக்குச் சென்று பாடி வீடு அமைத்துச் சில நாள் தங்கியிருந்து படையினை அடக்கி மீளுதல் வழக்கமாயிருந்தது. எனவே தலைவன் திரும்பி வரும் வரையினும் "போரில் கலந்திடப் பிரிந்து சென்றவன் தோழில் தவழ்ந்திட வரவில்லையே " என்று கூறிக் கொண்டு தலைவியானவள் துன்ப மிகுதியில் வேரில் பழுத்த பலாப் போல் விழிநீர் பெருக இருத்தல் வழக்கமாக இருந்தது. இதனால் முல்லைக்கு இருத்தல் என்பது தூய காதலொழுக்கமாகக் கூறப் பட்டது. இத்தகைய ஒழுக்கத்தை நாட்டிய நாடகத்திலும்

**எல்லைப் புறத்தில் எதிரிப்படைக்கு**
**அல்லல் படுத்தி சுடுகளம் அமைத்து**
**தன்னைக் கொண்ட காதலி பிரிந்து**
**தலைவன் போரிலே வீர வேல் ஏந்தி வருவான்**
**என்று தலைவி இருப்பாள் முல்லை நிலத்தில்**

என்ற பாடலுக்கு நடனம் ஆடியது வீர உணர்வு மிக்கவர்கள் தமிழர்கள் என்பதைத் துல்லியமாகக் காட்டியது. மன்னனாக வந்த மாணவி பபிலா போருக்கு அறை கூவுமாறு கட்டளை இட்டதும் எதிரிப்படை வந்துநேருக்கு நேர் சண்டையிட்டு மாண்டுபோன காட்சியும் மிகவும் உணர்வு பூர்வமான தாகப் பலரது உள்ளங்களையும் உறைய வைத்தது. "பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ" என்பதற்கிணங்க போர் முடிந்து வந்த தலைவனுடன் தலைவி மகிழ்ந்திருந்த மகோன்னதமான காட்சி அனைவருக்கும் இன்பத்தை அளித்தது.

வயலும் வயல் சார்ந்த நிலமுமாகிய மருத நிலம் பிற நிலங்களிலும் வளம் மிக்கது. நீர்வளம் பொருந்திய இந்நிலத்தில் உழவுத் தொழிலை மேற்கொண்ட மக்கள் செல்வச் செழிப் புடையவர்களாக விளங்கினர். எனவே தமது ஓய்வு நேரத்தை ஆடல், பாடல் முதலிய இன்பக்கலைகளை விருத்தி செய்தலிலும் அறிவை வளர்த்தலிலும் செலவிட்டனர். மருத நிலத்து ஆடவர்கள் இராக்காலத்தில் இன்பக்கலை வல்ல பாணரும் பரத்தையரும் வாழுமிடஞ்சென்று அவர் செய்யும் ஆடல் பாடலில் ஈடுபட்டு இன்புற்று வாழ்ந்தனர். அவ்வாறு மருதநிலத்து ஆடவர் இரவுப்பொழுதில் பெரும்பாகத்தைப் பரத்தையர் வீட்டில் கழிப்பதை விரும்பாத அவர் மனைவியருக்கு ஊடல் விளைவிப்பதாயிற்று. ஊடலுற்ற தலைவி பின்னர் தலைவனின் காதல் வார்த்தையில் கனிந்து கூடல் மேற் கொள்ளுதல் வழக்கமாயிருந்தது. எனவே மருதத்திற்குரிய காதலொழுக்கம் ஊடல் என்பதாகும்.

ஆம், நாட்டிய நாடகத்தில் அவர்கள் ஊடல்பெற்ற காட்சியை ஒருகணம் நோக்கின் வயல் உழுது பயிர்செய்த காட்சி "கார்மேகம் பொழிந்ததடி காளை பூட்டி நாம் நடப்போம்" என்ற பாடலுக்கு ஆற்றுகை செய்தனர். மிகமிகச் சிறப்பாக இருந்தது. அதனைத் தொடர்ந்து ஊடல் பெற்ற காட்சியை ஒருகணம் நோக்கின் தலைவன்

**"வளம் எல்லாம் நிறைந்தது உளம்**
**எல்லாம் குளிருது.**
**கட்டுடல் கண்டு பரத்தைமேல் என்மனம்**
**தட்டுது தாவுது மோகத்தால் மோதுது**
**கிட்டவே அணைத்துக் கொஞ்சிடக் கூறுது...**

என்ற பாடலுக்கு நடனம் ஆடியமை அனைவரையும் மகிழ வைத்தது. பரத்தை யாக வந்த நிதுஷா மிகவும் சிறப்புற ஆடின காட்சி மகத்தானது.

வெல்லம் போல் பரத்தையின் உடலைச் சுவைத்து தனக்கென ஒருத்தி இருப்பதையும் எண்ணிப்பார்த்திடவே இமைப்பொழுதும் நேரமின்றி கண்ணிக் குள் அகப்பட்ட பறவைபோல் தடுமாறு கின்றான்.

அதன் பின் தலைவன் பரத்தை யரைப்பிரிந்து தலைவியிடம் வருகின் றான். அவள் தலைவன் மேல் ஊடலுற்று

**"இத்தனை நேரமும் எங்கு நீ போனாய்**
**பரத்தையர் நாடியோ போனாய் பாவி**
**வைத்துமே என்னை மனதில் வெறுத்து**
**சென்றிட மனமும் வந்ததோ உனக்கு"**

என்று ஆத்திரத்துடன் பேசுகின் றாள். ஆனால் தலைவன் அதற்குப் பயப் படவில்லை. மீண்டும்

**"கண்ணே கனிரசமே கோபம் வேண்டாம்**
**கண்மணி உன்னைக் கனவிலும் மறவேன்"**

என்று அன்பு ததும்பக் கூறி, கட்டி அணைக்க அவர்கள் இருவரும் கூடுகின் றனர். அந்த வேளை தலைவனின் சிரிப்பு தலைவியின் மகிழ்வும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இதில் "ஊடுதல் காமத்திற்கின்பம்" என்ற வள்ளுவரின் குறளின் அர்த்தம் புலப்பட்டது.

அடுத்து கடலும் கடல் சார்ந்த நிலமுமாகிய நெய்தல் நிலத்தில் மீன் பிடித்தல், உப்பு, விளைவித்தல் முதலிய வற்றைத் தொழிலாகக் கொண்ட பரதவர் வாழ்ந்தனர். மீன்பிடித்தலுக்காகப் படகிலேறிக் காலையில் சென்ற ஆடவர் மாலைக்குமுன் திரும்பிக்கரைக்கு வராவிடின் அவர் மனைவியரும் பிறரும் அந்திப் பொழுதில் அவரை நினைத்துத் துன்புறுவர். அக்கடற்கரைப் பிரதேசம் ஆடவரும் இளமங்கையரும் பிறரறியாது ஒருவரை ஒருவர் கண்டு தம்முட் காதல் கொள்வதற்கேற்ற புன்னை, தாழை முதலிய மரங்கள் செறிந்த வெண்மணற் குன்றுகளையுடையது. அவற்றின் கண் நாள் தோறும் காதலனைக் கண்டு இன்புறுங் காதலி ஒருநாளைக்காயினும் அவளைக் காணாவிடில் துன்புறுவள்.

சில நாட்களாகப் பகல் முழுவதும் காத்து நின்றும் அவனைக் காணாத விடத்து அவன் தன்னை விட்டொழிந் தானோ என்றும் கவலை அவள் மனத்தை உறுத்துவதனால் அவளுக்கு இரங்கல் உண்டாகின்றது. இதனால் இரங்கல் என்னும் அகத்திணை யொழுக்கம் நெய்தல் நிலத்திற்கு உரியதாகக் கொள்ளப் பட்டது.

நாட்டிய நாடகத்தின் புத்தம் புது மலராய் இருக்கும் மாணவர்கள் பார்வை யாளர்கள் அனைவரையும் கடற்கரைக்கு இழுத்துச் சென்று விட்டார்கள். ஆம்

**"ஏலேலோ ஏலோலோ ஏலேலோ என்று**
**ஆலோலம் பாடியே நாங்களும் இன்று**
**ஓராவும் உழுவையும் ஒட்டியும் நண்டும்**
**காரலும் காணும் கடலினடியைத் தேடி..."**

என்ற பாடலின் வசம் தான் என்ன! என்ன பிரமாதம் அத்துடன் கடலிற்குள் செல்லும் தலைவன் காற்று அதிகமாக வீசும் வேளையில் கடலிற்குள் படகு மூழ்கும் நிலையும் ஏற்படவே சிலவேளை வராமலும் விடுவான் என்று எண்ணி ஏங்கித் தவித்தபடி இருப்பதனால்

**"வலை கொண்டு துடுப்பெடுத்துப் போகையிலே**
**உலையெனவேகொதிக்கிதிங்கு உள்ளமது**
**நிலையில்லா வாழ்க்கை யிது நிம்மதியே இல்லையே..**

என்று தலைவி சொல்லும் தன்மை அனைவருக்கும் துன்பத்தையே தருகின்றது. இவ்வாறாக இரங்கிக் கொண்டிருக்கும் தலைவி

**"தாழைமர வேலிகளே! புன்னைமரப் பூந்தளிரே!**
**என்னை விட்டுப் போன மன்னர் இன்னும் வரக் காணலை**
**உடல் மட்டும் இங்கிருக்க உள்ளமது அவனிடத்தில்**
**உடல் வருத்தம் அறிவீரோ உள்ளமதைப் புரிவீரோ"**

ஏங்கித் தவிக்கின்றேன். இரங்குகின்றேன் என்று அழுகிறாள். கண்கள் சந்திக்கின்ற கடற்கரையிலே கணவனை நினைத்து ஏங்குகின்ற அவலம் சொல்லிலடங்கா எனினும் மனதில் உறுதி கொண்டு என் மேல் உருகுகின்ற அன்பர் என்னைப் பிரிந்து போவாரோ! போகார்! போகார்! இல்லை என்னை விட்டுப் போகார் பிரியார்! பிரியர்! அவர் என் பிரியர் என்று மனத்தைத் திடப்படுத்திக் கொள்கின்றாள்.

இறுதியாக மணலும் மணல் சார்ந்த பிரதேசமுமாகிய பாலை நிலத்தை நோக்கின் குறிஞ்சி, முல்லை முதலிய செழிப்புள்ள நிலங்களுக்கிடையேயுள்ள பரந்து கிடந்த வரட்சி பொருந்திய பிரதேசம். இது பசுமையிழந்து காணப்படுவதனால் அங்கு வாழும் மக்கள் தமக்குரிய உணவுப் பொருட்களை அந்நிலத்திலிருந்து பெற முடியாமல் இருந்தனர். எனினும் செழிப்புள்ள அந்நிலங்களைத் தொடுத்து நின்ற வழிகள் பல பாலை நிலத்தினூடாகச் சென்றன. அவ்வழிகளால் பயணிக்கும் மக்கள் கொண்டு செல்கின்ற பொருட்களைப் பாலை நிலத்தில் வாழ்ந்த மக்கள் சூறையாடுதல் வழக்கமாக இருந்தது. இவ்வாறு சூறையாடுதலைத் தொழிலாகக் கொண்ட தலைவன் தொழில் நிமித்தமாக இடையிடையே தனது காதலியையும் விட்டுப் பிரிந்து செல்லுதல் வழக்காறா யிற்று. எனவே பாலைக்குரிய காத லொழுக்கம் பிரிதல் எனப்பட்டது.

பாலை நிலத்தின் காட்சியையும் சூறையாடலையும் காட்ட வந்த மாணவச் சிட்டுக்களின் நர்த்தனங்கள் தான் எத்தனை எத்தனை. ஆம் நாம் ஒரு கணம் பாலை நிலத்தினூடாகப் போய்ப் பார்ப்போம்.

**"நிலம் பிளந்து தலைவெடிக்க சுடும்**
**கதிரும் எறிக்க**
**வளம் இழந்த நிலத்தின் வழி நாம்**
**நடக்கின்றோம்**
**வேழும் புலி வேங்கை வந்து வழி மறிக்க**
**சூழும் பகை தமை விலக்கி நாம்**
**நடக்கின்றோம்"**

என்ற பாடலுக்கு சாக்குப் பொதிகள், சேலை முடிச்சுப் பொதிகள், உணவுப் பண்டங்கள், தண்ணீர்க் குடங்கள் என்பவற்றைத் தலையில் சுமந்த வண்ணம் களைத்துச் செல்கின்றார்கள். சூறையாடச் சென்ற தலைவன் அவர்களை அடித்து விழுத்தித் தாக்கி அவர்களது பண்டங்களைப் பறிக்கின்றான். சில வேளைகளில் மோதல் அதிகரித்து தலைவன் நிரந்தரமாகவும் பிரிவான். எனவே தான் தலைவன் சூறையாடி பொருட்களைப் பறித்தமை. அவர்களை வீரத்துடன் விழுத்தியமை அனைத்தும் பாராட்டற் குரியது. ஆனால் தலைவனைப் பிரிந்த தலைவிக்கு வருவான் வருவான் என் தலைவன் என்று வழிமேல் விழி வைத்துப் பார்த்தபடிதான் ஆழ்ந்த சோகத்தில் உள்ளாள்.

இறுதியாக நாட்டிய நாடகத்தில் ஆற்றுகை செய்த எழுபது மாணவச் சிட்டுக்களும் ஒன்றிணைந்து தங்களது பாத்திரங்களுக்கு ஏற்றவகையில் பின்வரும் பாடலிற்கு நடனம் ஆடியது அனைவரையும் மெய் விதிர்விதிர்க்கச் செய்தது.

**"அகத்திணை மரபில் அன்பினைந்திணை**
**செகத்தினில் சிறந்து விளங்கியதே**
**புணர்த்தல், இருத்தல் ஊடல் பிரிதல்**
**இரங்கல் காதல் மரபுகளே"**

◆◆◆

*ஐவகை நிலமும் வாழியவே*
*மறமிக வீரத் தமிழர் வாழ்வு*
*அறமது ஓங்க வாழியவே*
*அறமது ஓங்க வாழியவே.*



# ஆடித்திங்கள் முழுமதி நாளில் சங்கமித்த கிராமியக்கலைகளும் நாட்டார் மரபுகளும்

**க. குணரத்தினம்**
ஆசிரியர், யா/உசன் இராமநாதன் ம.வி, மிருசுவில்.

'கலையின்பமே நிலையின்பம்' என்பது சான்றோர் கூற்று. கலை என்பது ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தில் உள்ள சமூகத்தின் பிரதிபலிப்பாகும். வாழ்ந்த அல்லது வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகத்தை அப்படியே பிரதிவிம்பப் படுத்திக் காட்டும் கண்ணாடியே கலையாகும். இது தகவல் ஊடகமாக, பொழுது போக்கு விடயமாக, கலாசார பாரம்பரியங்களைத் தரிசனப்படுத்தும் பலகணியாக விளங்குகின்றது. கலைகள் மன உணர்வுகளின் வெளிப்பாடு குறிப்பாக நாட்டுப்புறக்கலைகள் நம்மோடும், நமது மண்ணோடும் பிரிக்க முடியாதவாறு பின்னிப்பிணைந்துள்ளன. இவை நிலத்துள் ஆழ வேரோடி அக உணர்ச்சிகளோடு எழுச்சி கொண்டு சாகாவரம் பெற்ற ஒன்றாகத் தலைநிமிர்ந்து நிற்பது வியக்கத்தக்கதே! ஆனால் அவை இனிவருங் காலங்களில் தரங்குன்றாது தரணி போற்ற வாழுமா சாகடிக்கப்படுமா என்பது கேள்வியாக உள்ளது.

தமிழில் நாட்டார் கலைகளே நமது முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், மரபுசால் நெறிமுறைகள், வாழ்வியற் கோலங்கள், நடை உடை பாவனை முறைகள்.... என இன்னோரன்ன விடயங்களை வெளிப்படுத்தும் கருவிகளாக அமைந்துள்ளன. "மொழியும் கல்வியும், கலையும், பண்பாடும் எமது இனக்கூட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்களாகும்". அந்தக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் வரிசையிலே கலைக்குத்தனித்துவமானதோர் இடமுண்டு மன - உணர்வுகளின் உந்துதல்களால் வெளிப்பட்ட கிராமியக் கலை மரபுகள் அழிந்தொழிந்து போகாமல், சிதையாமல், சீரழியாமல், கலப்படங்களுக்கும், புறக்கணிப்புக்கும் இடமளிக்காது பாதுகாக்க வேண்டியதும் எதிர்காலச் சந்ததியினருக்கு மருவாது பேணிக் கையளிக்க வேண்டியதும் காலத்தின் கட்டாய மாக உள்ளது.

காலத்தின் மாற்றம் தேவை, நவீனத்தில் நாமும் இணைந்து கொள்ள வேண்டும். தொழில்நுட்பம் அவசியம் இவற்றைப் புறந்தள்ளி இன்று வாழ முடியாது. ஆனால் இதற்கு தொழில்நுட்பம் தொல்லை நுட்பங்களாக மாறி எமது இருப்பையோ, இருப்பை உறுதிப்படுத்தும்

உன்னத பொக்கிஷங்களையே நிர்மூல மாக்கும் அல்லது கபளீகரம் செய்யும் ஒன்றாக இருக்கக் கூடாது. இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தின் ஆக்கிர மிப்பு நாட்டார் மரபுக் கலைகளைப் புறந்தள்ளிவிட எத்தனிக்கின்றது. மாட்சி மிகு மனிதத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் சினிமா என்னும் சகதிக்குள் இருந்து இளையதலைமுறை இன்னும் மீண்டதாக இல்லை. அவர்கள் மீளுவதற் கான கதவுகளும் இறுகப்பூட்டப் பட்டு விட்டன.

காலத்தின் போக்கிற்கு ஏற்ப நாட்டார் கலைகள் கரைந்து போகாது, தனித்து வமும் கெடாது தடம்பதித்து நிற்க வேண்டும் என்பதே எல்லோரதும் அவா வாகும். கிராமியக்கலைகள் தொடர்ந்து நின்று நிலைப்பதற்கு அனைவரது பங் களிப்பும் இன்றியமையாத ஒன்றாகும். கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளிக்கும் கன்னித்தமிழ் தந்த கிராமியக்கலை வடி வங்கள் தூர்ந்து போகாது கரிசனையோடு போற்றிக்காப்போர் பலர் உள்ளனர். உயி ராகவே கிராமியக்கலைகளை நேசிக்கின்ற உள்ளம் படைத்தவர்களும் இருக்கின் றார்கள்.

கிராமியக்கலை வடிவங்களின் வரி சையிலே கும்மி, கோலாட்டம், கரகம், காவடி, ஒயிலாட்டம், குரவைக் கூத்து, கோணங்கியாட்டம், கணியான் கூத்து, சலங்கையாட்டம், சாமியாட்டம், சிலம் பாட்டம், தெருக்கூத்து, தேவராட்டம், பரதநாட்டியம், பாம்பாட்டம், பறை மேளக்கூத்து, பாவைக்கூத்து, புலியாட் டம், பொம்மலாட்டம், மயிலாட்டம், மகுடிக்கூத்து, வெறியாட்டு, மரக்காலாட் டம், அம்மன்கூத்து, அனுமன் ஆட்டம்... என அதன் வகை தொகை விரிந்து செல்கிறது. இவற்றிலே எல்லாம் இன்று மரபு ரீதியாகப் பேணப்படுகின்றது என்று கூறமுடியாது. பெரும்பாலான கிராமியக் கலை வடிவங்களைப் பேணுவதிலும் புத்து யிர்ப்புக் கொடுப்பதிலும் இன்று பல்வேறு தரப்பினரும் முனைப்புக்காட்டி வருகின் றமை வரவேற்கத்தக்கதே!

இவற்றிற்கெல்லாம் மகுடஞ் சூடி னாற் போல் கடந்த 10.08.2014 அன்று தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத் தால் நடத்தப்பட்ட ஆடித்திங்கள் முழுநிலா விழாவில் கிராமியக் கலைகள் நளினமுற நர்த்தனமாடியதையும் அது கண்டு தமிழன்னையும் தென்மராட்சி மக்களும் பேருவகை அடைந்ததையும் கண்ணாரக் காணமுடிந்தது. நிகழ்ச்சிக்கு விருந்தினர் கள் தமிழ்ப் பாரம்பரிய இன்னிய வாத்திய அணியுடன் அழைத்து வரப்பட்டனர். யா/ உசன் இராமநாதன் ம.வி மாணவர்களால் இந்த இன்னிய வாத்திய அணிவகுப்பு மரியாதை நிகழ்த்தப்பட்டது. சென்ற ஆண்டு பௌர்ணமி விழாவில் முதன் முதல் தென்மராட்சியில் இன்னியம் அறிமுகப்படுத்தியமை சிறப்பம்சமாகும்.

வீதி அணிவகுப்பில் யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை மாணவர் களின் "கதம்பம்" கண்ணுக்கு விருந்தாக இருந்தது. கதம்பம் என்றால் பலவற்றின் சேர்க்கை அல்லது கூட்டம் எனப் பொருள் படும். பலவகை மலர்களைக் கலந்து

கட்டிய மாலையையும் கதம்பம் என்பர். இங்கு கரகம், கும்மி, கோலாட்டம், நடனம், காவடி, அபிநயம், சீர்வரிசை எனப் பலவற்றின் சங்கமமாக இருந்தது. இது அடிப்படையில் வித்தியாசமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து குதிரையாட்டம் இதனை யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி மாணவர்கள் வழங்கினர். குதிரைக் கூடு சுமந்து அதன்மேல் சவாரி செய்வது போன்று ஆடப்படுவது குதிரையாட்டம் என்பர். இதனைப் பொய்க்கால் குதிரையாட்டம், புரவியாட்டம், புரவிநாட்டியம் என்றெல்லாம் அழைப்பர். இது இன்றும் ஆலயங்களில் வேட்டைத்திருவிழாவின் போதும் சுவாமி ஊர்பவனியாக செல்லும் போதும் ஆடப்பட்டு வருவதனைக் காணமுடிகின்றது. மற்றும் பண்பாட்டு விழாக்கள், இலக்கிய மாநாடுகளின் அணிவகுப்பு மரியாதை நிகழ்ச்சிகளிலும் காணலாம்.

அடுத்து மயிலாட்டம் நிகழ்ச்சியை யா/ கைதடி நாவற்குழி ம.வி. மாணவர்கள் செய்திருந்தனர். இதுவும் பழைய மரபுசார் கலை வடிவமாகும். மயில் தோகை விரித்தாடும் பாங்கிலே ஆடிவருவது மயிலாட்டம் ஆகும். இவர்களின் அசைவுக்கேற்ற ஏதோ ஒரு இசை வழங்கப்படும். இதுவும் அருகிப்போகாமல் இன்றுவரை ஆடப்பட்டு வருகின்றது. அரங்க நிகழ்ச்சியாகவும், வீதி நிகழ்ச்சியாகவும் இருந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. எமது உறவுகள் சொந்தங்கள் புலம்பெயர் நாடுகளிலும் மயிலாட்டம் நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றனர்.

அடுத்து ஊர்திப் பவனிகளை எடுத்துக் கொண்டால் யா/வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்கள் காத்தவராயன் சிந்து நடைக் கூத்தினை நிகழ்த்தியபடியே பவனி வந்தனர். தமிழர் மரபிலே மாரியம்மன் கூத்து அல்லது காத்தவராயன் கூத்து என்பது பாரம்பரிய ஒரு கலைவடிவமாகும். இன்றும் யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்குகளிலும் வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் காத்தவராயன் கூத்து ஆடப்பட்டு வருகின்றது. கூடுதலாக மாரியம்மன் கண்ணகியம்மன் கோவில்களில் ஆடப்படுவது வழக்கம். நேர்த்திக்காக விரதமிருந்து ஆடப்படுவது மரபு அம்மன் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் அண்ணாவியார் துணை கொண்டு நாடகத்தைப் பழகி மேடையேற்றும் வரை மாமிசமருந்தாமல் பழகி பொங்கல் நாளன்று கூத்தாடித் தமது வேண்டுதல்களைச் செய்வதைக் காப்புப் பாடல் சான்று பகர்கின்றது.

**"சின்னமுத்து கொப்பளிப்பான் - தாயே**
**சிதறு முத்து வராமலே..."**

இந்த நாட்டுப்புற அருங்கலைமரபு காற்றோடு கரைந்திடாமல் கலைஞர்கள் அண்ணாவிமார் வளர்த்து வருகின்றனர். இந்த நாட்டுப்புற இசை மரபு நகர்ப்புற மக்களையும் கவரவல்லது என்பதைத் தனது கூத்தின் மூலம் நிறுவியவர்தான் அல்வாயூர் செல்லையா விவேகானந்தன். இவரது நாடகக் குழுவினரின் நடிப்பில் அமைந்த இறுவட்டினையே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் வெளியிட்டமை இங்கு நோக்கத்தக்கதாகும். யாழ்ப்பாணத்தில் அல்வாய்,

மாதனை கூத்து மரபுகளையே எல்லோரும் விரும்புவர். அவர்களின் நடிப்பில் தரம் இருப்பதை முன்னையோர் கூறுவர். மாரியம்மன் வரலாற்றோடு தொடர் புடைய இக்கதையில் மாரியின் மகனான காத்தான் ஆரியப்பூமாலையைக் காதலித்து திருமணம் செய்யும் வரலாறு சுவைபடக் கூறப்படுகின்றது. இதனை அன்று வீரசிங்கம் மத்தியகல்லூரி மாணவர்கள் தத்துவ ரூபமாகக் காண் பித்தனர். எமது பாரம்பரிய கலைவடிவங் களுக்குப் புத்துயிர்ப்பு அளிப்பதாக இவை இருந்தன எனப் பலரும் கருத்துக் கூறினர்.

ஊர்தி பவனியில் அடுத்து வில்லுப் பாட்டு தமிழரின் பாரம்பரியக் கலைவடி வம் என்பதைக் கட்டியம் கூறி வந்தனர். யா/மட்டுவில் சந்திர மௌலீசா மாணவர் கள் வில்லுப்பாட்டு என்பது வில்லில் அடித்துப் பாடுதலாகும். இதனை வில் லிசை எனவும் அழைப்பர். ஆரம்பத்தில் குறிஞ்சி நில வேடுவர்கள் வேட்டைக்குச் சென்று பொழுது போக்கிற்காக அம்பி னால் தமது வில்லில் அடித்துப் பாடியதாக வும் இதுவே பிற்காலத்தில் வில்லிசை யாகப் பரிணமித்ததாகவும் கூறப்படுகின் றது. ஐந்து, ஆறுபேர் கொண்ட குழுவில் குரு நடுவில் இருந்து கதை சொல்லிப் பாடு வார். பக்கவாட்டில் சிஷ்யர்கள் இருப்பார் கள். ஏனையோர் வாத்தியங்கள் வாசிப் போராகவும் இருப்பர்.

இந்த வில்லுப்பாட்டு இன்று சில வரையறைகளுடன் முழுவடிவம் பெற்று விட்டது. மொத்தம் ஏழுபேர் இருப்பர். குரு வில்லிசைத்துக் கதைகூறிப் பாடுவார் ஏனையோர், கதை கேட்போர் இரண்டு பக்கத்திலும் இருப்பவர்களே குருவுடன் சேர்ந்து கதைத்து கதையை வளர்த்துச் செல்வர். கடம், ஹார்மோனியம், உடுக்கு, அல்லது மிருதங்கம் என்பன பயன்படுத்தப் படுகின்றன. வில்லுப்பாட்டு காப்பு, கடவுள் வணக்கம், சபை வணக்கம், கதையாரம்பம், கதைத் தொடர்ச்சி, கதை முடிவு, மங்களம் என்ற வரன்முறையில் நடைபெறுவதைக் காணமுடிகின்றது. யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஸ்ரீதேவி வில்லி சைக் குழுவினர் மற்றும் சின்னமணி வில்லிசைக் குழுவினர் தடம் பதித்துச் சென்றவர்கள். இவர்களின் தடம் பற்றியும் தனித்துவமாகவும் பல வில்லிசைக் குழுவி னர் உருவாகி இன்று யாழ்ப்பாணத்தில் கோவில்கள் தோறும் வில்லிசை நிகழ்ச்சி யினை நடத்தி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

கிராமிய மரபுசார் வழிபாடுகள், நம்பிக்கைகள் என்றும் நீங்காது மக்கள் மத்தியில் நின்று நிலவுவதைக் காண முடிகின்றது. இதனைச் சித்திரிக்கும் வகை யிலே யா/கைதடி விக்னேஸ்வரா வித்தி யாலய மாணவர்களின் ஊர்திப் பவனி அமைந் திருந்தது. கிராமியத் தெய்வங் களை நம் பிக்கை பூர்வமாக வழிபடுகின்ற மரபு தமிழர் சால்பிலே மிகவும் தொன்மை யானது. இயற்கையிலேயே ஆரம்பத்தில் மனிதன் வாழத்தலைப்பட்டான். தனது சக்திகளுக்கு அப்பாற்பட்ட இயற்கையை இயற்கையாகவே வழிபட்டான். உருவ நாமங்களைக் கற்பித்து வழிபட்டான். இதனால் கிராமிய வழிபாடுகள் வளர்ச்சி பெற்றன. மலைகள், மரங்கள், நதிகள்,

கடல் என்பவற்றோடு காடுகள், வயல்கள், மனைகள் என்றும் பல இடங்களிலும் நினைவு கூர்ந்து வழிபட்டனர். இவற்றையே சங்ககால ஐவகை நிலங்களுடன் தொடர்பு படுத்தி

**"மாயோன் மேய காடுறை உலகம்**
**சேயோன் மேய மைவரை உலகம்**
**வேந்தன் மேய பெருமணல் உலகம்**
**வருணன் மேய தீம்புனல் உலகம்"**

எனத் தொல்காப்பியனார் தெய்வங்கள் வழிபட்டமையைக் குறிப்பிடுகின்றார். அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முறையே முருகன், மாயோன், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய தெய்வங்கள் வழிபடப் பட்டன. இவற்றின் வழிவந்தவையாகவே இன்று மாரி, காளி, கண்ணகி, ஐயனார், முனியப்பர், நாச்சிமார், வீரபத்திரர், வைரவர்... எனப் பல தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. இந்த வழிபாடு சாதாரண மக்களாலே நடத்தப்படும். பண்டமெடுத்தல், பறையடித்துக் கலையாடுதல், உடுக்கடித்துப் பாடுதல், வழந்து நேருதல், பொங்கல் பொங்கி மடைபரவி வழிபடுதல், பலிகள் கொடுத்தல், வாக்குச் சொல்லுதல் என்பன இவ் வழிபாடுகளுடன் இணைந்த சிறப்பம் சங்களாகும். இக்கிராமிய வழிபாடானது இன்று யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் வன்னியிலும், கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்திலும், நின்று நிலவுவதை அவதானிக்க முடியும்.

யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலையின் ஊர்தி பவனியில் சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரைப் பகுதியை நினைவு படுத்தும் வகையில் வந்தனர். இது கிராமிய மரபு புரையோடி இருப்பதையும் அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்ற தத்துவத்தைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. சோழநாட்டிலே அவதரித்த கண்ணகி கோவலனை மணம் புரிந்து விதியின் வழியமைந்த வாழ்க்கையால் கோவலன் சிலம்பினை விற்று வருவதற்குப் பாண்டி நாடு சென்று கள்வன் எனப் பாண்டிய மன்னனால் கொலை செய்யப் படுகின்றான். இந் நிலையில் கற்புக்கடம் பூண்ட கண்ணகி தனது மற்றொரு மாணிக்கச் சிலம்புடன் மதுரைப் பாண்டியன் அவையிலே ஏறி நீதிகேட்டு கோவலன் கள்வன் இல்லை என்பதை நிறுவி பாண்டியன் உயிரைக் குடித்து மதுரையைத் தீக்கிரையாக்கி அங்கிருந்து சேரநாடு சென்று கோவலனுடன் சேர்ந்து வானுலகம் செல்கின்றாள்.

இந்நிலையிலே கண்ணகிக்குச் சிலையெடுத்து பத்தினி வழிபாடாகச் சேரன் செங்குட்டுவன் செய்தான் இது கஜபாகு மன்னனால் ஈழத்தில் அறிமுகப் படுத்தப்பட்டதாக ஈழத்துக் கண்ணகி அம்மன் வரலாறு கூறுகின்றது. எனவே மேற்படி ஊர்தி கண்ணகி கற்புக்கடம் பூண்ட தெய்வமாக வழிபடுகின்ற மரபைத் தத்துவரூபமாகக் காட்டுவதாகக் கூறலாம். ஒற்றைச் சிலம்பைத் தாங்கிய நிலையிலேயே கண்ணகி அம்மன் சிலைகள் வைத்து வணக்கம் செலுத்துகின்றனர்.

ஈழத்தில் கண்ணகி வழக்குரை என்றொரு இலக்கியம் ஆரியச்சக்கரவர்த்திகள்

காலத்தில் தோன்றியுள்ளது. இது தமிழர் மரபிலே கண்ணகி வழிபாடு பெற்றிருக்கும் செல்வாக்கை விளம்புகின்றது. கண்ணகி வழக்குரையை வன்னியில் குறிப்பாக முல்லைத்தீவில் சிலம்புகூறல் என்றும் யாழ்ப்பாணத்தில் கோவலனார் கதை எனவும் அழைக்கப்படுகின்றது. கண்ணகி அம்மன் ஆலயங்களில் விசேட பொங்கல் வழிபாட்டுக் காலங்களில் படிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பாரம்பரியங்களுடன் வந்ததே கோவலன் கண்ணகி நாடகம் இசை நாடகமாக இந்த நாடகக் கலையும் சிலப்பதிகாரத்தில் இருந்ததே தோற்றம் பெற்றது. இவற்றைச் சித்திரிக்கும் வழக்குரைக் காதை ஊர்தியை நாட்டார் மரபியலோடு நோக்குவதே பொருத்தமுடையதாகும்.

தமிழர் மரபிலே "கோமாதா எங்கள் குலமாதா" என்று போற்றித் துதிக்கின்ற வழிபாடும் தனித்துவமானது. உழவர் விழா எனப் போற்றப்படும் தைப்பொங்கல் பண்டிகையை அடுத்துப் பட்டிப் பொங்கல் பொங்கி கோமாதா தரிசனம் செய்வதும் நமது வாழ்வுக்குத் துணை செய்த கோமாதாக்களுக்கு நன்றி செலுத்துவதுமே பட்டிப்பொங்கல். சூரியபகவானுக்கும் இயற்கைக்கும் நன்றிக்கடன் செலுத்து முகமாகவே தைப்பொங்கல் பண்டிகை உழவர்களால் கொண்டாடப் படுகின்றது. அடுத்த நாள் தமது உழவுக்குத் துணை நின்ற எருதுகளையும் கோமாதாக் களையும் நன்றிப் பெருக்கோடு போற்றி வழிபடும் நாளாக தமிழர் வாழ்வியலில் இடம் பிடித்துள்ளது இந்து சமய மரபிலே மணமக்கள் கோமாதா தரிசனம் செய்வதும் கோவில்களில் கும்பாபிஷேகத்தின் போது கோமாதா தரிசனம் செய்வதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும். முப்பத்து முக்கோடி தேவர்களும் கோமாதாவில் உறைந்திருப்பதாக இந்து சமய தத்துவம் கூறுகின்றது. இவ்வாறு நாட்டார் மரபியலோடு இணைந்ததும் இந்து சமய மரபிலே போற்றப்படுவது மான கோமாதா தரிசன ஊர்தியை யா/மறவன்புலோ சகலகலா வல்லி வித்தி யாலயம் பவனி வரச் செய்திருந்தது. இது இன்றைய சமகாலத்தில் கோமாதாக்களை ஈவிரக்கமின்றிக் கொலை செய்யும் பாதகர்களுக்குச் சமர்ப்பணம் ஆகட்டும்.

யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவர்கள் பாரம்பரிய கலைகளைப் பேணுவோம் என்ற மகுடந்தாங்கிய ஊர்தியில் பவனி வந்தனர். பாரம்பரிய கலை வடிவங்களான கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், பரதம் என்பவற்றை ஒன்றாகச் சங்கமிக்கச் செய்தனர். இவை பார்ப்பவர் கண்களுக்கு விருந்தளித்தன. இதில் சங்கமித்த கலை வடிவங்கள் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

கும்மி என்பது பெண்கள் சேர்ந்து பாடி ஆடுவதாகும். நடுவிலே குத்து விளக்கு, அல்லது பூக்கூடை ஏதாவது ஒன்றை வைத்து விட்டு சுற்றிவந்து பாடுவர் குனிந்து நிமிர்ந்தவாறும், கைகளைக் கொட்டியவாறும் நளினமாக ஆடிப் பாடுவார்கள். கும்மிப் பாட்டுக்குத் தனியான மெட்டும், சந்தமும் இருக்கும். அதற்கேற்ப அசைவு கொடுத்துப் பாடுவர். சுப்பிரமணிய பாரதியாரின் பெண்கள்

விடுதலைக் கும்மியில் வரும்

**"கும்மியடி தமிழ்நாடு முழுவதும்**
**குலுங்கிட கை கொட்டிக் கும்மியடி**
**நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின**
**நன்மை கண்டோமென்று கும்மியடி"**

என்ற பாடலை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அடுத்துக் கரகாட்டம் பற்றி நோக்கு கின்றபோது இது அம்மனுக்கு நேர்த்திக் கடன் நிறைவேற்றும் நிகழ்வாக இருந்து வந்தது. ஆடி மாதத்தில் அம்மனுக்குக் கரகம் எடுப்பது தமிழ்நாடு எங்கும் உள்ள வழக்கமாகும். மலர்களைக் கொண்டு ஒப்பனை செய்யப்பட்ட குடத்தைத் தலை யிலே வைத்துக் கொண்டு ஆடும் ஆட்ட மாகும். இதில் ஆண்கள் பெண்கள் இருவரும் ஆடுவார்கள். ஒன்றன் மேல் ஒன்றாகப் பல அடுக்குகளைக் கொண்ட கரங்களும் உண்டு. இவை இன்று அருகி விட்டது. பாடசாலைகளில், கலை விழாக் களில் இவற்றுக்கு ஓரளவு இடம் வழங்கப் படுகிறது.

காவடியாட்டம் முருகவழிபாட்டு டன் தொடர்புடைய நம்பிக்கை பூர்வ மான நேர்த்திக் கடன்களில் ஒன்றாகும். காவு + தடி என்பதே காவடியாக மருவிய தாகக் கூறப்படுகின்றது. குன்றுகளிலும், மலைகளிலும் உறைபவன் குமரன். ஆறு படை வீடுகளிலும் பழனி, சுவாமிமலை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் என மலைகளிலேயே முருகன் வாசஞ் செய்கின் றான். இந்த வகையில் முருகன் அடியவர் கள் நேர்த்திகளை நிறைவேற்றும் பொருட்டு பொருட்களைக் கொண்டு செல்வதற்கு இலகுவாக ஒரு தடியின் இரண்டு பக்கங் களிலும் அவற்றை முடிச்சுகளாகக் கட்டிக் கொண்டு போவது வழக்கம். பால், தயிர் போன்ற பூசைப் பொருட்களையும் இவ் வாறே எடுத்துச் செல்வர். பின்னர் முருகன் புகழ் பாடியும் ஆடியும் சென்றனர். இந்த மரபே காவடி எடுக்கும் முறையைத் தோற்றுவித்தது. இப்போதும் காவடி களில், பாற்செம்பு, தேசிக்காய், கற்பூரம் கட்டி எடுப்பது வழக்கம். அவை அந்த நேர்த்திப் பொருட்களை நினைவு கூரும் தத்துவமாக அமைந்துள்ளன. இன்று காவடி எடுத்து நேர்த்திகளை நிறைவேற்று வோர் எல்லா ஆலயங்களிலுமே காவடி எடுப்பதைக் காண முடிகின்றது. மரபு சார்ந்த ஆட்டக் காவடிகளுடன் பறவைக் காவடி, தூக்குக் காவடி.... என்ற பரிணாம வளர்ச்சியுடன் இருப்பதைக் காணமுடி கின்றது.

எனவே, தமிழரின் பாரம்பரிய கலை மரபிலே காவடியும் ஒன்றாக இன்று வரை நின்று நிலைபெறுவதனைக் காணலாம். இது நேர்த்திக்காகச் செய்வதால் மருவிப் போக வாய்புகள் இல்லையென்று கூற லாம். இந்தப் பாரம்பரிய கலைகளை எல் லாம் ஒன்றாகச் சங்கமிக்கச் செய்திருந் தனர். யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி யாலய மாணவர்கள் அந்த வகையில் இதுவும் கிராமியக் கலைவடிவங்களுக்குக் கட்டியங் கூறுவதாயும், புத்துயிர்ப்பளிப் பனவாகவும் இருந்தமை சிறப்பம்சமாகும்.

யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் ஊர்தி "யாவரும் செய் வோம் விவசாயம்" என்ற எமது மரபு சார்ந்

தும், இன்றுவரை கைவிடப்படாது பேணப்பட்டு வருகின்ற தொழில்சார் மகிமைகளைப் பறை சாற்றுவனவாயும் அமைந்திருந்தன. விவசாயம் தமிழரின் மரபு சார்ந்த தொழில் காட்டிலே வேட்டையாடி மந்தை மேய்த்து வாழ்ந்த தமிழன் காடுவெட்டிக் கழனியாக்கி பயிர்த்தொழில் செய்து வந்தான் என்பதைச் சங்க இலக்கியங்கள் சான்று காட்டுகின்றன. வியர்வை சிந்தி, நிலம் பண்படுத்தி, உழுது, நெல் விதைத்து, களையெடுத்து, நீர் பாய்ச்சி, கதிரறுத்து, பொலியடித்த வரலாறு தமிழர்களுக்குரியது. இவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் ஏர்ப்பாட்டு, களைபிடுங்கும் பாட்டு, அரிவி வெட்டுப் பாட்டு, பொலிப் பாட்டு என நாட்டார் பாடல்கள் இருப்பது யாவரும் அறிந்ததே. இதனையே "கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி...." என சினிமாவில் பாடியுள்ளனர். வைதேகி காத்திருந்தாள் படத்திலே வரும் "மேகங் கறுக் கையிலே எந்தன் மேனி குளிருதடி..." என்ற பாடல் பிள்ளைக்கனியமுது படத்தில் வரும் "ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை" என்ற பாடல் என்பன நாட்டார் மரபுகளுக்குச் சான்றாகும். 2013ஆம் ஆண்டு முழுநிலா விழாவில் யா/வரணி மத்திய கல்லூரி ஊர்தி பவனியில் "ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே..." என்ற பாடலுடன் "கற்பகதரு வின் (பனை) பொருண்மியம்" சித்திரிக்கப்பட்ட காட்சி கண்முன்னே விரிகின்றது.

தொகுத்து நோக்குமிடத்து நாட்டார் மரபியலே தமிழரின் வரலாற்று மூலங்களாக விளங்குகின்றன. வாழ்க்கை முறைகள், தொழில் முறைகள், பண்பாட்டு மரபுகள், கலைகள், வழிபாடுகள், நம்பிக்கைகள், உணர்வுகள், ஆசை அபிலாசைகள் என எல்லாப் பரிமாணங்களிலும் நாட்டார் மரபுகளே அவற்றின் திறவு கோல்களாக விளங்குகின்றன. ஆரம்ப காலந்தொட்டு எம்மவர் இம்மரபுகளைத் தழுவிக் கொண்டே வாழத் தலைப்பட்டனர். இயற்கையுடன் ஒன்றித்து இன்பக் கலைகளில் சங்கமித்து, இன்புற்று நிறைவான நிம்மதியான அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதனை வரலாறு சொல்கின்றது.

படிப்படியாக வளர்ச்சி பெற்ற நாகரிக வளர்ச்சியும், தொழில்நுட்ப வளர்ச்சியும், நவீன கல்வி முறைமைகளும் எமது பாரம்பரிய வாழ்க்கைக் கோலங்களைக் கூறுபடுத்தி நவீன இயந்திரமயமான, இலத்திரனியல் வாழ்க்கைக்கு அத்திவாரமிட்டது. காலமாற்றத்துக்கேற்ப நாமும் மாறுதல் வேண்டும் என்ற கோட்பாட்டைச் சாதகமாகக் கொண்டு தம்மையும் மாற்றிக் கொண்டனர். இதனால் எமது தொன்மைகளும் தொன்மையான மரபுகளும், மரபு சார் நெறிமுறைகளும் ஆதரிப்பார் இன்றி அதலபாதாளத்துக்குள் போய்க் கொண்டிருக்கிறது.

சங்க காலத்தில் "அறிவுடையோர் வழி அரசு சென்றது" "கடவுள் இட்டபடி நல்ல காவியம் பிறந்தது" என்கிறோம்

அதுபோல "சான்றோர் இட்ட படி நல்ல கலைகள் தழைக்குமாம்" என்று கல்விச் சமூகமே எடுத்த ஒரு விழாவில் நாட்டார் அருங்கலைகள் நர்த்தனமாடின. நம்மையெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின. விண்ணவர் கூட வியந்து பார்க்கும் வகையில் வீதியில் வியனுறக் காட்சியளித்தன என்றால் இப்பெருமை தென்மராட்சி வலயத்திற்கே உரித்தாகும்.

காலத்தின் தேவைகருதி எமது மரபு சார்ந்த கலைவடிவங்களைப் பேணிக் காக்க வேண்டும். அவற்றின் மாட்சியினை வெளிக்கொணர வேண்டும். புத்துயிர் அளித்து அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க வேண்டும். நாமெல்லாம் அவற்றுக்குப் பற்றுக் கோடாய் இருக்க வேண்டும். கலைவாழ்வுடன் இணைந்த எமது இருப்பும், தனித்துவமும் குன்றாது குலையாது திரியாது சிதையாதிருக்கக் கலைத்தெய்வமாம் அன்னை கலைவாணியின் பாத பங்கயம் பற்றி எல்லோரும் உறுதி எடுத்துக் கொள்வோமாக.

**"ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய**
**உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே**
**இருப்பளிங்கு வாராதிடர் "**

- கம்பர் -

◆◆◆

*அள்ளும் அறநெறி அமைத்தார் வள்ளுவர்*
*அன்புடன் பணிவுரை சூடினார் ஔவை*
*உள்ளம் நிறைந்திட உயர்த்தினார் கம்பர்*
*உணர்வும் ஓங்கிட உதவினார் இளங்கோ*
*வெள்ளம் வெப்பம் வீழ்த்தினார் சமயகுரவர்*
*வீறுண்டு வித்தகம் விதைத்தார் காளமேகம்*
*கொள்ளக்குறையாது கொடுத்தார் கூத்தர்*
*குறைவிலாச் செல்வம் குவித்தார் பாரதி.*

*தேனினும் இனிய தெய்வத் திருமகளே*
*திரித்து விபுலன் துதித்த முத்தமிழே*
*ஆனின் பாலை அமிழ்த்திய சுவையே*
*அமுதமாயெங்கும் நுழைந்த வழியே*
*கோனாய்த் தமிழ்த்தினம் குவலயம் மேவி*
*குலவி வருவாய் தாயகம் தரவி*
*வானின் பரவிய வண்ணத் தமிழே*
*வசந்தம் பாடினோம் வளராய் உயிரே.*

# அலங்கரிக்கப்பட்ட விழாமண்டபம்





## மங்கல விளக்கேற்றல்



## தமிழ்த்தாய் வாழ்த்து



அறிஞர்களாலும் கலை ஆர்வலர்களாலும் நிறைந்திருந்த அவை



வலயகீதம் இசைத்தல்



# அறிஞர் கௌரவிப்பு







# நாட்டியக் கலையில் ஹஸ்தாபிநயம்

**திருமதி வி. சுனில் ஆரியரட்ணா**
ஆசிரிய ஆலோசகர் (நடனம்)
தென்மராட்சிக் கல்வி வலயம்

மனித வாழ்க்கையில் பிறப்பில் இருந்து இறப்புவரை தொடர்பாடல் என்பது பின்னிப் பிணைந்த ஒரு செயற்பாடாகக் காணப்படுகிறது. ஒரு தாய் ஒரு குழந்தையைப் பிரசவித்ததும் அதன் அழுகுரல் கேட்கிறது. அது இக் குழந்தையின் தொடர்பாடல் மொழியா கவும் ஆரம்ப குரலோசை யாகவும் அக் குழந்தை தன் கருத்தைப் புலப்படுத்தும் ஒரு மொழியாகவும் காணப்படுகிறது. அத்துடன் வளர்ந்து நடைபயிலத் தொடங்கியதும் நாம் பிரயோகிக்கும் சில மொழிப் பிரயோகத்தை மழலை மொழி யில் கூறுகிறது. பின் தொடர் வாக்கியமாக இல்லாது ஓரிரு சொற்கள் மாத்திரம் பேசுகிறது. பின்னர் வாக்கியங்களைப் பிரயோகிக்கின்றது. பாடசாலையில் காலடி வைக்கும்போது பேச்சு மொழி எழுத்து மொழி வளப் பிரயோகத்தை விருத்தி செய்து பாடலாக கவிதையாக பேச்சாக நாடகமாக பல்வேறு வகையில் தன் ஆக்கத்திறனை வெளிப்படுத்துகிறது.

அவ்வாறே நாட்டியக்கலையில் ஹஸ்தாபிநயமும் எழுத்துகள் சேர்ந்து சொற்களாக, வசனமாக வருவதுபோல் நடனக் கருத்தை வெளிப்படுத்தும் ஒரு மொழியாகவும் கருவியாகவும் காணப் படுகிறது. என்று கூறினால் மிகையாகாது. இந்த ஹஸ்தங்கள் நடனம் பயிலும் ஒவ்வொரு மாணவரும் அறிந்திருக்க வேண்டும் நாட்டியக் கலையைப் பயிலக் காலடி எடுத்து வைக்கும்போது நமஸ் காரம் செய்யப் படுகிறது என்பதை இந்த ஹஸ்தங்கள் மூலம் தான் அறியக்கூடிய தாக உள்ளது. நாம் ஒரு மொழியைப் பேசும்போது அதற்குரிய எழுத்து, சொற்கள் தெளிவாகத் தெரிந்தால் தான் எழுத முடியும். அதேபோல நாட்டியக் கலையில் ஹஸ்தங்கள் அதன் பிரயோகங் கள் பேதங்கள் பற்றிய தெளிவு இருந்தால் தான் நாம் நாட்டிய மொழியை முன்னெ டுத்துச் செல்லக் கூடியதாய் இருக்கும். இவ்வாறு நாட்டியத்தில் இன்றியமையாத ஹஸ்தங்களில் என்ன என்ன விடயங்கள் உள்ளடங்குகிறது என நாம் சற்று நோக்கு வோம்.

பாரதிய நடனமாகிய பரத நாட்டியக் கலையில் சிறப்பு அம்சமாக விளங்குவது நடனத்தில் பயன்படுத்தப்படும் கைகளின் பிரயோகங்கள். கைகளாலேயே பல்வேறு கருத்துகளையும் தெளி வாகப் புலப்படுத் தும் சிறந்த கலையாக நாட்டியக் கலை திகழ்கிறது. ஹஸ்தங்கள் என்பது சமஸ் கிருத சொல்லாகும். கை அசைவுகள் அல்லது முத்திரைகள் என அழைப்பர். கைகளிலுள்ள விரல்களின் பல்வேறு நிலைகளாலும், அசைவுகளாலும் பொருள் பட அபிநயிப்பது இதன் சிறப்பு

அம்சமாகும். வாய் பேசாமல் கைகளா லேயே எதையும் வெளிப்படுத்தும் ஒரு பூரண மௌன மொழியாக இது அமைகிறது. கைகளை சமஸ்கிருதத்தில் ஹஸ்தம் என்று குறிப்பிடுவர். சிற்ப, ஆகம நூல்களில்தான் ஹஸ்தங்களுக்கு முத்திரை என்று பெயர். இசையிலும் நாட்டியத்திலும் முத்திரை என்பது ஆசிரியர் பெயரையோ அல்லது ஊர் ராகம் தாளம் முதலியவற்றின் பெயரையோ குறிக்கும்.

ஹஸ்தங்களை இரண்டாக பாகு பாடு செய்யலாம். அபிநயக்கை நிருத் தத்கை. என வகைப்படுத்தலாம். அபிநயக் கை மேலும் இரண்டாக பாகுபடுத்தலாம். அவை ஒன்றைக் கையாகிய அஸம்யுத ஹஸ்தம் மற்றொன்று இரட்டைக் கையாகிய ஸம்யுத ஹஸ்தம் இவற்றை இணையாக்கை என்றும் இணைந்த கை என்றும் குறிப்பிடலாம். அபிநயக் கைகள் கருத்து களைப் புலப்படுத்த பயன்படும். நிருத்தக் கைகள் நிருத்தத்திற்குப் பயன்படும் ஸம்யுத ஹஸ்தங்களின் எண்ணிக்கை 24 ஆகும்.

இந்த அஸம்யுத ஸம்யுத ஹஸ்தங் களுக்கு அதன் பிரயோகங்கள் எண்ணில டங்காது உள்ளன. நாட்டிய சாஸ்திரம் கூறும் நிருத்தங்கள் இன்று வழக்கில் இல்லை.

இவற்றைத் தவிர தேவர்களுக்குரிய ஹஸ்த தசாவதார ஹஸ்தங்கள் நவக்கிரக ஹஸ்தங்கள் ஜாதி ஹஸ்தங்கள், பாந்தவ்ய ஹஸ்தங்கள் என எல்லாவற்றுக்கும் ஹஸ் தாபிநயப் பிரயோகங்கள் காணப்படு கின்றன. கைகளை எத்துணை பயன்படுத் தினாலும் உணர்ச்சிகளை சித்திரிக்க முக பாவனை அவசியமாகும். கைகளுடன் கண்களும் புருவங்களும் உடலும் அசைந்து முகபாவத்துடன் ரஸம் மலருவதாக அமைய வேண்டும் மனம் லயித்தாலன்றி இது முடியாது.

**"கைவழி நயனஞ் செல்ல**
**கண்வழி மனமும் செல்ல**
**மனம் வழி பாவமும்**
**பாவ வழி ரசமும் சேர முன்னமே"**

எனக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். அளவற்ற ஹஸ்த மொழியினை அருளிய நூலாசிரி யர்கள் உணர்ச்சி வேகம் மிகுந்திருக்கும் காட்சிகளில் கைகளை உபயோகிக்க கூடாது என்றும் அவைகளை ஸாத்விக பாவங்களை கொண்டுதான் அபிநயிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். பரத சாஸ்திரத்தின் படி சோகம், சோர்வு, மயக்கம், பீதி, வெறுப்பு, சலிப்பு, ஒய்ச்சல், தூக்கம் பயம் குடிபோதை போன்ற சந்தர்ப் பங்களில் பயன் பயடுத்தப்படுவதில்லை இவை பற்றிய விளக்கத்தை அபிநய தர்ப்பணம் , பரத சாஸ்திரத்தில் பார்க்கக் கூடியதாய் இருக் கும் நாட்டியக் கலையில் உடல் அசைவும் கைமுத்திரைகளும் சேர்ந்து அடவுகள் உருவாகின்றன. பல அடவுகள் சேர்ந்து ஜதிகள் உருவாகியது அத்துடன் நிருத்தம் நிருத்தியம் நாட்டியம் ஆங்கிக வாச்சிக, ஆகார்ய , சாத்வீக அபிநயங்களிலும் நாட்டிய உருப்படி களான அலாரிப்பு தொங்கி தில்லான வாரையும் ஹஸ்தப் பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. அபிநயம் என்பது ஒரு கருத்தை மற்றவருக்கு உணர்த்துவது ஆகும். இவை அங்கங்களால் வார்த்தை களினால் ஆடை அணிகலன்களால் சாத்துவீக உணர்வுகளால் வெளிப்படுத்தக் கூடியதாய் உள்ளது. இதில் ஆங்கிக அபிநயம் உடல் உறுப்புகளால் உள்ளக் கருத்தை வெளிப்படுத்த ஹஸ்தங்கள் பெரிதும் உதவுகிறது. இவை பிண்டி பிணையல் என அழைக் கப்படுகின்றன.

இவ்வாறு சமஸ்கிருத மொழியில் அமைந்த ஹஸ்தங்கள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இணைக்கப்பட் டுள்ளது. சமஸ்கிருத மொழியைப் புரிந்து

கொண்டு நடனபாடத்தைக் கற்பதில் உள்ள இடர்பாடு காரணமாக மாணவர்கள் இப்பாடத்தில் நாட்டம் கொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவுள்ளது.

எனவே, இப்பாட அலகை மாணவர் ஆர்வமுடன் கற்பதற்கேற்றதாக மாற்றுவதற்கும் ஸ்லோகங்களை இலகுவில் புரிந்துகொண்டு மனனஞ் செய்யக் கூடிய விதமாக நடன செயன்முறையின் ஒரு புதிய ஆக்கமாக "ஹஸ்தாபியை Fusaion" என்ற நடன ஆற்றுகை அரங்கேற்றப்பட்டது. யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யா / மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்கள் மேலைத்தேய இசையுடன் ஹஸ்த சுலோகங்கள் ஒலிக்க மாணவர்கள் மேடையில் தோன்றி நடன ஆற்றுகை செய்தனர். பாதபேதங்களுடன் புள்ளிமான்களாகத் துள்ளல் இசைக்குத் துள்ளித்துள்ளி அசைந்து நாட்டியம் ஆடக்கூடிய விதமாக ஸம்யுத, அஹம் யுத ஹஸ்தங்களும் அவற்றின் பிரயோக சுலோகங்களும் அமைந்திருந்தன. கணிதத்தில் கேத்திர கணிதம் கற்பது எவ்வளவு சிரமமோ அதே போல் நடனத்தில் ஹஸ்தங்கள் என்று கூறினால் மிகையாகாது. எனவே தொகுத்து நோக்குகையில் சிரமமான விடயங்களையும் நாம் கவரக் கூடிய வித மாகவும் அழகுணர்ச்சியுடனும் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய விதமாகவும் கற்பதற்குரிய நுட்ப முறைகளைக் கண்டு செயற்படுத்தினால் அவை ஆர்வமுடையதாகவும் விரும்பப்படுவதுமாகி கற்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமையும் என்பதில் தவறில்லை.

◆◆◆

கம்பனொடு வள்ளுவனும் இளங் கோவும் கவிகோக்கக் களிப்பால் எம்மோர்
தம்பங்காய்த் தாய் மொழிக்குத் தலைசிறந்த காப்பியங்கள் தந்தே வென்றனர்
தும்பிகொண்ட செந்நறையுந் தேமதுரத் தெள்ளமுதுந் தோற்கும் பாங்காய்
அம்புவிக்குப் படைத்தளித்த அற்புதமாம் அவையனைத்தும் அறியாருண்டோ?



# கானாப் பாடல்கள்

கு. ஜோதிரட்ணராசா
ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

இசை என்பது அசையவைப்பது ஆகும். இன்று எம்மிடையே வழக்கில் இருந்துவரும் இசை கர்நாட இசை மரபாகும். தென் இந்தியாவிலே சாஸ்த்திரிய இசையானது இசைமேதைகளால் வளர்க்கப்பட்டு இன்றும் அழியாது நிலைத்திருக்கிறது என்றால் அதன் தன்மையே எனலாம். எனினும் இன்றைய சமுதாயத்திலே இசை மீதான ரசனை என்பது மாறிக்கொண்டே செல்கின்றது.

மேற்கத்தேய கலாசாரங்களின் தவிர்க்க முடிக்கமுடியாத ஊடாட்டம் காரணமாக மக்களின் மனவிழைகளிலும் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது. அந்த வகையிலே கர்நாடக இசை யினை இன்று ரசிப்பவர்களின் தன்மை காலக்கிரமத்தில் குறைந்து கொண்டு செல்வதுடன் அதனைப் பயில் நிலையிலும் அதன் தன்மை கணிசமான அளவு வீழ்ச்சி அடைந்து வருகின்றது.

கிராமிய இசை மக்களின் மனங்களை வெல்லும் அளவிற்கு கர்நாடக இசை வெல்வது குறைவாகவே உள்ளது. இன்றைய உலகமயமாதலின் தாக்கமும் இதற்கு இன்னுமொரு காரணம் எனலாம். பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் ஏற்பட்டுள்ள அதீத வெடிப்பும் மக்களின் கலை இரசனைகளிலும் மாறுதல்களை ஏற்படுத்தி உள்ளது.

கிராமிய இசைக்கு அடுத்தபடியாக தோன்றிய இசைவடிவமே கானாப் பாடல்கள். கானாப் பாடல்கள் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பது இன்றும் அது ஒரு ஆய்வுக்குரிய விடயமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. கிராமிய இசை பாமரமக்களின் மத்தியில் தோற்றம் பெற்றது போலவே கானாப்பாடல்களும் தோற்றம் பெற்றிருக்கலாம் என்று கானாப் பாடல்களை ஆய்வு செய்த அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

இருப்பினும் கானாப்பாடல்கள் இந்தியாவிலேயே தோற்றம் பெற்றன என்று பலரும் குறிப்பிட்டுள்ளனர். அதனை நாம் மறுப்பதற்கு இல்லை. ஏனெனில் கானாப் பாடல்கள் இலங்கை போன்ற நாடுகளில் தோற்றம் பெறவில்லை என்பதும் வெளிப்படை. எனினும் சிங்களமொழியிலுள்ள பைலாப் பாடல்கள் போலவே

கானாப் பாடல்களின் இசை அமைப்பும் இருப்பதுவும் நோக்கற்பாலது.

மேலும் கானாவின் தோற்றம் இந்தியாவின் சென்னை நகரம் என்று பல ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். சாவு நிகழ்வு ஒன்றினைக் கொண்டாடும் சடங்கில் இருந்து உருவானதாக நம்பப்படுகின்றது. அதாவது சென்னை போன்ற நகரங்களில் எலீட் கலாசாரத்திற்கு மாறான ஸபால்டர் மக்களின் கலாசாரத்தில் சாவு என்பது ஒரு கொண்டாடப்படும் நிகழ்வாக இருந்திருக்கிறதை அறியலாம். இது சென்னை மட்டுமன்றி தமிழகம் முழுவதுமே காணக்கூடிய ஒரு பண்பாகும். மேலும் ஆந்திரா போன்ற பிரதேசங்களிலும் கானாவின் செல்வாக்கு இருந்திருக்கிறது.

வயதான ஒருவர் இறந்தவுடன் மதுவுக்கும் மேளத்திற்கும் ஏற்பாடாகும். பிணத்தினை எரிக்கும் வரை கூத்தும், ஆட்டமும் மதுவினை அருந்தியவர்களினால் ஆடப்படும். அப்போது அவர்களின் வாயில் இருந்து வரும் சொற்களை வைத்துப் பாடுவார்கள். கானாவிற்கு என எந்தவிதமான கட்டுக் கோப்புகளும் கிடையாது.

அடுத்து கானாப்பாடல்களை நோக்கும்போது இன்னுமொரு உண்மை தோன்றுகின்றது. கணநேரப்படைப்பாக்கம். அதாவது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியொன்றில் உள்ளவர்களின் அப்போதைய சூழலின் தன்மைக்கேற்ப அவர்களின் உள்ளத்து, உணர்வுகளுக்கேற்ப சொற்களும் சந்தமும் பிறக்கும். மேலும் கானாவின் வரிகளும் மெட்டுகளும் ஒரு கணநேர படைப்பாக்கத் தன்மையுடன் வெளிப்பாடாக இருந்தாலும் அதில் அர்த்தம் முக்கிய இடம் பெறுவதில்லை. அதைவிடவும் சந்தத்திற்கே முக்கியத்துவம் இருக்கிறது என்றும் அர்த்தம் சந்தத்தைப் பற்றிக் கொண்டு உருவாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது என்றும் கூறமுடிகிறது.

இத்தன்மையுடைய கானா கல்லூரிகளில் புகுந்து அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தியாவில் உள்ள பிரபலமான கல்லூரிகளில் கானாப்பாடல்களின் செல்வாக்கைக் காணமுடிகிறது. கல்லூரி மாணவர்கள் தங்கள் படைப்புத்திறனைக் காட்ட இதைவிட வேறு சிறந்த பாடல் வடிவம் ஏதும் இருக்கமுடியுமா என்ற அளவிற்கு தென்இந்தியாவின் பிரபல கல்லூரிகள் விளங்குகின்றன.

அடுத்து சேரிகளில் வாழும் மக்கள் தங்கள் முன்னைய கிராம அடையாளத்தை நகர வாழ்க்கையில் நீட்டிக் கொள்வது போல் அல்லது நகர வாழ்க்கைக்கு ஏற்ப இசை வடிவம் பரிணமிப்பதுபோல் நாட்டுக் கூத்தை ஒத்த அதன்மீது நகர்ப்புற முலாம் பூசப்பட்ட மெட்டிலேயே கானா அமைகிறது என்றாலும் சாதாரணமாய் நாட்டுப்புற இசை என்று அழைக்கப்படும் இசையிலிருந்து கானா மெட்டு தெளிவாக வேறுபடுகின்றது. கானாவின் அடிப்படை வேர்களை டப்பாங் கூத்தோடு பொருந்திக் கொள்கிறது என்பது தெரிகிறது. கானாவின் பண்புகளை கணநேரப் படைப்பாக்கத்திற்கு இந்த வகை இசையே பொருத்தமாக இருக்கிறது.

மேலும் கிராமத்தில் இருந்து புலம் பெயர்ந்த அடித்தட்டு மக்களின் நகர்ப்புற வாழ்க்கைக்கு ஏற்ப பரிணாம வளர்ச்சி அடைந்த ஒரு இசை வடிவம்தான் கானாவா என்று கேட்டால் அது மட்டும் கானாவைப் பற்றி விளக்கப் போதுமான தாய் இல்லை என்று தோன்றுகிறது. அத்துடன் கானாவின் முக்கிய பண்பாய் இருப்பது ஒப்பாரித்தன்மையான அதன் கொண்டாட்டமே என்று சொல்லத் தோன்றுகின்றது.

இத்தன்மை வாய்ந்த கானா இன்று திரைப்படங்களிலும் அதன் தடம் அகலப் பதிக்கப்பட்டு வருவதைக் காணமுடி கிறது. சினிமாவில் கானாப்பாடல்கள் உருவாக்கப்படும்போது கானாவின் கணநேரப் படைப்புத் தன்மை போன்ற பண்புகள் காணாமல் போவதுடன் தாள மும் தன் எளிமையைத் துறந்து ஆர்ப் பாட்டமாவதுடன் பின்னணி இசையும் சேர்ந்து கொண்டு புதிய பரி மாணத்துடன் இரசிகர்களின் மனதை வென்று வருகின் றது. சினிமாப் படங்களில் கானாப்பாடல் களை அறிமுகப் படுத்தியவர் தேனிசைத் தென்றல் தேவா அவர்கள் என்றால் மிகையாகாது. கானா இசை திரையி சையில் குறிப்பிட்ட இடத்தைப் பெற்றா லும் அவ்வாறு இடம் பெறுதல் தரம் குறைந்த ஒரு சமாச்சாரமாகவே பார்க்கப் படுகிறது.

மதுவினைக் குடக்கணக்கில் அருந்திய நிலையில் அவர்களின் உள்ளத்து உணர்வுகள் தாமாகவே பாடலாக வெளி வரும். இவ்வாறு உருவானதே கானாப் பாடல்கள் என்ற ஒரு கருத்தும் உண்டு.

மேலும் சென்னை நகரம் என்பதிலும் பார்க்க சேரிப்புறங்களில்தான் இதன் தாக்கம் அதிகம் என்றும் கொள்ளப் படுகிறது. இந்த உலக வாழ்க்கை துன்பத்தாலும் பாவத்தாலும் நிறைந்ததால் அதிலிருந்து சாவு விடுவிக்கிறது. எனவே மனிதப் பிறவியில் இருந்து விடுதலை பெறுகின்றோம் என்ற சந்தோசத்தால் சாவு கொண்டாடத் தகுந்தது என்று சமூகவியல் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

மேலும் சென்னை சேரிகளில் சாவு விழுந்தால் பல காரணங்களுக்காக பிணத்தை உடனடியாக அடக்கம் செய்ய முடியாது போகின்றது. இதனால் இரவு முழுவதும் பிணத்தை வைத்திருக்க வேண்டிய தேவை எற்படுமாம். அந்த இரவுப் பொழுதைக் கழிக்கும் விதமாக உருவாக்கப்பட்டே கானாப்பாடல்கள் உருவாகி இருக்கலாம் என்றும் கருதப் படுகிறது. அதாவது இழவு வீட்டில் அந்தக் கணத்தில் தோன்றிய வார்த்தை களால் கைகளைத் தட்டி உருவாக்கிய தாளத்துடன் பாடப்பட்டு கானா உருவாகி இருக்கிறது.

மேலும் கானாவினது சமூகத்தின் அடித்தட்டு மக்களின் உணர்வுகளில் இருந்து தோன்றியது என்றும் கூறமுடியும். அதாவது இந்தியாவின் தலித் இனங்களின் கலாசார அடையாளமாகவும் கருத முடி கிறது. அம் மக்களின் குதூகலம், துன்பம் போன்ற பல் வேறு மனவெழுச்சி களையும் வெளிப்படுத்தியதாக அறியமுடிகிறது.

அடுத்து கானாவின் மிக முக்கிய மான அம்சம் பங்குபற்றுதல் ஆகும். (Partiaptian) தனி ஒருவன் கானா பாடினா லும் அங்கு சூழ உள்ளவர்கள் அனை வருமே அவருடன் ஒன்றிணைந்து பாடுவதாகும். இது இதன் நேரான அம்சம் ஆகும். அதாவது ஒருவர் பாடும் போது சுற்றி இருப்பவர்கள் கைதட்டியும் தமக்கு அப்போது கிடைக்கும் பொருட்களின் மூலம் இசை எழுப்பியும் இணைந்து கொள்வதாகும். இது வேறெந்த இசைவடிவத்திலும் சாத்தியமாகாது உதாரணமாக கர்நாடக இசைக் கச்சேரி களில் பாகவதர் பாடிக் கொண்டே இருப்பார். அதனைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் கொட்டாவி விட்டுக் கொண்டோ அல்லது சாப்பிட்ட போண்டாவின் பெருமைகளைப் பேசிக்கொண்டோ இருப்பர். ஆனால் கானாவில் இது கிடையாது. எல்லோரி னதும் பங்கு பற்றுதலும் இதில் உண்டு. இதுவே இதன் தனித் தன்மை எனலாம்.

மேலும் கானாப்பாடல்களுக் கென்று இசைக்கருவிகள் என்று எதுவும் கிடையாது. அந்த நேரத்தில் எது கிடைக்கின்றதோ அதனை இசைக்கருவி யாகப் பயன்படுத்த முடியும். உதாரண மாக கல்லூரி ஒன்றில் கிரிகெட் நடை பெறும் போது வீரர்களை உற்சாகப் படுத்தும் முகமாக ஏனைய பார்வை யாளர்கள் அதுவும் கல்லூரி மாணவர்கள் பாடுவதில் அப்போது கைதட்டுதல், டிபன் Box சப்பாத்து ஓசை மேசை மீது தட்டுதல் போன்ற பொருட்களைத் தட்டி ஏதோ ஒரு சந்தத்திற்கு ஏற்ப பாடுவார்கள். அப்போது அங்கு ஒரு சந்தம் உருவாகும். அதுவே கானாவின் பாடலை மெரு கூட்டும்.

ஆனாலும் அண்மைக் காலத் திரைப்படங்களில் கானாப்பாடல்களில் ஒன்றேனும் இல்லாது இருப்பது குறைவாக உள்ளது. ஏன் எனில் மக்களின் இரசனை களும் அவ்வளவுக்கு மாற்றம் அடைந்து வந்து கொண்டிருக்கிறது. இன்றைய இளம் சந்ததியினர் என்றாலும் சரி முதியவர்கள் ஆயினும் கானாவின் பக்கம் தம் செவிகளை திருப்புவதை நாம் இன்று காண்கிறோம்.

ஆடித் திங்கள் முழுநிலா நிகழ்ச்சி யில் கானாப்பாடலும் ஒரு அங்கமாக இடம் பெற வேண்டும் என்பது எமது மதிப்பிற்குரிய வலயக்கல்விப் பணிப் பாளரின் பேரவாவாக இருந்தது. அவரின் வேண்டு கோளுக்கிணங்கவே கானாப் பாடல் தயாரிக்கப்பட்டது. தென்மராட்சி வலய இசை ஆசிரியர்களின் ஒன்றிணைந்த கூட்டு முயற்சியாக இசைக்கப்பட்டது.

கானாப் பாடலுக்குரிய கானப் பிரசன்னம் என்பது இங்கு இடம் பெற வில்லை. ஏற்கனவே திட்டமிட்டு எழுதப் பட்ட பாடலாக அமைந்திருந்தது. இற்றைக்கு 30 வருடங்களுக்கு முற்பட்ட சந்ததியினர் அதிஸ்டசாலிகள் என்றும் அதற்குப் பிந்திய இன்றைய சந்ததியினர் பழமையைப் போற்றாது அதனால் பல வழிகளிலும் அவஸ்தைப்படுவதையும் பழமையின் பெருமைபேசுவதாவும் அமைந்த வகையில் கானாப்பாடல்

அமைக்கப்பட்டிருந்தது. சங்கீதத்துறை ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதா ஈழநேசன் அவர்களின் ஆலோசனைக் கிணங்க அப்பாடலை நானே எழுதினேன். என்பதும் குறிப்பிடத்தக்கது. கானாப் பாடலுக்குரிய மெட்டுகள் சில இடங்க ளில் திரைப்படப் பாடல்களின் சாயலை ஒத்திருந்தாலும் சுவைஞர்களுக்கு அது நல் விருந்தாய் அமைந்திருந்ததுவும் மனங் கொள்ளத்தக்கது. இன்றைய சமுதாயத்தின் கலை ரசனையினை நாடிபிடித்துப் பார்ப்பதில் எமது வலயக் கல்விப் பணிப்பாளருக்கு நிகர் அவரே என்று கூறுவதற்கு இக் கானாப்பாடல் தெரிவு ஒரு நிதர்சனமாக உள்ளது. கானாப் பாடல்கள் சேரிகளில் தோன்றி அடித்தட்டு மக்களின் மன உணர்வுகளின் வெளிப்பாடாய் அமைந்து அது இன்று கல்லூரிகளில் தனக்கென இடம்பிடித்துத் திரை உலகிலும் தடம் பதித்து இன்றைய சமுதாயத்தின் ஆழ் மனதில் தானாகவே வேர் ஊன்றி எல்லோர் வாய்களின் முணுமுணுப் பாய் தானாகவே உதிர்ந்து கொண்டிருக்கிறது.

◆◆◆

*யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதில்லை என்றே சொன்னான்*
*தேமதுரத் தமிழ் தந்த தமிழ்ப்புலவன் பாரதி தன் பாட்டில் அந்நாள்*
*ஆமெமது நற்றமிழ் போல் ஆதிமொழி அழகு மொழி அகிலத்தில்லை*
*தேமதுரத் தமிழெங்கள் தாய்மொழியாம் என வுலகு தெரியச் சொல்வோம்*

*நாவினிக்கும் நவின்றிடுங்கால், நற்றமிழின் நலமுரைப்பின் வார்த்தை தோறும்*
*தாவிவரும் ஓசைநயஞ் செயினிக்கச் செய்யுமெழிற் சொல்லால் நெஞ்சப்*
*பூவிரியும் தத்துவங்கள் பூத்த உயர் படைப்புகளால் மொழிக்கென்றென் றும்*
*யாவு முளதான மொழியெனத் தமிழை ஓதிடுங்கால் ஏற்காருண்டோ?*

## வரவேற்புரை




## தலைமையுரை



# விருந்தினர் உரைகள்





# தமிழிற் பெருநீதி

**வே. உதயகுமார்**
ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்ததமிழ்" என பெருமைபடப்போற்றப்படும் தமிழும் தமிழ் மொழி சார் இலக்கியங்களும் பழைமை மிக்கவை. என்பதால் மட்டு மன்றி உலகத்தரம் வாய்ந்தவையாகவும் மிளிர்கின்றன. உலகெங்கும் வாழும் பல்லின மக்களுக்கும் அறிவூட்டக் கூடிய கருவூலங்களாக திருக்குறள் போன்ற பல இலக்கியங்கள் திகழ்கின்றன. தமிழர் தமது பண்பாடுகளையும் பெருமைகளையும் பறைசாற்றி அவற்றைப் பேணும் தரம் வாய்ந்த ஊடகங்களாகவும் தமிழ் இலக்கியங்கள் விளங்குகின்றன. சிலப்பதிகாரமும் கம்பராமாயணமும் ஔவை மூதாட்டியின் நீதி நூல்களும் வள்ளுவரின் வாய்மொழிகளுமாக பல இலக்கியங்கள் அறத்தையும் ஒழுக்கத்தையும் நீதியையும் தமிழரின் பண்பாட்டையும் பேணுவதோடு இன்றைய தலைமுறையினருக்கும் பொருத்தமுற அவற்றைக் கடத்த வல்ல நுட்பமான ஊடகங்களும் ஆகும். மக்கள் வாழ்க்கையின் மிக அடிப்படைக் கூறுகளான காதலையும், வீரத்தையும் மன்னரின் ஒழுக்கத்தையும் கண்கண்டவாறே பாடும் சங்கக் கவிஞன் முதல், பல்லாயிரம் திங்களைக் கடந்த இன்றைய எங்கள் தமிழ்க் கவிஞர் மற்றும் இலக்கியப் படைப்பாளிகள் வரை படைத்துள்ள தலைசிறந்த இலக்கியங்களில் உலகமே கண்டு இன்புறக் கூடியதும், பின்பற்ற வேண்டியதுமான அம்சங்களை எண்ணிப் பார்ப்பதும் எடுத்துரைப்பதும் காலத்தின் தேவையாகும்.

இந்த வகையிலேதான் அறத்தையும் நீதியையும் தலைமேற் கொண்டு வாழ்ந்த தமிழ் மக்களினதும் மன்னர்களினதும் இலட்சிய வாழ்வின் இலக்கியப் பதிவுகளைக் கண்டு இன்புறுவதோடு தமிழர் நாம் பெருமை கொள்ள வேண்டும். வேள்பாரி என்னும் தமிழ் மன்னனொருவனைக் காட்டும் சங்க இலக்கியம் அவன் பொற்தேரேறி தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்து வரும்போது முல்லைக் கொடி ஒன்று மலரோடும் மொட்டோடும் படர்வதற்குக் கொழுகொம்பின்றிக் காற்றில் அசைந்து அலைவதைக் கண்ணுற்றான். பிற உயிர் வருந்துவதைப் பொறுக்க மாட்டாத மன்னன் பாரி உடனே தன் பொற்தேரை அருகில் நிறுத்தி முல்லைக் கொடி பற்றிப் படர்ந்து துன்பமின்றி வாழ வழி செய்து விட்டு நகர்ந்து விடுகின்றான்.

**"பாரி பாரி யென்று பல வேத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி யொருவனது மல்லன்**
**மாரியு முண் டீண் டுலகு புரப்பதுவே"**

என பாரியின் நண்பரும் புலவருமான கபிலர் இவ்வுலகைக் காப்பதற்கு பாரி ஒருவன் மட்டும் இல்லை மாரியும் உள்ளதுவே . என உயிர்களனைத்தையும்

காத்து வரும் மாரி (மழை) யோடு ஒப்பிட்டு அத்தமிழ் மன்னரின் மிக உயர்ந்த பண்பை இலக்கியத்தில் அழகோடு பதிவு செய்து காட்டுகிறார். இவன் காலத்தில் தமிழ் நாட்டின் இன்னொரு கோடியிலே வாழ்ந்த வையாவிக் கோப்பெரும் பேகன் என்ற மன்னனின் பெருமை பேசப்படுகின்றது. ஒரு கார்காலப்பொழுது மழை மேகம் சூழ்ந்து கிடக்க எங்கும் ஒரே குளிர்; கான மயிலொன்று கிடுகிடுத்து நடுங்குகின்றது. மயிலின் ஆனந்தமோ? அன்றி அக்குளிர் மயிலையும் நடுங்கவைத்ததோ? மயில் குளிரால் வருந்துகின்றது. என பேகன் எண்ணினான் போலும், உடனே தனது மதிப்பு மிகு போர்வையை எடுத்து மயிலுக்குப் போர்த்தினான்.

**"உடாஅ தே பாரா வாகுத லறிந்தும்**
**படா அ மஞ்ஞைக் கீந்தவெங்கோ..."**

என பரணர் என்னும் புலவன் இக் காட்சியைப் பதிவு செய்கின்றார். மயிலின் மீது கொண்ட அன்பு அவனை அப்படிச் செய்ய வைத்தது. இவர்கள் கொடையிற் சிறந்த மன்னர்கள் எனக் கண்டாலும், சற்று நுணங்கிச் சிந்தித்தால் இம் மன்னர்களின் ஜீவகாருண்யம் எனப்படும் உயிர்கள் மீது கொண்ட அன்பு வெளிப் படுகின்றது எனலாம். அன்பின் வழியிற் தான் நீதி பிறக்கும். இவை உலகோர் கண்டு கொள்ள வேண்டிய உயர்ந்த அம்சங்கள்

பாண்டிமாநகரிலே நடந்த தென்ன? பாண்டியன் நெடுஞ்செழியன் மதி தவறிப் போனான். கோவலன் கொலையுண்டான். கண்ணகி வெறி கொண்டாள். அரண்மனையில் நீதி கிடைக்குமென நம்பிக்கையுடன் சென்றாள். சிலம்புடைத் தாள். உண்மையை உலகறியச் செய்தாள். நீதி தவறியதால் மன்னன் உயிர் நீத்தான். "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற நீதியை உணர்த்தியது சிலப்பதிகாரம். தமிழின் முதற் காப்பியம் என்ற சிறப்பினைப் பெறும் சிலப்பதிகாரத் தின் சிறப்புச் செய்தியிது. இவ்வாறு தமிழிலக்கியம் காட்டும் நீதி சிறப்புப் பெறுகின்றது. உலகப் பொதுமறையாம் திருக்குறள் அரசியல் பற்றியும் அரசிய லில் அறம் பற்றியும் விரிவுபட விளக்கும் சட்ட நூல்

**"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறை யென்று வைக்கப்படும்"**

என இறைமாட்சி எனும் அதிகாரத்தில் தன் நாட்டு உயிர்கள் நலியாது ஆளும் அரசன் கடவுளாகக் கொள்ளப்படுவான் எனப் பதிவு செய்துள்ளார்.

**"வானோக்கி வாழும் உலகெலாம் மன்னவன்**
**கோனோக்கி வாழுங்குடி"**

மழை உள்ளதால் உலக உயிர்கள் வாழும் குடிமக்கள் அரசனின் செங்கோலி னால் வாழும் என்றார்.

இவ்வாறு நீதி இலக்கியமாம் வள்ளுவன் தந்த திருக்குறள் தமிழிற் பெருநீதி சொல்லும் தெய்வ நூலாக இம் மன்னர்களின் நீதி நெறிதவறாத ஆட்சியை அணி செய்கிறது. திருக்குறளைத் தொட்டு சங்கமருவியகால நீதி நூல்கள் பலவும் அரச நீதியை முறைபடக் கூறுகின்றன. இவ்வாறான நூல்களையே தமிழ் மன்னர்கள் சாஸ்திர நூல்களாகவும் சட்ட நூல்களாகவும் கொண்டு அரசாட்சி புரிந்துள்ளனர். இவ்விலக்கியங்களின் தோற்றத்துக்கு முன்னதாகவும் பின்ன தாகவும் வாழ்ந்த நீதி நெறியில் நின்று யர்ந்த தமிழ் மன்னர்கள் பலர்.

சோழ நாட்டு மன்னன் சிபிச்சக்க ரவர்த்தியின் காலடியில் வந்து வீழ்ந்தது ஒரு புறா, அதனைப் பரிவோடு எடுத்து வருடிப் பயத்தைப் போக்கினான் மன்னன். புறாவைத் தொடர்ந்து வந்தது ஒரு

பருந்து. "என் முயற்சியில் வென்ற இப்புறாவை என் பசி தீர்க்கத் தந்துவிடு" என்றது. புறாவின் மீது இரக்கம் கொண்ட மன்னன் அதற்குச் சமமான இறைச்சியை தன் உடலில் இருந்து அரிந்து கொடுக்கத் தலைப்பட்டான். இறுதியில் இப்புறாவின் உயிருக்காக தனது உயிரையே கொடுக்கத் துணிந்தான். தமிழ் மன்னன் உயிர்களை எப்படிக் காத்தான் என்பதற்கு சிபிச் சக்கரவர்த்தியின் வரலாறும் நினைவு கொள்ளத் தக்கதேயாம்.

இவ் விலக்கியக் காட்சி போலவே தான் மனுநீதிச் சோழன் பதிவும் விளங்குகின்றது. தேரோடும் வீதியில் பசுங்கன்றொன்று துள்ளி ஓடியது. அந்த வேளையில் தான் மனுநீதிச் சோழனின் செல்வ மகன் வீதிவிடங்கன் மணிகள் ஒலிக்கும் தேரிலேறி உலாவந்து கொண்டிருந்தான். பயமறியா இளங்கன்று அவனறியாவேளை தேர்ச்சக்கரத்தில் நுழைந்து அக்கணமே உயிர்பிரிந்து விடுகின்றது. தாங்கொணாத் துயரம் கொண்ட தாய்ப்பசு வருந்தியழுத கண்ணீருடன் எங்கு சென்றால் நீதி கிடைக்கும் என்பதை அறிந்ததாய் மன்னனின் அரண்மனை வாயிலை அணுகி ஆராய்ச்சி மணியை இழுத்தடித்தது. அதன் அதிர்வுகள் மன்னனை அதிர வைத்தது. நடந்ததை அறிந்த மன்னன் நெஞ்சம் விறைத்துப்போனான். கொலைக்குக் காரணமானவனுக்கும் அதே தண்டனை தான். தந்தை எனப்பாராது தான் மன்னன் என்றுரைத்தான். தன் பிள்ளையால் தாய்ப்பசு அடைந்த துயரத்தை தானும் அடைவதே நீதி என்பதை உணர்ந்து தன் அன்புப் புதல்வனை அதே தேர்ச் சக்கரத்தில் இட்டு உயிர் போக்க நீதி சொன்னான். இதயமுள்ள எந்த மனிதனால் இது முடியுமா? மனுநீதிச் சோழனால் முடிந்தது. இது உலக மன்னர்களுக்கு எடுத்துக்காட்டு. உலக நீதிக்கு உதாரணம். தமிழிற் பெருநீதி இவனால் பறைசாற்றப்பட்டது.

தமிழ் இலக்கியங்களில் வரும் அற்புதமான இக் காட்சிகள் இன்னும் உலகில் உள்ளவர்களின் சிந்தனைகளை அதிர வைக்கின்றன. இவை தமிழ் நீதிகள் உயிர் மீது கொள்ள வேண்டிய உயர்ந்த போற்றுதல்கள். தமிழர்களின் பண்பாடுகளில் ஓர் அங்கமாக இவை உயர்ந்து நிற்கின்றன.

இத்தகையதோர் இலக்கியக் காட்சியின் நிறுவுதலை தென்மராட்சி பௌர்ணமி விழாவில் ஊர்திகளின் பவனியிலே காணமுடிந்தது. தென்மராட்சிக் கல்வி வலயம் முன்னெடுத்த மாபெரும் 2ஆவது இலக்கிய விழாவிலே தென்மராட்சி இலக்கிய அணியினர் மனுநீதிச் சோழனின் உயர்ந்த நீதியை காட்சியாக நகர்த்தியிருந்தனர். உயிர்களிடத்து அன்பும் ஜீவகாருண்ணியமும் நசிந்து போய் மனித நேயமும் நீதியும் நம் நாட்டிலும் உலகிலுள்ள மக்களிடமும் அரசர்களிடமும் வறண்டுபோய் வரும் காலத்தில் தமிழர்களின் நீதி நெறிகளை நினைக்க வைத்த காட்சியாக இதைப் பார்க்கலாம். தமிழிலக்கியத்தின் பெரு நீதியை நினைக்க வைத்து இக் கட்டுரையை வளர்ப்பதற்கும் உதவிய இலக்கியக் காட்சி இதுவாகையினால் தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கும் இலக்கிய அணியினருக்கும் இக் கட்டுரையாசிரியர் சார்பிலும் நன்றிகள் சேரட்டும்

◆◆◆

# தென்மராட்சி வலயக் கல்விச் சமூகத்தின், ஆடித்திங்கள் முழுநிலாநாள் கலைவிழா - 2014

எஸ். விஜி

**தென்மராட்சிக் கல்விவலயம் கிழக்கில் இருந்து விலகிமேற்கோடு இணைகிறதா? மீண்டும் தொடங்கும் மிடுக்கு....**

மகாகவி அவர்களது கவிவரிகள். காலத்தால் அழியாதது. இந்த மண்ணில் மனிதர் ஒவ்வொருவரும் அவர்களது வாழ்க்கைப் போராட்டத்தின் ஒவ்வொரு பொழுதுகளின் விடியலின் போதும், அவனது உயிர்மூச்சுடன் கலந்து, அவன் அறியாமலேயே, அவனது இதயத் துடிப்பை இழுத்து வைத்திருக்கும் தத்துவ வரிகள் இவை.

ஆடிமாதத்து முழுநிலாநாளான கடந்த 10.08.2014 ஞாயிறு காலை தென்மராட்சி மண்ணின் மையப்புள்ளியில் (?) நின்று உலாவிய மனிதக் கூட்டத்தின் நடையினைப் பார்க்கையில், மகாகவியினது இந்த வரிகளே நினைவில் வந்து போயின.

**"மீண்டும் தொடங்கும் மிடுக்கு"**

ஆம். வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையோடு, தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சிக் கல்வி வலயச் சமூகத்துடன் இணைந்து எடுத்த ஆடிப்பௌர்ணமி கலைவிழாவில், கலந்துகொண்டபோது என்னுள் ஏற்பட்டுவிட்ட புத்துணர்ச்சியின் விளைவாய், உதடுகள் உதிர்த்த வரிகளே இவை.

இரண்டாம் தவணைப் பரீட்சைக்கான ஆயத்தங்களில்பரீட்சைப் பரபரப்புக்களில், தென்மராட்சி வலயப் பாடசாலைகள் உள்வாங்கப்படுமுன்னரேயே இந்த முழுநிலாநாள் கலைவிழா நிகழ்ச்சிகளின் பரபரப்புகள் தொற்றிக் கொண்டன என்றே கூறலாம். தென்மராட்சி வலய நிர்வாகப்பரப்புக்குள் அடங்கும், ஒவ்வொரு பாடசாலையினதும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என எல்லோருமே, தென்மராட்சிக் கல்வி வலயம் இவ்வருடம் ஆடி மாதத்துப் பௌர்ணமி நாளில், கொண்டாட இருக்கும் கலைவிழா நிகழ்ச்சிகள் பற்றியும், அதில் தங்களது பாடசாலை சார்பாகத் தாங்கள் முன்வைக்கவுள்ள ஆற்றுகைகள் பற்றியும், தமக்குள் கலந்துரையாடத் தொடங்கிவிட்டனர். இவ்வாறு இவர்கள் முன்கூட்டியே ஆயத்தமாகுவதற்கு இரு காரணங்கள் அடிப்படையாக இருந்தன எனலாம்.

கடந்த 2013ஆம் வருடம், மார்கழித் திங்கள், இந்த வலயத்தினால் கொண்டாடப்பட்ட பௌர்ணமி நாள் கலைவிழா, இப்பிரதேச மக்களினால், உணர்வுக் குவியலாக, எழுச்சிமிகு விழாவாகக் கொண்டாடப்பட்டதுடன், பலராலும் அது பாராட்டி வாழ்த்தப்பட்டது ஒரு காரணமாகும். அன்று அந்தப் பௌர்ணமி நாள் கலைவிழா முடிந்த அடுத்த வாரமே இவ்வலயக் கல்விப்பணிப்பாளர் தனது சக பணியாளர்கள், அதிபர்களுடன், மேற்படி கலைவிழா நிகழ்ச்சிகளது பலம், பலவீனங்களைப்பற்றி கலந்துரையாடியதோடு, 2014ஆம் வருடத்துக்கான முழுநிலா நாள் கலைவிழா எவ்வாறாக அமைய வேண்டும் என ஆராய்ந்து, போடப்பட்ட அடித்தளம் இரண்டாவது காரணமாகலாம்.

இவ்வாறான முன்னெடுப்புகளால் இவ்வருடத்தின் தென்மராட்சி வலய முழு நிலா நாள் கலைவிழா, தென்மராட்சிப் பிரதேசத்தின் பாடசாலைகளை மையப் படுத்திய சமூகத்தினுள்ளே, மெல்ல மெல்ல அதிர்வுகளை ஏற்படுத்தி, உணர்ச்சிகளையும், உணர்வுகளையும், கருத்துகளையும் பிறப்பித்துக் கொண்டிருந்தன என்பது உண்மையாகும்.

எனினும் அம்மக்களிடையே, ஒரு மனக்குறையும் காணப்பட்டது. ஆடி மாதத்து பௌர்ணமி நாள் இப்பிரதேசத்து ஆலயங்கள் பலவற்றிலும் தேரும், தீர்த்தமும் என, திருவிழாக்கள் நடைபெறும் நாளாகும். இந்த நாளில் தென்மராட்சி வலயம், தனது பாடசாலைகளை இணைத்து, முழுநிலா நாள் கலைவிழாவை வைப்பது - வைக்கத்துணிவது. தமக்கான கலைப்பசியாற்றக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைத் தட்டிப்பறிப்பதாகப் போய் விடுமோ என, அவர்கள் அச்சப்பட்டனர். இவ்வேதனையைப் பலர் தமக்குள்ளேயே அடக்கி விட, ஒருசிலர் தமக்குள்ளே பரிமாறிக் கொள்ள, முழுநிலா நாள் கலைவிழா ஏற்பாடுகள் திட்டமிட்ட வகையில் இலக்கு நோக்கி நகர்ந்தன என்பதே உண்மை.

ஆடித்திங்கள் 21ஆம் நாள். (06.08.2014) காலையில் சாவகச்சேரி பேரூந்து நிலையத்தில், யாழ்ப்பாணம் செல்லும் பேரூந்தினை எதிர்பார்த்து நின்ற எனது கண்களில், யா/டிறிபேர்க் கல்லூரி நுழைவாயிலின் மதிலோடு, இணைத்துக் கட்டப்பட்டிருந்த, அழகிய பதாகை ஒன்று கண்களைக் கவர்ந்தது. அதில் அச்சிடப்பட்டிருந்த நடன நங்கை ஒரு வரது அழகிய அபிநயக்காட்சி பளிச்சென கண்களைக் கொள்ளையிட, கண்ணாடியைச் சற்றுச் சரிசெய்து கொண்டு, உற்றுப் பார்த்தேன். "தென்மராட்சிக் கல்வி வலயம் வடமாகாணக் கல்வித்திணைக்கள அனுசரணையுடன் நடத்தும் முழுநிலா நாள் கலைவிழா" என்ற தகவல்களோடு, கீழே ஏதேதோ விபரங்கள் அச்சிடப்பட்டிருந்தமையை அடையாளம் காண முடிந்தது. அவற்றை வாசிக்க இயலாதிருந்தது. அந்தப் பதாகையின் அமைப்பு, அழகிய தோற்றம், இவற்றுடன் இணைந்த ஏதோ ஒன்று, என்னைத் தூண்ட, எழுந்து, நடந்து, வீதியைக் கடந்து, பதாகையின் அருகே சென்று பார்த்தேன்.

"உணர்வுடன் கலந்து, உயிர் மூச்சில் வெப்பமான - எங்கள் பாட்டனின், பெருமைகளைப் பூட்டப் பிள்ளைகளுக்கும் புரியவைத்திட, விரைந்து வாரீர், நெஞ்சு நிமிர்ந்து நடப்போம்" என்ற முத்தான வரிகளுடன் முழு நிலாநாள் கலைவிழா பற்றிய தகவல்கள் அதிலே தரப்பட்டிருந்தன. பொறிக்கப்பட்டிருந்த அந்த வரிகள், வாசிக்கும் போதே என்னுள் ஒருவித உணர்வுக் கிளர்ச்சியைத் தோற்றுவிக்க, என்னையறியாமலேயே எனது தலை மேலும், கீழும் அசைந்து கொள்கிறது. எனது பேத்தியின் கைகளைப் பற்றிப் பிடித்ததைப் போல ஒரு எண்ணம் மனதில் எழ, வலதுகை ஒருதரம் தானாகவே அழுத்திப்பிடித்துக் கொள்கின்றது. இன்று ஆறாம் திகதி. புதன் கிழமை. பத்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை. என்னதான் முக்கியமான வேலையிருந்தாலும், முழுநிலாநாள் கலைவிழா பார்ப்பதே - அனுபவிப்பதே பிரதானமானது என முடிவெடுத்தபடி மீண்டும் பேரூந்து நிலையத்துக்குள் திரும்பிக் கொள்கின்றேன்.

ஆடித்திங்கள் 23ஆம் நாள் (08.08.2014) வெள்ளிக்கிழமை. காலை எட்டுமணியிருக்கும். "அப்பா, சந்தைக்குப் போய் சமையலுக்கு ஏதும் மரக்கறி பார்த்து வாங்கி வாங்கோ" என எனது மகள் கூற, லேடிஸ் சைக்கிளை உருட்டியபடி புறப்பட்ட நான், சாவகச்சேரி நகரத்தை நெருங்குகின்றேன். வண்ண உடையணிந்த பாடசாலைப் பிள்ளைகள், தனித்தும், குழுக்களாகவும், கண்டி வீதியால் வந்து, புகையிரத நிலைய வீதியில் திரும்பி நடக்கின்றனர். இடையிடையே எனக்குத் தெரிந்த ஆசிரியைகள் ஒருசிலரும் அவர்களுடன் நடக்க, ஓர் ஆசிரியையிடம் வினாவுகின்றேன். "பிள்ளை என்னடி லீவு நாளிலையும் இந்தப் பக்கம்?" "கலாசார மண்டபத்தில் முழுநிலாநாள் கலைவிழா ஒத்திகை இருக்குது ஐயா. அதுதான் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு போறன். " நடந்து கொண்டே கதை கூறிய அந்த ஆசிரியையின் அருகில் சென்று அடுத்த கேள்வியைத் தொடுத்தேன். "ஒத்திகையே.... ஞாயிற்றுக்கிழமை நடக்க இருக்கிற அந்தக் கலை விழாவுக்கான ஒத்திகையே?

"ஓம். ஓம். அதற்கான ஒத்திகை தான்" அடுத்த கேள்விக்கு அனுமதிக்காத வகையில், அந்த ஆசிரியையின் நடை வேகம் எடுக்கின்றது. அவரைப் புரிந்து கொண்டபடி அந்த இடத்திலேயே நின்றுகொண்ட நான், ஆசிரியையின் பின்னால் இழுபட்டவாறு இறுதியாக நடந்துவரும் அந்த மெல்லிய பிள்ளையிடம் எனது அடுத்த வினாவைத் தொடுத்தேன்.

**"பிள்ளை எந்தப் பள்ளிக் கூடம்?"**
**"மிருசுவில் அ.த.க. வித்தியாலயம்."**
**"இதுல போற எல்லாப் பிள்ளைகளும் மிருசுவில் அ.த.க. வித்தியாலயமே?"**
**"இல்ல...." எனப் பலமாகத் தலையை ஆட்டியபடி அப் பிள்ளை கூறியது, "வேற பள்ளிக் கூடப் பிள்ளைகளும் இதில போகுதுகள்."**
கன பள்ளிக்கூடப் பிள்ளைகளே...? இண்டைக்கே ஒத்திகை தொடங்கிற்றுதுகள் எண்டால்....? நிச்சயம் நிகழ்ச்சிகள் தரமாகத்தான் இருக்கும். என்ன இருந்

தாலும் ஞாயிற்றுக்கிழமை முழுநிலாநாள் கலைவிழாவைத் தவறவிடக்கூடாது. எண்ணம் வலிமைபெற, நான் சந்தையை நோக்கி நகர்கின்றேன். கண்டி வீதியும், புகையிரத நிலைய வீதியும் சந்திக்கும் இடத்தில், சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத்து மதில் ஓரமாகவும், முழுநிலாநாள் கலைவிழாவைப் பற்றி தகவல் தரும் பதாகை ஒன்று தொங்கு கின்றது. அழகாக அச்சிடப்பட்டிருக்கும் அப்பதாகையிலும் உணர்ச்சிமிகு கவிவரி ஒன்று பொறிக்கப்பட்டிருக்கின்றது.

"மொழி வளர கலைகள் வேண்டும். கலைகள் வளர மொழி வேண்டும். இவை இரண்டும் வளர இன உணர்வு வேண்டும். எங்களிடம் இதற்கா பஞ்சம்? அலை யெனத் திரண்டு கலைவிழா காண்போம்.

வாசித்து முடித்ததும் சைக்கிள் வண் டியின் பெடலை எனது கால்கள் வலிமை யுடன் மிதித்ததை எனது சைக்கிளும் உணர்ந்துதான் இருக்கும்.

ஆடித்திங்கள் 26ஆம் நாள் (10.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலை யிலேயே எழுந்து, வழமையான கடமை களை நிறைவேற்றி முடித்துவிட்டு, பேத்தி யையும் அழைத்துக் கொண்டு காலை எட்டு மணிக்கே சாவகச்சேரி நகரத்தை நோக்கிச் சைக்கிளை நகர்த்தினேன். "எங்க அப்பப்பா போகப்போறம்....? " எனது மகனின் பிள்ளைகள் என்னை அழைப் பதைப் போலவே, மகள் வயிற்றுப் பேர்த்தி யான இவளும் என்னை அப்பப்பா என்றே அழைத்துப் பழகிவிட்டாள். குனிந்து அவளது முகத்தைப் பார்த்தபடி பதிலளித் தேன்.

"இண்டைக்கு பள்ளிக் கூடங்களில படிக்கிற பிள்ளைகளும், டீச்சர்மாரும் சேர்ந்து ஊர்வலமாக வந்து, ஆடி, பாடி, நாடகம் நடிக்கப் போயினம். அதப் பார்க் கத்தான் போறம்." "ஏன் நடிக்கப் பேறாங் கள்...?" எங்களுடைய அம்மா அப்பாக் கள், தாங்கள் பழகியிருந்த ஆடல், பாடல்களையும், கதைகளையும், கூத்து கள், பழக்கவழக்கங்களையும், எங்களுக் குச் சொல்லித் தந்தவங்க. அதுகள் எல்லாத்தையும் இப்ப நாங்க உங்களைப்போன்ற சின்னப் பிள்ளை களுக்குச் சொல்லித்தர வேணும் தானே...? அதுக்குத்தான் இப்படிக் கலை விழாக்களை நடத்துறது "பள்ளிக்கூடத் திலயும் சொல்லித்தாரவங்கதானே..?" "பள்ளிக் கூடத்தில சொல்லித்தாரதத்தான், பழகினதத்தான், இங்க சனக்கப்பேர் பார்த்து மகிழ, மேடையில பாடி, ஆடி, காட்டப் போயினம்."

தூரத்தே அழகுபடுத்தப்பட்டு, வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஊர்திகளைக் கண்டதும் பேத்தி அமைதி யாகின்றாள். நான், சைக்கிளைத் திருப்பி டிறிபேர்க் கல்லூரி வளவினுள் உள்ள வேப்பமர நிழலின் கீழ் விட்டுப் பூட்டிய பின், பேத்தியை அழைத்துக் கொண்டு கண்டி வீதியை அடைகின்றேன். கண்டி வீதியின் கிழக்கே, தனங்களப்பு - கச்சாய் வீதிச் சுற்றுவட்ட சந்திக்கு அப்பால் வண்ண உடை அணிந்த பிள்ளைகளும், கலாசார உடையுடனான ஆண்களும்,

பெண்களுமாகக் கூட்டம் அலைமோத நான் அவ்விடம் நோக்கி பேர்த்தியுடன் நடக்கின்றேன்.

ஒலிபெருக்கி கட்டப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று மெல்ல எமைக் கடந்து போகிறது.

"தென்மராட்சி கல்வி வலயத்தின் கவினுறு முகப்போடு, நல்ல பல காட்சிகள் நடைபயிலப் போகிறது. செல்லும் இரு மருங்கும் சேர்ந்து திரண்டிருந்து, எல்லோரும் பார்த்து வாழ்த்துங்கள்...."

இனிய, தெளிந்த, உறுதியான குரலில் முத்துக்களாய் உதிரும் தமிழில் டிறிபேக் கல்லூரியின் மார்க்கண்டு ஆசிரியர் முச்சக்கரவண்டியில், கவி வடித் துச் செல்கின்றார்.

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக் கிளையின் முன்னால், கோல உடை அணிந்து, பரிவட்டம் ஏந்தி, பதாகை தாங் கியபடி, டிறிபேர்க் கல்லூரி மாணவர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். கட்டளை கிடைத்ததும் நகர்வதற்குத் தயாராக, நெஞ்சு நிமிர்த்தி, உடல் ஊறுதி வெளிப் பட, நிமிர்ந்து நிற்கின்றனர். அவர்களில் முன்னணியில் நின்ற இருவர், தாங்கிப் பிடித்திருந்த அழகுறு பதாகை, முழுநிலா நாள் பற்றிய தகவல்களைத் தந்ததோடு எமது உணர்வுகளைத் தட்டி எழுப்பி, தடதடவென நடந்திடச் செய்ய கூடிய தான கவிதை வரிகளையும் தாங்கி நின்றது.

"மரபணுக்களில் உறங்கிக் கிடக்கும் எம் கலை, பண்பாட்டு மரபுகளை முழு நிலா நாளில் இந்த முற்றத்து வீதிகளில் உலாவரச் செய்திடுவோம். எழுந்து வாரீர். இணைந்து கொள்வோம்."

என அமைந்த வரிகள் தாங்கிய பதாகையின் அமைப்பினை, அழகினை, உள்ளடக்கத்தினை, கண்களை விரித்து, முழுமையாய் உள்வாங்கி, மனதினுள் பதிய வைத்துக் கொண்டேன். பேர்த்தி என்னிடம் எதுவுமே கேட்காது காண்பது, கேட்பது, அனைத்தையும் உள்வாங்கிய படி அமைதியாய் நிற்கின்றாள். ஊர் வலமும், ஊர்திகளும் மெல்ல நகர ஆரம்பித்தன.

பதாகை தாங்கிய பிள்ளைகளின் பின்னே, மயிலாட்டம், குயிலாட்டம், கர காட்டம் என்பதான பாரம்பரிய கிரா மியக்கலைகளை, வீதியை மேடையாக்கி கதம்பமாக, மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் இசைக்கு ஏற்ப அசைந்து ஆட, எனது கரத்தினைப் பற்றியிருந்த பேர்த்தியின் உடலிலும் சிறிது அசைவு. குனிந்து பார்க்கி றேன். அவளது வலதுகால் தானாகத் தாளம் இட்டுக்கொண்டிருக்கின்றது.

ஓ.... மரபணுக்களில் உறங்கிக் கிடக்கும் எம் கலை, பண்பாட்டுமரபுகள் என்று இங்கே குறிக்கப்பட்டிருப்பது உண்மையே என உணர்த்திடுவதற்கு எனது பேர்த்தி ஆதாரமான சாட்சியாக எழுந்து நிற்கின்றாள்.

கதம்பம் நிகழ்த்திச் சென்ற ஏறக் குறைய முப்பது மாணவர்களின் பின்னே, தம் கரங்களில் தாங்கிய வாள்களைக் கொண்டு, தமது அபிநயத்தினால், ஒரு போர்க்களக்காட்சியை மனக்கண்முன் கொண்டுவந்தபடி, இசைக்கேற்ப அசை வைக் காட்டினர் அல்லாரை அ.த.க. பாட சாலை மாணவர்கள். கடுகு சிறிதென்றா லும் காரம் பெரிதுதானே. வாள் நடனத் தைத் தந்த மாணவர்கள் அனைவருமே, மெலிந்த உடலும், ஒரே அளவான உயரத் தையும் உடையவர்களாக இருந்தது இந்த நடனத்துக்கு அழகு சேர்த்தது.

வாள் நடனத்தின் பின்னே, கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மாணவர்கள் குதிரை ஆட்டத்தோடு அணிவகுத்தனர். குதிரையாட்டம், பழந் தமிழர் கிராமியக் கலைமரபுகளில் சிறப் பிடம் பெற்ற ஒன்று. இதற்குத் தனித் திறமை வேண்டும். இருந்தும் இங்கே, இந்த வித்தியாலய மாணவர்களது கரங் களில், குதிரைகள் லாவகமாக, ஆடி, அசைந்தது. ஆம் மீன்குஞ்சுகளுக்கு நீச்சல் பழக்கத் தேவையில்லைத் தானே.

குதிரை ஆட்டத்தைத் தொடர்ந்து, கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை யினது மாணவிகள் மயிலாட்டத்தைத் தந்த படி ஆடி அசைந்தனர். ஒப்பனை, மயில்களது நளினம், அசைவுகள், ஒருங்கு சேர, இனிமை தந்த இசை.... பாடல் வரிகள்.... எல்லாமே பார்த்தவர்களை பரவசத்தில் ஆழ்த்தியது என்பது அன்று அந்த இடத்தில் நின்றவர்களுக்கு மட்டுமே புரிந்த உண்மை. மயில்களாய் ஆடிய மாணவிகளது அசைவினைப்பார்த்து மெய்ம்மறப்பதா? அல்லது சேர்ந்துவந்து காதில் வீழ்ந்த பாடல்வரிகளுடன் இணைந்த இசையினை இரசிப்பதா? என்பதைத் தெரியாது தேனுண்ட வண்டின் மயக்க நிலையில் நான் தடுமாறி நின்றேன். எனது வாய், என்னையறியாமலே கிழக்கு மாகாண கிராமங்களின், மண்மணம் கமழும் நாட்டார் பாடல்களில் ஒன்றினது வரிகளை மெல்ல முணுமுணுத்தது.

**"..... மான்போல நடை நடந்து மயில் போல சிறகொதுக்கி,**
**தேன்போல்குடிகிளம்பி என்ர சின்ன வண்டு போறதெங்கே...?"**

தேனீக்கள் குடிகிளம்பிப் போவது வழமையே. ஆனால் இங்கே வதையில் சேகரிக்கப்பட்டிருக்கும் தேனே குடிகிளம் பிப் புறப்பட்டதான ஒரு உணர்வு.

மயிலாட்டத்தைத் தொடர்ந்து உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களது இன்னிசைக் குழுவினர் நடனத்துடன் இணைந்து, எம் இனத்தின் பாரம்பரிய இசைக் கருவிகளை வாசித்தபடி நடன அசைவுகளைத்தர, கண்டிவீதியின் காப்பெற் தரையில் காவியம் வடித்த அந்த மாணவனது அபிநயங்களும், ஆடல் முத்திரைகளும் நாட்டியக்கலைஞர் வேல் ஆனந்தன் அவர்களது மாணவனா? என்னும் சந்தேகத்தைத் தந்தது. என் வாய் மெல்லிய ஒலியில் அம் மாணவனை வாழ்த்தி நின்றது. வாழிய மகனே. வாழும் எம் கலையினை வையகம் எங்கினும் எடுத்துச் சென்று வளமுடன் வாழ்ந்திடு மகனே.

இன்னியக் குழுவினரது இசை விருந்தினைத் தொடர்ந்து, சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவிகளது வரவேற்பு நடனம் மனதினைக் கொள்ளையிட்டுப் போனது. சாமரை வீசி, பூமலர் தூவி, விருந்தினர்களை வரவேற்று நின்றபோது, மகிழ்ச்சியின் மிகையினால் கண்களிரண் டும் நீர்முத்துகளை உருட்டி விட்டது. தென்மராட்சி மண்ணே, இந்தக் கலைப் பொக்கிசங்களை எங்கே அம்மா புதைத்து வைத்திருந்தாய்?

கதம்ப நடனத்தில் தொடங்கி, வரவேற்பு நடனத்துடன் நிறைவடைந்த ஊர்வல நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, ஊர்திகளது பவனி இணைந்துவரலா யிற்று. மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிச் சமூகத்தினது ஊர்தி முதலாவ தாக நகர்ந்தது. அதில் காத்தவராயன் கூத்து காட்சிகளாய் விரிந்தது.

**"யாழ்ப்பாண மக்களின் மரபுக் கூத்தென்றால் காத்தான் தான்...,**
**இதனை ஊரறியும், உலகறியும்.**
**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி சும்மா இருக்குமா?**
**காத்தான் கலை விரித்து, காண்கின்ற காட்சியாக்கி,**
**சேர்த்துள்ள பாடல்களை செவிக்கு விருந்து நல்கி**
**கூத்தாக ஆடுகிறார் மாணவர்கள். குதூகலமாய்**
**நாம் அதனைப் பார்த்து மகிழ்ந்திடுவோம்."**

காத்தவராயன் கூத்துக்கான அறிமுக வரிகளாய், அறிவிப்பாளர் ஒருவர் அறி வித்துப் போவது காதுக்கு இனிமையாய் இருந்தது. இந்தஇனிமையைத் தந்தது அவரது குரலா? அல்லது குரல் சுமந்த வரிகளா? ஆராய்ந்து பார்க்க நேரம் தராது அடுத்த ஊர்தி வந்து நின்றது.

"நாம் இலங்கையர்" எனும் பதாகை ஏந்தி, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை சமூகத்தினது ஊர்தியில், இலங்கை மாதாவின் புதல்வர்கள் அணி வகுத்து நின்றனர். மொழி, மதம் என்ற அடிப்படைகளில், வேற்றுமைகளுக்குள் ஒற்றுமை கண்டிருந்த இப்பாடசாலை மாணவ, மாணவியர், ஒவ்வொரு இனத்த வரையும் பிரதிபலிக்கும் ஆடை அணிந்து, புன்னகை தவழ, தம்கரங்களை அசைத்து, மகிழ்ச்சியை வெளிப்படுத்தியபடி, ஊர்தி யில் நின்றனர். உண்மையிலேயே ஒவ் வொரு இனத்தவர்களுக்கும் பொருந்தக் கூடியதாக பிள்ளைகளைத் தெரிவுசெய்து நமது பெரியவர்களாக்கி ஊர்தியில் ஏற்றி, ஊர்வலமாய் அனுப்புவதென்பது ஆரம்பப் பிரிவுப் பாடசாலை ஒன்றிற்கு இலகுவான ஒரு விடயமாக அமைந்திருக் காது என்பது எனது நம்பிக்கை.

"தேரும் திங்களும் " என்ற தலைப் பில் மகாகவி அவர்கள் எழுதிய கவிதை ஒன்று இப்படித்தான் தொடங்கும்.

**"ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே.**
**வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை....**

இந்த வரிகளுக்கு வலுவூட்டுவதாக, இக்குழந்தைகளது வெளிப்பாடுகள் அமைந்திருந்தன. மகாகவியின் இக்கவிதை யின் இறுதி வரிகள் இப்படித்தான் இருக் கும்.

**"...முந்தநாள் வானமுழுநிலவைத் தொட்டு விட்டு**
**வந்தவனின் சுற்றம் அதோ மண்ணில் புரள்கிறது"**

இந்தக் குழந்தைகளின் காலத்திலாவது, வேற்றுமை களைந்து, ஒற்றுமை காணும் ஒரு பொழுதாவது விடியாதா? என மனது ஏங்கத்தொடங்கியது.

தன்னை ஒத்த பிள்ளைகள் ஊர்தியில் செல்வதைக் கண்டதும், பேர்த்தி துள்ளிக் குதித்து, சத்தமிட்டுச் சிரித்து, தானும் கைகளை அசைத்துக் கொள்கின்றாள்.

ஊர்திகள் எங்களைக் கடந்து உருள்கின்றன. எங்களது கலை மரபுகளில், பழமைமிக்கவைகளில் ஒன்றான வில்லிசைத்து, பாடல் தந்து, கதை கூறியபடி மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய மாணவர்களைக் கொண்ட ஊர்தி மெல்ல வருகிறது.

"கூத்தும், காட்சியும் கண்டது கண்கள் தான். கேட்கின்றது காதுகட்கு விருந்தென்ன? நீத்துப் போகாமல் இன்றும் நிலைக்கின்ற வில்லுப்பாட்டை இசைத்தபடி வரும் ஊர்தி...."

அறிவிப்பாளர் இனிய குரலில் கன்னித் தமிழில் கவிதைதந்து செல்கின்றார்.

நாவற்பழத்தை வைத்து நல்லதொரு தத்துவத்தை ஔவைக்கு ஊடாக உலகிற்கு புரியவைத்த சுட்டபழம், சுடாத பழக் காட்சிகளை கண்முன்னே கொண்டு வந்து கண்களையும் கருத்தையும் கவர்ந்தபடி, மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலய சமூகத்தினரது ஊர்தியும் எமைக் கடந்து போனது.

ஔவைப்பாட்டியும், அழகிய முருகனும் அமைந்த காட்சியினைத் தந்து சென்ற ஊர்தியைத் தொடர்ந்து பாரம்பரிய கலைகளைப் பேணுவோம் என்ற கோசத்தோடு, அடுத்த ஊர்தி அழகுற நகர்ந்தது. இது, இடைக்குறிச்சி சிறிசுப்பிரமணிய வித்தியாலய மாணவர், மற்றும் ஆசிரிய சமூகத்தினரது பங்களிப்போடு பவனியாய் வந்தது.

**"பட்டி பெருக வேணும் தம்பிரானே,**
**பாற்பானை பொங்க வேணும் தம்பிரானே,**
**நாடு விளையவேணும் தம்பிரானே.**
**நல்ல மழை பொழிய வேணும் தம்பிரானே..."**

என்ற பாடல் வரிகள் ஒலிக்க, கோமாதாவுக்கான பொங்கல் வழிபாட்டினை செய்தபடி மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலய சமூகத்தினரது ஊர்தியும் எங்களைக் கடந்து போனது.

தொடர்ந்து, மந்துவில் றோ.க.த.க. பாடசாலையினது மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து காட்சிப்படுத்திய, கண்ணகி வழக்குரை ஊர்தி.

**"... கண்ணகி வழக்குரைத்து காசினிக்கு சேதி சொன்னாள்**
**அரசியல் பிழைத்தோருக்கு**
**அறம் கூற்றாகும். ஊழ்வினை வந்து உறுத்தும்"** என, ஊர்தியை விளித்து உரைதந்த அறிவிப்பாளரது குரல், இன்னும், இன்னும், விளக்கத்தைத் தந்து

சென்றது. கையில் சிலம்பேந்தி, பாண்டியனிடம் நீதிகேட்கும் கண்ணகித் தாயினை கலையாக்கித் தந்திருந்த மந்துவில் றோ.க.த.க. பாடசாலைச் சமூகத்தை என்மனம் பெருமை கொண்டு பாராட்டி நின்றது.

சற்றேனும் வித்தியாசமாக எதனை யாவது கண்டாலோ அல்லது கேட்டாலோ உடன் என்னிடம் அதுபற்றி விளக்கம் கேட்கும் எனது பேர்த்தி, இன்று என்னை மறந்து, தன்னையும் மறந்து தமிழால் மெய்ம்மறந்து நிற்கின்றாள். இந்த மெய்ம்மறத்தல் எப்படி வந்தது? உணர்வுடன் கலந்து உயிர்மூச்சில் வெப்பமான எமது கலைகளின் விளைவோ?

கண்ணகி வழக்குரை ஊர்தியைத் தொடர்ந்து நகர்ந்தது, கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் ஊர்தி. தமிழர் எமது பாரம்பரிய கிராமிய வழிபாட்டு முறைகளுள் ஒன்றான வழந்து வைத்துப் பொங்கிப் படைத்துப் பூரித்து நிற்கும் அன்பியம் நிறைந்த பண்பாட்டு வடிவத்தினைப் பார்ப்பவர்களுக்கு விளக்கியபடி நகர்ந்தது அந்த ஊர்தி.

வழந்து வைத்தல், கிராமப்புற அம்மன் ஆலயங்களில் எடுக்கப்படும் சடங்கு இதுவாகும். கிராமம் செழிக்க வேண்டும் என்ற நோக்கோடு, அம்மனுக்கு நேர்த்தி வைத்து, மிகப்பெரிய பானை வனைந்து, பண்டமெடுத்து, பலரும் இணைந்து செய்யும் வழிபாடாக இந்த வழந்து வைத்தல் எமது கிராமங்களில் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. பளைப் பிரதேசத்தில், அறத்தி அம்மன், செருக்கன் சாத்தி அம்மன், இரட்டைக் கேணி அம்மன், நெறியன் அம்மன் ஆகிய ஆலயங்களில் 1990களுக்கு முன் இந்த வழந்து வைத்தல் வழிபாடு மிகச்சிறப்பாக நடைபெற்று வந்ததை எனது நண்பர்கள் கூறக்கேட்டிருக்கின்றேன். உடுக்கை ஒலி முழங்க எட்டு நாட்கள் இரவிரவாகக் கோவலன் கண்ணகி கதைபடித்து, ஒன்பதாவது நாள் வழந்தை நேர்ந்து அடுப்பேற்றி பொங்கிப் படைத்து வழிபாடு செய்யும் இந்தக் கிராமிய வழிபாட்டு முறைபற்றி, நன்குதெரிந்த ஒருவரிடம் கேட்டறிய வேண் டும் என்ற எண்ணம் இந்த ஊர்தியைப் பார்த்ததும் எனக்குள் எழுந்தது. இந்த ஊர்தி பற்றி விளக்கிச் சென்ற அறிவிப்பாளர் இப்படியாகக் கூறிக்கொண்டு சென்றார்.

**".... அடுத்து வருவதனை அவதானமாகப் பாருங்கள். உடுக்கை ஒலியோடு கிராமிய வழிபாடு. பண்டமெடுத்து பலபேர் உருவேற்றிக் கொண்டுசென்று வழந்தை நேர்ந்து, அடுப்பேற்றி, பொங்கிப் படைத்து, குரும்பை வழிதிறக்கும் கிராமிய வழிபாடிது. மறைந்து போய்க்கொண்டிருக்கும் எங்கள் மாண்பு களைப் பாருங் கள்....."**

இந்தக் கணத்தில், என்றோ ஒருநாள், நான் வாசித்த கன்னிவாடிபிச்சைநிலா என்கின்ற கவிஞனின் கானாப்பாட்டு வரிகள், ஏனோ தெரியவில்லை தானாக எனது நினைவுக்கு வந்தன.

**"தக்காளி நட்ட வருசத்திலே, தண்ணி குறைஞ்சது கிணத்திலே**
**தண்ணி இருக்கிற வருசத்திலே, தக்காளிக்கும் விலையில்லே**

**சாமிய நம்பி கெட்டது பாதி, பூமிய நம்பி கெட்டது பாதி**
**சாமி கெடுத்ததா? பூமி கெடுத்ததா? யாரு கெடுத்தது சொல்லுங்களேன்?"**

வழந்துப் பொங்கல் ஊர்தி, எனது பழைய நினைவுகளைக் கிளறி விட்டிருந் தது. அந்த நினைவுகளுக்குள் மூழ்கிப் போன நான், சில நிமிடங்கள் என்னை மறந்து போனேன். அதனால் என்னைக் கடந்து சென்ற தென்மராட்சி இலக்கிய அணியினரது தமிழ்நீதி காட்டிய காட்சி களை முழுமையாகக் கண்டு களித்திட முடியாது போனது, சற்றுக் கவலையைத் தந்தது.

"அப்பப்பா .... போய் முடிஞ்சுது.. வாங்க பாடி ஆடுற ஆக்களப் பார்க்கப் போவம்...." பேர்த்தியின் குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்த நான், ஊர்திகளின் பின்னே செல்லும் மக்கள் கூட்டத்தோடு இணைந்து கலைவிழா நடக்க இருக்கும் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்ட பத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். என்கரம் பற்றி, பேர்த்தி உற்சாகத்தோடு பின்தொடர்ந்தாள்.

எங்களின் முன்னே நடந்துகொண் டிருந்தவர்களுள் ஒருவர் மற்றவரிடம் கூறி யது எனது காதுகளிலும் விழுந்தது.

"இப்ப தென்மராட்சிப் பிரதேசம் கிழக்கில் இருந்து விலகி, மேற்கோடு சேரத் தொடங்கிற்றுது என்ற கருத்து வலுப்பெறு வதற்கு இந்த முழுநிலாநாள் கலைவிழா வும் ஆதாரமாயிருக்குது."
**"நீங்க சொல்லுறது விளங்கயில்ல..."**

"இவ்வளவு காலமும் தென்மராட் சிப் பிரதேசத்தை வன்னி வலயங்களோட சேர்த்துத்தான் கல்விச் சமூகம் ஒப்பிட்டுக் கதைச்சது. ஆனா இப்ப ஒரு ரெண்டு வருசத்துக்குள்ள இப்பிரதேசத்தை வன்னி வலயங்களில் இருந்து விலக்கி, யாழ்ப் பாணத்துக்குள் இருக்கிற வலயங்களோட ஒப்பிட்டுக் கதைக்கிற அளவுக்கு ஒரு மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்குது."

"ஓஓஓ.... அதத்தான் நீங்க கிழக்கு, மேற்கெண்டு சொன்ன நீங்களோ..? நீங்க சொன்ன கருத்து உண்மைதான். அதிரடி யான ஒரு மாற்றம் நிகழ்ந்து கொண்டி ருக்குதுதான்...."

அவர்களது உரையாடல் எனக் குள்ளும் ஒருவித பெருமித உணர்வைத் தோற்றுவிக்க, எனது காலடிகள் சற்று வேகம் எடுத்தன. பேர்த்தியும் எனக்கு இணையாக ஓடிவரத் தொடங்கினாள்.

மீண்டும் தொடங்கும் மிடுக்கு

◆◆◆

# நெஞ்சம் நிறைந்து பெருமை கொள்ள வைத்த முழுநிலா நாள் கலைவிழா

## மீண்டும் ஒரு I. S. O. சான்றிதழ்

சந்திரா

> " நீண்ட பயணம் போக வேண்டும்.
> விழிகள் மெல்ல குருடாய் மாற,
> இடறும் கால்கள் வழியைத் தேடும்.
> நாளை காலை விடியக் கூடும்;
> கால்கள் விரைவாய்ப் போகவும் கூடும்.
> இருளை மீறி இரண்டு அடிதான்
> முன்னே போக முடியினும் போவேன்
> விடியலைக் காத்து நிற்குமா காலம்?
> ............................................................"
>
> பயணம் – சி. சிவசேகரம்

தென்மராட்சிக் கல்வி வலயத்தின், இலக்கு நோக்கிய நீண்டதும் அகன்றது மான பயண வரலாற்றில் அது 2014 ஆடித்திங்களில் மீண்டும் ஒரு பெருமை தரும் சான்றினைப் பதித்து விட்டிருக் கின்றது.

I.S.O. சான்றிதழைப் பெற்றதான திருப்தியில் தென்மராட்சி மண் திளைத்துக் கிடக்கின்றது. 2014 ஆடித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழா தந்த பூரிப்பில் புதைந்து கிடக்கின்றனர்; வளர்ந்தவர்களும் வளர்பவர்களும் மட்டுமல்ல, வளர்த்தவர்களும் தான். அரங்கு நிறைந்த சனத்திரள் மத்தியில் எட்டு நிகழ்ச்சிகள் மேடையேறிட்ட போதும், அத்தனை மணித்துளியும் அமைதியாய் இருந்தன மக்கள் கூட்டம்.

சாவகச்சேரி நகரின் மத்தியில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையின் முன்பாக இருந்து ஆரம்பமாகிய ஊர்திகளும், ஊர்வலமும், யா/ டிறிபேர்க்கல்லூரி முன்பாக வந்துசேர, அங்கே காத்து நின்ற விருந்தினர்கள், ஊர்வலத்துடன் இணைந்து கொள்கின்றனர். ஊர்வலமும் ஊர்திகளும் மெல்ல நகர்ந்து புகையிரத நிலைய வீதியில் நுழைந்தன.

அதிகாலையிலேயே மழைத்துளி களைத் தூவி, வானமகள் சாவகச்சேரி நகரிற்கு வாழ்த்துகள் கூறி, ஆசீர்வதித் துச் சென்றிருந்தாள். இருந்தும், காலை ஆறு மணி அளவில், சாவகச்சேரி நகரசபையினரினால் தண்ணீர் அடித்துக் கழுவி விடப்பட்ட வீதி, சுத்தமாக இருந்தது. நல்லவை நடக்கும்போது நாலுபேர் உதவிக்கு வருவது ஒன்றும் புதியதில்லைத்தானே?

வெறும் பாதங்களோடு தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவ மாணவியர் மயிலாட்டம், குயிலாட்டம், கரகாட்டம், வாள்நடனம், குதிரையாட்டம், இன்னியக்குழு, நடனக்குழு என வீதியில் தம் கலை நிகழ்ச்சிகளை வழங்கிவருவதற்கு கழுவி விடப்பட்ட வீதி மிகவும் உதவி நின்றது.

இருநூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் வீதியை நிறைத்து, காப்பெற் வீதியை கலையரங்காக்கி, காவியம் படைத்து களிப்பூட்டி நின்றனர். வீதி இரு மருங்கிலும் சனத்திரள். கலாசார உடை அணிந்து, அகம் நிறைந்த பெருமிதத்தால் முகம்மலர, பாலகர்களினதும், மாணவர் களினதும் ஆற்றுகைகளினால், ஆனந்தம் அடைந்தவர்களாக மக்கள் கூட்டம் மெல்ல நகர்ந்தது.

தென்மராட்சி மண்ணின் புகழ் பூத்த கவிஞர் முருகையன் தனது அகிலத்தின் மையங்கள் என்ற முத்திரைக் கவிதையில்,

**"............................தலை பல ஆயிரம்**
**சார்ந்தன ஒருங்கே**
**அகில மையங்கள் ஆயிரம் ஆயிரம்**
**அங்கே கூடி அமர்க்களப்பட்டன............."**

என்று குறிப்பிட்டிருந்ததை நினைவுக்குக் கொண்டுவந்தது சனத்திரள், ஊர்வலமும், ஊர்திகளும் தென்மராட்சிக் கலை மன்ற, கலாசார மண்டப வாயிலை அடைந்ததும், ஊர்திகள் தமக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வரிசையாய் இடம் பிடிக்க, ஊர்வலத்தில் கலை படைத்த மாணவர்கள் வீதி இரு மருங்கும் அணிவகுக்க, விருந்தி னர்கள் மெல்ல நகர்ந்தனர் மண்டபத்துள்.

எங்களது பண்பாட்டின் ஓர் அங்க மாக, நெற்றித்திலகமிட்டு விருந்தினரை வரவேற்று ஒதுக்கப்பட்டிருக்கும் ஆசனங்களை உரியவர்களுக்குக் காட்டி, அமரவைக்கும் பணியேற்றவர்கள் சுறுசுறுப்பாகத் தம் பணிகளில் மூழ்கினர். அமர்ந்தவர்களுக்கும் ஆனந்தம்: அமரவைத்தவர்களுக்கும் ஆனந்தம்.

நிகழ்ச்சித் தொகுப்பாளர் தம் கணீரென்ற குரலில் தமிழ்த்தாய்க்கு மாலை அணிவித்துப் பெருமை கொள்ள பிரதம விருந்தினர் அவர்களை அழைத் தார். பிரதம விருந்தினர் மேடையேற சபை எழுந்து மௌனமாய் நின்றது. புகைப் படக் கருவிகளது பளீர் வெளிச்சத்தில் பிரதம விருந்தினர் தமிழ்த்தாய்க்கு மாலை சூட்டினார்.

தமிழ்த்தாய்................ குறுகிய காலப்பகுதியில், தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளரது உதவி, மற்றும் பணிப்புக்கு இணங்கி க.பொ.த உயர்தர பரீட்சைக் கடமைகளுக்கு மத்தியிலும், எமது தமிழ்த்தாயினை அழகுற வடிவமைத்துத்தந்த தென்மராட்சி கல்வி வலய சித்திர பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் அவர்களுக்கு ஒரு பாராட் டினை வழங்கத்தான் வேண்டும்.

தமிழ்த்தாய்க்கு மாலை அணிவித்த பின்னர் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து, அகவணக்கத்தோடு கலைவிழா சம்பிரதாயபூர்வமாக ஆரம்ப மாயிற்று.

கைதடி கண்ணன் நாதஸ்வரக் குழுவினர் மங்கல இசையினால் மனதினை வருடிட, சபை கண்களை மூடி, தாள மிட்டு, மன அமைதியில் திளைத்தது. அந்த அமைதி உணர்வில் சபை கட்டுண்டு கிடக்க, யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. கையிலாயபிள்ளை அவர்கள் வந்தோரையும், வரவைத் தோரையும் வரவேற்று நின்றார்கள்.

வரவேற்பு உரையினைத் தொடர்ந்து, இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட பல்லியம் நிகழ்ச்சி மேடை ஏறியது. பக்கவாத்தியங்கள் முழங்க, சின்னஞ்சிறு சிட்டுக்களாய் வண்ண உடை அணிந்த மாணவ, மாணவியர் மேடையை அலங்கரித்தபடி, இசைத்த பல்லியம், கண்களை மட்டு மல்ல, மனதையும் கொள்ளையிட்டுச் சென்றது.

"என்னப்பனே..... என்னையனே; கந்தப்பனே, காருண்யனே....." என்ற பாடலை மாணவ, மாணவியர் தோற் கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி, மிடற்கருவிகளது துணைகொண்டு, பல இசைக்கருவிகளது கூட்டாக இசைத்தபோது, அப்பாடலின் இசை ஒலி அலைகள் காற்றில் தவழ்ந்து வந்து காதை நனைத்திட, தேனுண்ட சிறுவண்டாக மயங்கிக் கிடந்தது மனது. இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்களது இசைவேள்வியாக - கீழைத்தேய, மேலைத்தேய இசைக்கருவிகளது சங்கமமாக இனித்தது பல்லியம்.

தொடர்ந்து அறிவிப்பாளரது அறிமுகவார்த்தைகளுடன், முழுநிலா நாள் கலை விழாவின் தலைவர், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்கள், தமது உரையினை வழங்கினார்கள். இசையின் தூறல்களால் நனைந்து, உணர்வுகள் துறந்து, மேகச்சாரல்களினூடு மிதந்துகொண்டிருந்த சபையினை, அறிவுப் பசியாற்றிட நல்விருந்து படைத்த தாய் இருந்தது தலைமையுரை.

நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளையினுடைய "தமிழர் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு கலை உண்டு; அமிழ்தம் அவனுடைய மொழியாகும். அன்பே அவனுடைய வழியாகும்." என்று தொடங்கும் கவி வரிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட தலைமை உரை, எமது பாரம்பரியங்களையும், பண்பாட்டுக் கோலங்களையும் பற்றி, அதனது தோற்றம் வளர்ச்சி பற்றி, அதன் பெருமைபற்றி, உணர்வுகளைக் கிளறி விடும் கருத்துகளை, ஆணித்தரமாகவும், ஆதாரபூர்வமாகவும் தந்து நின்றது. சபையினை மௌனமாக்கி, தனது குரலொலி மட்டுமே மண்டபத்துள்ளும், வெளியேயும் ஒலிக்கும் வகையில் அறிவையும் உணர்வையும் ஒருங்கே தட்டி எழுப்பிடும் வகையில் சென்றுகொண்டிருந்த தலைமை உரை, ஒரு கட்டத்தில் தென்மராட்சி மண்ணின் புகழ்பூத்த கலைஞர்களைப் பற்றியும் நினைவுபடுத்தி நின்றது.

எமது கலைகளை நாம் ஏன் போற்றவேண்டும்? பேணவேண்டும்?, என்ற வினாக்களுக்கு எளிதான மொழியில்

விளக்கம் தந்து நின்றார். விழாவின் தலைவர் அவர்கள். கலைகள் அனுப விக்கும் போது மட்டுமல்ல, அவைபற்றி அறிந்து கொள்ளும் போது கூட ஒருவித சிலிர்ப்பு ஏற்படுவது இயல்பானதே என்று தலைமையுரை தந்த விளக்கம் சபையினை சிந்திக்க வைத்தது என்பது சபையினரது உடல் மொழிகளில் இருந்து உணர முடிந்தது. தலைவரது உரை சபையினரின் அறிவுப் பசிக்கு தேனொழுகும் லட்டினை தந்தபடி நிறைவு பெற்றது.

தலைமையுரை நிறைவுபெற யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்கள் மேடையேறி மெல்லிசைகானமிசைத்தனர். அல்ல, அல்ல, மெல்லிசை கானம் இழைத்தனர். பண்பாட்டு உடைகளுடன் பத்து மாணவர்கள், மேடையை அலங்கரித்து நின்றபடி இசைத்த பாடலின் வரிகள், பல்வேறு முத்தான கருத்துகளை மனதில் பதித்துச் சென்றன. "......... அன்புள்ளம் கொண்டவராய் வாழ்வோம்: பிறர் துன்பங்களுக்கு உதவுவோம்....." என அமைந்த வரிகள் மனித விழுமியங்களின் அத்திபாரத்தினை வலியுறுத்தி நின்றன. மாணவர்களது குரலிசைக்கும், அவர்களது முகபாவத்திற்கும் தொடர்பில்லாததான ஒரு நிலையில் நின்றபடி, அம்மாணவர்கள் பாடியதான ஒரு வெளிப்பாடு என்னைப் போன்ற பலரையும் பாதித்தது என்பதை இங்கு நான் குறிப்பிடத்தான் வேண்டும். கருத்துகளுக்கு ஏற்ற உணர்வுகளை உடல் மொழிகளால் வெளிக்காட்டும் திறனை எமது மாணவர்கள் இன்னும் இன்னும் வளர்த்துக்கொள்ள வேண்டும். வளர்த்துக் கொள்ள வழிகாட்டப்படல் வேண்டும்.

தொடர்ந்து மேடையை அலங்கரித்த படி காட்சி தந்தனர். யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி, யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, யா/ மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி, மாணவியர், "ஹஸ்தா பினாய பியூசன்" நடனத்தை அவர்கள் வழங்க, சபையினரது கண்கள் அகல விரிந்து, அந்த அற்புதக் காட்சிகளை அப்படியே உள்ளீர்த்துக் கொள்ள முயன்றது. பதினாறுக்கும் மேற்பட்ட, மாணவிகள் இணைந்து, மேலைத்தேய கீழைத்தேய கலைகளின் சங்கமமாக, கைக்குறி முத்திரைகள் மூலம் நடன அசைவுகளின் ஊடாக, ஒரு செய்தியினை வழங்கி நிற்க, நடன மாந்தரின் அபிநயத்தை இரசிப்பதா? அல்லது இணைந்து வரும் இசையினை இரசிப்பதா? என்ற ஒரு தெரிவுக் குழப்பத்தில் சபை தன்னை மறந்து தவித்தது. இசை கேட்டால் புவி அசைந்தாடும் என்பார்கள். ஆனால் இங்கே இசையும் அசைவும் இணைந்து விருந்தளித்த நிலையில், மந்திரவாதியால் கட்டுண்ட மாந்தராய் மூச்சுவிடக் கூட மறந்தவர்களாக சபையினர் கதிரையில் அமரவைக்கப்பட்டிருந்த காட்சி ஒரு அதிசயம் தான். எட்டு நிமிடங்கள், முழுதாக எட்டு நிமிடங்கள் சபை மூச்சுவிட மறந்த நிமிடங்களாக கழிய, அடுத்த நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பாளரது குரல் கேட்டு உணர்வு பெற்றது சபை.

மாற்றுவலுபடைத்த, நவீல்ட் பாடசாலையைச் சேர்ந்த ஏழு மாணவர்கள்

மேடையேறி நின்றனர். மூன்று மாணவிகளும், நான்கு மாணவிகளுமாக இணைந்திருந்த அந்தக் குழுவினர், இறுவட்டில் ஏற்றி வந்த பாடல் ஒன்றை ஒலிக்கவிட்டு, தம் ஆற்றலை நடன அசைவுகள் ஊடாக வெளிப்படுத்தினர். "காற்றிலே பாட்டு வரும், கனவுகள் சேர்ந்துவரும்......" எனத் தொடங்கிய அந்தப்பாடல் - தத்துவ வரிகளடங்கிய சினிமாப்பாடல், மெல்லிய ஒலியாக சபையினை நிறைக்க, பாடல் வரிகளுக்கு ஏற்ப அந்த மாணவர்கள் தம் அசைவினை வெளிக்காட்டி நின்ற போது, ''இவர்களா விஷேட தேவைக்குரிய மாணவர்கள்?'' என்ற வினா மனதில் பெரிதாக எழுந்து நின்றது. "வாழ்க்கை ஒரு போர்க்களம், நம்பிக்கை ஆயுதம்....." என்றொலித்த பாடல் வரிகளும், இணைந்த அவர்களது அபிநயமும் விடையாக இருக்க, ஒரு மெல்லிய பெருமூச்சு என்னிடமிருந்து மட்டுமல்ல, பலரிடம் இருந்தும் சத்தமாக வெளிப்பட்டது, பாடல் சத்தத்தையும் மீறி தெளிவாக எனக்குக் கேட்டது.

"வாழ்க்கைப் பயணத்தில் இறைவன் ஒரு பாதையை அடைத்தால் இன்னுமொரு பாதையை நிச்சயமாக அகலத் திறந்திருப்பான்''. சிறுவயதில் எனது தந்தையார் எனக்குக் கூறும் அறிவுரை வரிகள் இங்கேயும் உண்மையாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட ஒரு உணர்வில் நான் மெய்ம்மறந்திருந்தேன். தொடர்ந்து இடம்பெற்ற சிறப்பு விருந்தினர் உரையில், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு. சி. சத்தியசீலன் அவர்களது கருத்து புதியதாக இருந்தது எனக்கு. "ஆடிப் பௌர்ணமி ஆசானுக்கு உரியநாள்" என அவர் கூறியது இதற்கு முன்னர் நான் அறிந்திராத ஒன்று பெருமை மிகு எமது பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்ப, எமது பிள்ளைகள் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் எமது சமூகம் மேலும் மேலும் மேம்பாடடைய முடியும் என்ற கருத்துடன் தனது சிறப்புரையினை நிறைவு செய்தார் சிறப்பு விருந்தினர் அவர்கள்.

இதுவரை நடந்த கலைநிகழ்ச்சிகளினால் அவற்றின் தாக்கத்தினைத் தம்மை மறந்து இருந்தது சபை. நிகழ்ச்சித் தொகுப்பாளரது குரல் ஒலியில் சுய உணர்வுக்கு வந்த நான் அடுத்தது என்ன என்பதை அறியும் ஆவலுடன் செவியினைக் கூர்மையாக்கினேன். கானாப் பாடல்தர தென்மராட்சி வலய பாடசாலைகளைச் சேர்ந்த இசையாசிரியர்கள் மேடையேறினர்.

நாட்டார் கலைப்படைப்பாக, உழைப்பாளிகளது உடல் அசதிக்கு மருந்திடுவதாக , எளிய தமிழ் வரிகளால் படைக்கப்படும் ஒரு உயர்வான இலக்கியமாக அமைந்திருப்பதே கானாப்பாடல்களாகும். "வாளமீனுக்கும் விலங்கு மீனுக்கும் கல்யாணம். கானாப்பொழி மீன்களெல்லாம் ஊர்க்கோலம்" என்ற பாடலைத் தந்த தென் இந்திய தேவாவையும் திண்டிவனம் குப்புசாமியையுமே பெரிதும் நினைவில் வைத்திருக்கும் எமக்கு தென்மராட்சி வலய இசையாசிரியர்களும் தம் குரலினிமையால் கானாப்பாடல் இனித்தது. இவ்வளவு காலமும் இந்தக்

கவிவளம், இந்தக் குரல் வளம், இந்த இசைவளம் எங்கே இருந்தது? ஆம் வாய்ப்புகள் கிடைக்கும் போதுதானே வளங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

"அதிஸ்ட்டசாலி நாங்கள் தான், யார் என்ன சொன்னாலும் அதிஸ்டசாலி நாங்கள் தான்......" கானாப்பாடல் வரிகள் மேடையில் ஒலித்தது. ஆணும் பெண்ணும் இணைந்த குரலில் அணிசெய் இசைக் கருவிகளது இசைத்துறையோடு பாடல் வரிகள் காதில் பாய்ந்தது. ஆம் நாங்கள் அதிஸ்டசாலிகள் தான் யார் என்ன சொன்னாலும், யார் எதனைத் தொடுத்தாலும் தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு இன்று கிடைத்திருக்கும் தலைமைத்துவம் இருக்கின்றதே. அது எமது பிரதேசத்தைச் சகல பாதைகளிலும் உயர்வுகாண அழைத்துச் செல்லும் என்பது சாத்தியமானதே. அதனால் நாங்கள் அதிஸ்ட்டசாலிகள் தான். எனது மனது இப்படி எண்ணிக் கொள்ள எனது தூண்டுதல் இன்றியே அதனைத் தெரிந்து கொள்ளாத நிலையிலே எனது தலை மேலும் கீழும் அசைந்து கொள்கிறது.

**"விடிய விடிய கூத்துப்பார்த்து குதூகலித்தோமே,**

**அழிந்து போகா தெங்கள் கலையை கட்டிக்காத்தோமே...."**

மேடையில் ஒலித்த கானாப் பாடலின் வரிகள் எனது சிந்தனையைத் தடுத்து, சபை நிகழ்ச்சிகளுக்குள் கொண்டு வருகின்றது. மேடைப் பாடகர்களோடு இணைந்து நானும் மெதுவாக பாடிக் கொள்கின்றேன். அதிஸ்டசாலி நாங்கள் தான்...... யார் என்ன சொன்னாலும் அதிஸ்டசாலி நாங்கள் தான்.....

ஒருவித பெருமித உணர்வுக்குள் மூழ்கியிருந்த சபையினை அன்பின் ஐந்திணை நடன நாடகம் கிளர்ச்சியடைய வைத்தது. யா/ மிருசுவில் அ.த.க. பாடசாலை, யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், யா/ கச்சாய் அ.த.க. பாடசாலை, யா/ வரணி மத்திய கல்லூரி, யா/ மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த முப்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைந்து வழங்கிய நடன நாடகம் "அன்பின் ஐந்திணை, " பண்டைய தமிழ் இலக்கியங்கள் கூறும் ஐவகை நிலங்களையும், அந்த நிலங்களுக்கே உரிய தனித்துவம்மிக்க ஒழுக்கங்களையும், கதையாக - நாடகமாக நடனவடிவில் அமைத்துத் தந்தமை சிறப்பாக இருந்தது இது பலரதும் கூட்டுறவான உழைப்பிற்குச் சான்றாக இருந்ததைக் குறிப்பிடத்தான் வேண்டும். இந்த நடன நாடகத்தின் பிரதான கதாபாத்திரங்களான, நாயகன், நாயகி, தோழி என்போரின் அபிநயங்கள், முகபாபங்கள், உடல் மொழி வெளிப்பாடுகள்..... அப்பப்பா, அனைத்துமே பாராட்ட வார்த்தை தேட வேண்டிய சிறப்புகள். இவர்களாலும் நாளை தென்மராட்சி மண் புகழ்பெறும் என்பது எனது நம்பிக்கை, நம்பிக்கைகள் தானே மானிட வாழ்வுப் பயணத்தை முன்னெடுத்துச் செல்கின்றது.

தொடர்ந்து மேடையை அலங்கரித்த ''பெண்ணின் பெருமை'' கூறும் தென்மராட்சி வலய நடன ஆசிரியை களது நாட்டிய நாடகம், ஒரு பெண்ணின் உழைப்பு குடும்பத்தின் மீதுள்ள பொறுப்பு, அதற்காக அவள் புரியும் தியாகங்கள், அள்ளிக் கொட்டும் பாசங்கள், தேவையான போது அநீதியை எதிர்க்க வெளிப்படுத்தும் வீரம், இவற்றுக்கும் அப்பால் அவளது காதல் ஏக்கங்களைக் கூட பாடல் வரிகளோடு ஆடல், அபிநயம் சேர்ந்து தென்மராட்சி வலய நடன ஆசிரியர்கள் மேடையில் காட்சிப்படுத்தினர். பல்வேறு உணர்வு களையும் பாபங்களோடு இணைந்து உடல் மொழிகளால் உரைத்து நின்றது சபையின் மனதினைத் தாலாட்டியதைப் போல இருந்தது.

மேடையேறிய அனைத்து நிகழ்ச்சி கழும் பாராட்டும் வகையில், மெச்சும் வகையில் அமைந்திருந்தாலும் மாணவர் கள் படைத்த அன்பின் ஐந்திணை நடன, நாடகம் அதற்குப் பின் மேடையேறிய நிகழ்ச்சிகளை உள்வாங்கவிடாது என்னைக் கட்டிப் போட்டு விட்டதால் ஒரு உணர்வுடன் பஞ்சுப் பொதி போல காற்றிலே மிதந்து கொண்டிருந்த என்னை, வலய கீதத்துக்காக சபை எழுந்த சத்தம் தான் மீண்டும் மண்டபத்துக்கு அழைத்து வந்தது. மெல்ல நானும் எழுந்திட, சபையினர் சத்தமில்லாது அரங்கைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

◆◆◆


## கண்களுக்கு விருந்தளித்த கலை நிகழ்ச்சிகள்






















# முழுநிலா நாள் கலைவிழா இணைப்பாளரின் நன்றியுரை




தென்னவள் ஆக்கத்தில் பங்கெடுத்த அனைத்து ஆக்க கர்த்தாக்களுக்கும், ஆசியுரை வழங்கிய பெரியோர்களுக்கும், நிதிக்குவை நல்கியோர்களுக்கும், தென்னவள் வெளியீட்டுக் குழுவினருக்கும், வெளியீட்டுரை மதிப்பீட்டுரை வழங்கிய அறிஞர்களுக்கும், வங்கிகள், வர்த்தகர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றி. தென்னவளின் மிடுக்கான வருகைக்கு உருத்தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கு மேலான நன்றி.

தென்னவள் வருகைக் குழு

























BOC ABHIMANA உங்கள் ஓய்வூதிய வாழ்க்கையினை நம்பிக்கையுடனும் முகத்தில் புன்னகையுடனும் வாழ வழிவகுக்கும்.



"கனவுகளுக்கு முற்றுப்புள்ளி இனி இல்லை" உங்கள் கனவை நனவாக்க?

BOC Personal Loans வாகனம் வாங்க பணம் போதாதா, வீட்டிற்கு புதிதாக பொருட்கள் வாங்க, திருமணத்திற்கு சிறப்பாக நடாத்த, வீட்டை திருத்துவதற்கு, இந்த அனைத்து விதமான கனவுகளையும் நனவாக்க....

- குறைந்த வட்டி
- குறைந்த சேவைக் கட்டணம்
- இலகுவான தவணைக் கொடுப்பனவு
- ஆகக் கூடிய கடன் தொகை
- சிறந்த சேவை

இன்றே நாடுங்கள் BOC வங்கி கிளைக்கு.

# KAJAMUGAN
# HARDWARE

# கஜமுகன் ஹாட்வெயர்

கட்டிடப் பொருட்கள், லங்கா கம்பி,
பைப் வகைகள், சீமெந்து
மெக்சன் மெஸ் கோழி வலைகள்,
பெயின்ற் வகைகள் மற்றும்
Pepsi Soda & Accessories,


அனைத்தையும் பெற்றுக் கொள்ளவேண்டிய
ஒரே இடம்..

Tel : 021 222 2833,
021 222 7144,
Fax: 021 222 2368

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Email: kajamuganhw@hotmail.com




தென்னவள்
சிறக்க
வாழ்த்துகிறோம்

தென்னவள் சிறக்க...

**NSB**
National Savings Bank
Chavakachcheri



Low Intrest

- Housing Loan
- Personal Loan
- Auto Loan
- Gold Loan






தென்னவளின் ஒளி பிரகாசிக்க
வாழ்த்தும்

பாடசாலை மாணவர்களுக்கான
கற்றல் உபகரணங்கள் மற்றும்
அன்பளிப்புப் பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள் என்பவற்றையும்,
கணினி வடிவமைப்பு வேலைகள்
நூலுருவாக்க வேலைகள்
என்பவற்றையும், சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

கஜானன் பன்முக சேவை

அல்லாரை வீதி, மீசாலை.


தென்னவள் சிறக்க வாழ்த்தும்
சகல விதமான கட்டட
வேலைகளுக்குமான
பொருட்களையும்
தரமான நிலையில்
குறைவான விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
வணிக நிறுவனம்
விமலா
இரும்பகம்
HNB வங்கிக்கு அருகில்
A9 வீதி,
சாவகச்சேரி

தென்னவள் சிறக்க...

# கே.எஸ். பொன்னம்பலம்
# எரிபொருள் நிரப்பு நிலையம்

கைதடி



தென்மராட்சியின் மாண்பையும்
கலை பண்பாடுகளின்
மரபுரிமையயும் எம் சந்ததிக்கு எழுத்துருவில்
பரிமாற்றம் செய்யும் சஞ்சிகையான
தென்னவள் எனும் புது மலர் பொழிவுற்றுத் திகழ
வாழ்த்தும் வர்த்தகர்

த.ஜெயருபன்
தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகாமை
A9 வீதி. சாவகச்சேரி.


VANI TEX
வாணி ரெக்ஸ்
Special in Wedding Sarees &
Shalwar kasteez
இல. 81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
No.81, Grand Bazaar,
Jaffna.
T.P: 021 222 5578
Fax: 021 222 9286


தென்னவள் சிறக்க...
THARANI
BUILDING ENTERPRISE
All building works undertaken
shop Fitting / Extensions / Ground Works
Domestic Repair / Landscaping / Electricals & Plumping
FOR MORE INFORMATION
Mr. S.Ramachandran
Proprietor
Sivan Kovil Road, Madduvil North, Chavakachcheri
Mobil No: 077 311 4314



உலக
சிறுவர் தினத்தை
கொண்டாடுவோம்
சேமிக்கும் அளவிற்கு
மகிழ்ச்சி பொங்கும்
பரிசுகள் அனைவருக்கும்
சேமிப்பு அதிகரிக்கும் அளவிற்கு பெறுமதியான
பரிசுகளும் மேலும் அதிகரிக்கும்
ஒக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படும் உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு மக்கள் வங்கியின் 'இசுறு உதான' மற்றும் 'சிசு உதான' சிறுவர் சேமிப்பு கணக்குகளில் பணம் சேமிக்கும் சகல சிறுவர் சிறுமிகளுக்கும் பெறுமதியான பரிசுகள்.
வாருங்கள், உங்கள் பரிசுகளை இன்றே பெற்றிடுங்கள்
ஒக்டோபர் 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை
சகல சேமிப்புகளுக்கும் பரிசுகள்
*நிபந்தனைகள் உண்டு
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
AA-Brand Finance Rating, AA+ Fitch Rating
0112 481 676
0112 481 677
0112 481 532
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
www.peoplesbank.lk



சங்கர்
கொன்ரக்ரர்ஸ்
சாவகச்சேரி


தென்னவள் சிறக்க
வாழ்த்துகிறோம்...
VISA
Attractive interest for fixed deposits!
Three Months
12.5%
A.E.R. 13.10%**
Six Months
12.5%
A.E.R. 12.89%**
One Year
13%
A.E.R. 13.00%**
With a heritage of trust of over 120 years, Hatton National Bank, the premier private sector commercial bank, now offers high interest rates for your fixed deposits.
*Conditions Apply **Annual Effective Rate
Contact 2661959 / 2661962 or your nearest HNB Customer Centre for details.
www.hnb.net
Fitch Rating AA-(lka)
HNB
HNB Your Partner in Progress


NOBLE
PRINTERS
All Kind Of Printing Works
தென்னவள் சிறக்க
வாழ்த்துகின்றோம்.


யசோ
கொன்ரக்ரர்ஸ்
கரவெட்டி

# தென்னவள் சிறக்க வாழ்த்துகிறோம்...



SEYLAN
BANK PLC
The bank with a heart

Chavakachcheri




தென்னவள் சிறக்க வாழ்த்துகிறோம்...

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

பதிவு இலக்கம்
J/1597

பதிவுத் திகதி
11.03.1972

அங்கத்தவர் நலத்திட்டம்
சமூகம்சார் சேவைகள்
முன்பள்ளிச் சேவை
மகளிர் மேம்பாட்டுத் திட்டம்
வீடமைப்புத் திட்டம்

பனைசார் உற்பத்திகள்
கிராமிய வங்கிச் சேவை
வாடகைச் சேவை
தொழிநுட்ப சேவை

டச்சு வீதி, சாவகச்சேரி.

021 321 3572
021 227 0086

தென்னவள் சிறக்க வாழ்த்துகின்றோம்...

# Hangai Printers

# கங்கை பிரிண்டேர்ஸ்

General & Commercial Offset printing
Computer Designing
Screen Printing

743, K.K.S Road, Jaffna.
(Front of Jaffna Hindu College)
E-Mail: hangaiprinters@gmail.com
T.P: 077 618 4567

## RVT RUPA VERSATILE TRADES

Glaxo Smithkline Ltd.
RECKITT BENCKISER (LANKA) LTD.
A.B. MAURI LANKA LTD.
CEYLON BISCUITS (LANKA) LTD.

Distributors for:-

Colombo - Office:
176A, Central Road,
Colombo - 12.

Tel : 011 5-830217
011 5-830219
Fax: 011 2392412

தென்னவள் சிறப்புற வாழ்த்துகின்றோம்

No: 104A Stanley Road,
Jaffna.
Tel : 021-2228330
Fax: 021-2227036

" நவ நாகரிக ஆடை தேர்வுக்கும் நிதான விலைக்கும் "

## அருண் புடைவை மாளிகை



தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையின் பௌர்ணமி விழா மலர் தென்னவள் சிறப்புற வாழ்த்துபவர்கள்

அருண் புடவையகம்,
இல 03, கண்டி வீதி,
கொடிகாமம்.
தொ.பே: 021 790 0402

தென்னவள் சிறக்க வாழ்த்துகிறோம்

# சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## எமது சேவைகள்

நுகர்ச்சி சேவை
எரிபொருள் நிலையம்
கிராமிய வங்கி
வெஸ்ரன் யூனியன் சேவை
கோப் சிற்றி
சேவிஸ் நிலையம்
போக்குவரத்துச் சேவை
வாடகை கதிரை சேவை
தகவல் தொழிநுட்ப கணினிபயிற்சி

" தென்மராட்சிக் கல்வி வலயம் கல்விச் சமூகத்திற்கு ஆற்றி வரும் மகத்தான சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் வலயத்தின் கல்விப்பணிகள் மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்"

கூட்டுறவே நாட்டுயர்வு

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்,
கண்டி வீதி, சாவகச்சேரி.
தொ.பே: 021 227 0830

தென்னவள் சிறக்க வாழ்த்துகிறோம்

# கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## எமது சேவைகள்

நுகர்ச்சி சேவை
எரிபொருள் நிலையம்
கிராமிய வங்கி
வெஸ்ரன் யூனியன் சேவை
கோப் சிற்றி
சேவிஸ் நிலையம்
போக்குவரத்துச் சேவை
வாடகை கதிரை சேவை
தகவல் தொழிநுட்ப கணினிபயிற்சி

" தென்மராட்சிக் கல்வி வலயம் கல்விச் சமூகத்திற்கு ஆற்றி வரும் மகத்தான சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் வலயத்தின் கல்விப்பணிகள் மேலும் சிறப்புற வாழ்ததுகிறோம் "

கூட்டுறவே நாட்டுயர்வு

கைதடி ப.நோ.கூ.சங்கம்,
கைதடி.


தென்னவள் சிறக்க வாழ்த்துகின்றோம்..
5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை
வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்கள்
சகிதம்
மிக உயர்ந்த வட்டி
Arunalu
Children's Savings Account
COMMERCIAL BANK

தென்னவளின் புகழ் தேசமெங்கும்
பரவ வாழ்த்தும்

தரம் வாய்ந்த வைத்தியர் குழு மூலம்
சிறியவர் முதல் பெரியவர் வரைக்குமான
சகல விதமான நோய்களுக்குமான சிகிச்சை
மற்றும் ஆலோசனை, சிறுநீர் இரத்தப்பரிசோதனை
சேவைகளையும் , மருந்துவகைகளையும்
பெற்றுகொள்ள

அம்பிகா மருந்தகம்




A9 வீதி
சாவகச்சேரி



தென்மராட்சிக் கல்விவலய முழுநிலா
நிகழ்வின் மலர் “ தென்னவள் ” சிறப்புடன்
வெளிவர வாழ்த்துகின்றோம்.

வணிகர் மன்றம்
கொடிகாமம்


Harikanan
PRINTERS OF THE NORTH
Why us??? Lowest Price | Best Quality | Fast Delivery | 100% Satisfaction
W www.harikanan.com
E print@harikanan.com
F harikananprinters
S harikanan
THINK
SMART
#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
T +94 21 222 2717|8